திருக்கோயில்

என் கடன் பணிசெய்து கிடப்பதே

OFFICE OF THE STATE EDITOR
4/ 64/73
10 JAN 1973
GAZETTEER UNIT, MADRAS

178



மாலை 15] பரிதாபி — மார்கழி, தை — ஜனவரி, 1973 [மணி 4

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அர
அறநிலைய ஆட்சித்துறை வெ



சென்னைத் திருமயிலைக் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் நிர்வாக அதிகாரிகள் மாநாடு நடைபெற்றபோது, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. கண்ணப்பர் அவர்கள் உரைநிகழ்த்துதல். தவத்திரு குன்றக்குடி அடிகளார் M.L.C, மேலவைத் துணைத்தலைவர் "சிலம்புச்செல்வர்" திரு. ம. பொ. சிவஞானம், M. L. C., அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I. A. S. ஆகிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பொருளடக்கம்

1. திருமந்திரமும், சிவஞான சித்தியாரும்
2. மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும்
3. ஞானநெறி
4. வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறி
5. ஐயனார்
6. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
7. இசையும் இறைவனும்
8. உறக்கம் தவிர்த்த உத்தமி
9. சீவக சிந்தாமணி
10. அடைக்கலம்
11. சுற்றறிக்கை
12. திருவேங்கடத்தின் சீர்மை
13. நம்மாழ்வார் பக்திநலம்
14. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி
15. திருவாய்மொழியும் திருமாலும்
16. தேனூறு செஞ்சொல்
17. அறநிலையத் துறைச் சுற்றறிக்கைகள்
18. சுற்றறிக்கை
19. மதிப்புரைகள்
20. பெரிய புராண நுணுக்கங்கள்
21. அறத்திறன் அழியச் செய்யான்
22. மதிப்புரை
23. திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு
24. ஐந்தெழுத்துப் படிகள்
25. இலக்கியத்திலும், சிற்பத்திலும் அணிகள்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.—ஆசிரியர்.



மாலை 15] பரிதாபி — மார்கழி, தை — ஜனவரி 1973 [மணி 4

திருமந்திரமும், சிவஞான சித்தியாரும்

[ந.ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை:

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின் கண் உள்ள, தலைசிறந்த நூல்களின் வரிசையில் முன்னணியில் வைத்துப் போற்றத்தக்க முதன்மை மிக்க நூல்களுள், திருமூலர் அருளிய திருமந்திரமும், அருள்நந்தி சிவாசாரியர் அருளிய சிவஞான சித்தியாரும், தனிப்பெருஞ் சிறப்புடையனவாகும். சைவ சித்தாந்த தத்துவச் செம்பொருள் நலங்களைச் சிறந்த முறையில், செவ்விதின் உணர்த்தும் நிலையில், திருமந்திரமும், சிவஞான சித்தியாரும் தந்நிகரற்று விளங்குகின்றன.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்றாகத் திருமந்திரம் திகழ்கின்றது; சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகச் சிவஞான சித்தியார் மிளிர்கின்றது. "சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே" என்று, திருமூலர் சிவாகமங்களின் பொருளையே தமது திருமந்திர நூலில் விளக்குவதாகக் கூறுகின்றார். இங்ஙனமே அருள்நந்திசிவாசாரியரும், "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என்று, சிவாகமங்களின் பொருளையே, தாமும் தமது சிவஞான சித்தியாரில் விளக்குவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்விரு நூல்களுமே தமக்கெனச் சிறந்த ஒரு தனி நடையினையுடையனவாய் அமைந்திருத்தல், பெரிதும் வியந்து போற்றத்தக்கதாக உள்ளது.

திருமந்திரம்:

இம்மை மறுமைக்குரிய மறைபொருள் நுட்பங்கள் அனைத்தையும் ஒருங்கெடுத்துத் திரட்டித் தெளித்துரைப்பதில் திருமந்திரம் ஒப்புயர்வற்று இலங்குகின்றது. ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாய் உள்ள திருமந்திர நூல், மறைமுடிவான மந்திரங்களையும், அவற்றை உருவேற்றிக்கணிக்கும் முறைகளையும், அவற்றை அமைக்கும் சக்கரங்களையும், அம்மந்திரங்களுக்கும் இயந்திரங்களுக்கும் உரிய மாபெரும் தெய்வங்களையும், அத்தெய்வங்களெல்லாம் முழுமுதற் கடவுளான சிவபரம்பொருளின் ஆணைவழி நின்று தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகளையும், தவ ஒழுக்கத்தின் பாகுபாடுகளையும், அவற்றை மேற்கொண்டு கடைப்பிடித்து ஒழுகும் வழி வகைகளையும், அழிவிலாப் பேரின்பப்பெரும்

JL
இ2ம211,வ59TK

இறையருள் இன்ப அனுபவ நலனையும் எல்லாம், ஒருங்கு தொகுத்து விளக்குகின்றது.

சிவஞான சித்தியார்:

இவ்வாறே சிவஞான சித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவ ஞானநூலும், "இறைவனையும், இறைவனுல் இயம்பும் நூலும், ஈண்டு அளவும் பொருளியல்பும், வேண்டும் செய்தி முறைமைகளும், பெத்தமொடு முத்தியெல்லாம், பல சமயத்துறை பலவும் கடாவிடையால் சொல்லிப் போக்கித், தர்க்கமொடு உத்தரங்களினுல் சமயம் சாதித்துத் துகள்தீர" விளக்குகின்றது. "சிவத்துக்குமேல் இல்லை தெய்வம், சிவஞானசித்திக்கு மேல் இல்லை நூல்" என்பது பழமொழி.

148705

தமிழில் இலக்கணத் துறையில் தொல்காப்பியமும், நீதிநூல் துறையில் திருக்குறளும், காப்பியத்துறையில் சிலப்பதிகாரமும், பக்தித் துறையில் திருவாசகமும், வரலாற்றுத்துறையில் பெரியபுராணமும், கவிதைச் சுவைத்துறையில் கம்பராமாயணமும் போல, யோக ஞான அனுபவத்துறையில் திருமந்திரமும், தத்துவ ஞானத்துறையில் சிவஞானசித்தியாரும் ஒப்புயர்வற்றுத் தலைசிறந்து திகழ்கின்றன எனச் சுருங்கக் கூறுதல் பொருந்தும். இத்தகைய சிறப்புமிக்க இவ்விருபெரு நூல்களையும் பல வகைகளில் நாம் ஆராய்ந்து பயன்கொள்ளுதல் கூடும். அந்நெறியில் இங்குச் சிவஞான சித்தியார், திருமந்திர நூலினை அடியொற்றி, ஆங்காங்கே பெரிதும் தழுவி அமைந்திருக்கும் தன்மையினை, இயன்ற அளவு ஒரு சிறிது சுருக்கமாகக் காண்போம்.

(1) நூற்றொடக்கம்:

சிவஞானசித்தியார் இயற்றியருளிய அருள்நந்தி சிவாசாரியர், திருமூலர் அருளிய திருமந்திரத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார் எனத் தெரிகின்றது. திருமூலர் தமது திருமந்திர நூலைத் தொடங்குங்கால், "முழுமுதல் வகுகிய இறைவன் ஒருவனே; அவன் அம்மை அப்பர் என இரண்டாக விளங்குவான்; அவன் அவள் அது (குரு லிங்கம் சங்கமம் — அருவம் உருவம் அருவுருவம்), என்னும் மூன்று நிலைகளில் நிற்பான்; சீலம் நோன்பு செறிவு அறிவு (சரியை கிரியை யோகம் ஞானம்) என்னும் நான்கையும் உணர்த்தினுன்; பொறிவாயில் ஐந்தவித்தான்; பதம் எழுத்து மந்திரம் கலை தத்துவம் புவனம் என்னும் ஆறு அத்துவாக்களாகவும் விரிந்து பரந்துள்ளான்; ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்னும் ஏழு அண்டங்களுக்கும் அப்பாற்பட்டு நின்றான்; நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு நிலா பகலோன் புலனுய மைந்தன் என்னும் எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்" என்று, எண்அலங்காரம் என்னும் அணி அமையத் தம் நூலைத் தொடங்குகின்றார்.

ஒன்றவன் தானே; இரண்டவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்குணர்ந்தான், ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழ் உம்பர்ச்
சென்றனன்; தான்இருந் தான்உணர்ந்து எட்டே.

இதனை அடியொற்றி ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியரும், தமது நூலையும் எண்ணலங்காரம் பொருந்தத் தொடங்குகின்றார். "ஒரு தந்தத்தையும், பிரணவம் போலும் இரண்டு செவிகளையும், இச்சை ஞானம் கிரியை என்னும் மும்மலங்களையும், தொங்குகின்ற (நால்) வாயினையும், ஐந்து திருக்கைகளையும் உடையவனும், ஆறு (கங்கை) அணிந்த சடையையுடைய சிவபெருமான் அளித்தருளிய யானைமுகத்தையுடைய விநாயகப் பெருமானின் திருவடிகள், அன்புடன் வணங்கி இரவு பகல் தியானித்துத் தொழுபவர்களின் மனமயக்கத்தைப் போக்கும்; அயன் திருமால் முதலியோர் வாழ்வும் ஒருபொருளன்று என வெறுப்பச் சிவமாம் தன்மைப் பெருவாழ்வைத் தரும்" என்னும் கருத்தமையவும், எண் அலங்காரம் பொருந்தவும், பின்வருமாறு தமது நூலைத் தொடங்குகின்றார்.

"ஒருகோட்டன் இருசெவியன்; மும்மதத்தன்;
நால்வாய் ஐங்கரத்தன்; ஆறு
தருகோட்டு அம்பிறை இதழித்தாழ் சடையான்
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள் . ."

(2) நூற்பாயிரம்:

சிவஞான சித்தியாரில் பாயிரம் அமைந்துள்ள தன்மையே, ஒரு தனிச்சிறப்புடன் விளங்குகிறது. தாம் அந்த நூலை யாருக்காக இயற்றினார் என்பதை ஆசிரியர் விளக்குகின்றார்.

N73. 15-4 (178)

"சிவஞான சித்தியார் என்னும் இந்த ஞான நூலை, அறிவு நலம் நிறைந்தவர்களுக்காக யான் இயற்றவில்லை. ஏனெனில், அவர்கள் அறிய வேண்டுவனவெல்லாம் அறிந்தவர்கள். அவர்கள் புதியதாக அறிந்துகொள்ள வேண்டுவது ஏதும் இல்லை. அறிவு நலம் சிறிதும் இல்லாத மூடர்களுக்காகவும் இந்நூல் இயற்றப்படவில்லை. ஏனெனில், அவர்கள் எதனையும் தெரிந்து கொள்ளும் ஆற்றலோ ஆவலோ இல்லாதவர்கள். ஆதலின் இவ்விருவருக்கும் இடைப்பட்ட நிலையினராய் இறைவனின் அருட்பேறு எய்துதற்கு நெறியாது? என்று அறிய விரும்புபவர்களுக்காகவே இந்நூலை இயற்றுகின்றேன்"

"போதம் மிகுத்தோர், தொகுத்த பேதைமைக்கே
 பொருந்தினோர், இவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
ஏதுநெறி எனுமவர்கட்கு அறிய......
 தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி என்றே"

என்று அருள் நந்தி சிவாசாரியர் குறிப்பிட்டருளியிருக்கின்றார். இவர் இங்ஙனம் குறிப்பிட்டருளியமைக்கு இனியதொரு முன்னோடிபோல, பின்வரும் திருமந்திரப் பாடல் அமைந்திருத்தல் அறிந்து இன்புறுதற்குரியது.

அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவுற் றுயர்வோர்க்கும்
அறிவுற் றறியாமை எய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வார்அறி வோரே.

(3) நூல் வகைகள் :

"இறைவனால் அருளிச் செய்யப்பெற்றவை, வேதம் சிவாகமம் என்னும் இரண்டுமேயாம். ஏனையவெல்லாம் இவற்றின் வழிநூல், சார்பு நூல், பூர்வபக்கநூல்களேயாகும். வேதம் பொது நூல், சிவாகமங்கள் சிறப்புநூல். வேதம் உலகவர் பொருட்டும், சிவாகமம் சத்திநிபாதர் பொருட்டும் அருளிச் செய்யப்பட்டன. வேதம் சூத்திரம் போன்றது; சிவாகமங்கள் விரிவுரை போல்வன. வேதத்தின் கரும காண்டப் பொருள்களை விளக்குவன பூர்வபக்க நூல்கள்; வேதத்துள் கூறப்படாமல் எஞ்சி நின்ற பொருள்களையும், வேதமுடிபாகிய உபநிடதங்களின் பொருள்களையும் இனிது விளக்குவன ஆதலின், சிவாகமங்கள் சித்தாந்தம் எனப்படும்." இதனை "வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள் வேறு உரைக்கும் நூல், இவற்றின் விரிந்த நூல்கள்; ஆதிநூல் அநாதி அமலன் தரும் நூல் இரண்டும்; ஆரண நூல் பொது, சைவம் அருஞ் சிறப்பு நூலாம்; நீதியினால் உலகர்க்கும், சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது; நீள் மறையின் ஒழிபொருள், வேதாந்தத் தீதில் பொருள் கொண்டு உரைக்கும் நூல் சைவம்; பிறநூல் திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்" எனவரும் சிவஞான சித்தியார் பாடல் தெரிவிக்கின்றது. இக் கருத்திற்கு அரண் செய்யும் வகையில், பின்வரும் திருமந்திரப்பாடல் அமைந்துள்ளது.

வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்;
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன;
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமது என்பர் பெரியோர்க்கு அபேதமே.

(4) மும்மலங்கள் :

உயிர்களை ஆணவம் மாயை கன்மம் என்னும் மூன்று மலங்கள் பற்றியுள்ளன. ஆணவ மலம் உயிர்களுக்கு அறியாமையை விளைவித்து நிற்கும். மாயாமலம் உயிர்களுக்குரிய தனு கரண புவன போகங்களைத் தோற்றுவித்துத் தரும். கன்மமலம் உயிர்களின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக அமையும். உயிர்களை இம் மும்மலங்களும் பற்றி நிற்குந் தன்மை, நெல்லில் உமியும் தவிடும் முளையும் பொருந்தியிருப்பது போலும். நெல், மலங்களால் பிணிப்புண்ட உயிர் (பெத்தான்மா). ஆணவம், நெல்லின் உள்ள உமிபோலும். உமி, அரிசியின் வடிவம் தெரியாமல் அதனை முழுவதும் மறைக்கும்; அதுபோல ஆணவ மலம் உயிரறிவை முழுவதும் மறைத்து நிற்கும். மாயை தவிடுபோலும். தவிடு அரிசியின் இயல்பைச் சிறிது விளக்கும்; அதுபோல மாயாமலம் உயிரின் அறிவைச் சிறிது விளங்கச் செய்யும். கன்மம், நெல்லினின்று தோன்றும் முளை போலும். முளை தோன்றுமிடத்து அரிசியின் தன்மை விளங்காதவாறு போல, கன்மமலமாகிய நல்வினை தீவினைகள் செய்யப்படுங்கால், உயிர் அவற்றில் மயங்கிக் கிடத்தலால், அதன் இயல்பு விளங்காது நிற்கும். நெல்லினின்று உமியும் தவிடும் முளையும் நீங்கிய நிலையில் உள்ள அரிசி, முறையே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களும் நீங்கித் தூய்மை அடைந்து வீடுபேறு எய்திய நல்லுயிர் (முத்தான்மா) போலும். இவ்வுண்மையினை

''மும்மலம் நெல்லி னுக்கு
முளையொடு தவிடு மீப்போல்
மம்மர்செய்து அணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று,
பொய்ம்மைசெய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணும்...''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள், இனிது விளக்கிக் கூறுகின்றது. இக் கருத்திற்கு அடிப்படையும் சான்றுமாகப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளங்குகின்றது.

ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காணும் முளைக்குத் தவிடுமி ஆன்மாவும்
தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய் நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே.

(5) குருவருள் :

உயிர்களுக்குக் குருவின் அருள் இன்றியமையாதது. இருளை அருளாற் போக்குபவனே குரு (கு—இருள்; ரு—அருள்) எனப்படுவான். குருவருள் இன்றித் திருவருள் இல்லை. இறைவன் அருளை நாம் நேரே பெற முடியாது. குருவின் மூலமாகத்தான், நாம் இறையருளைப் பெற முடியும்; நம்மைப் பற்றியுள்ள மலங்களைப் போக்கிக் கொள்ள முடியும். மலம் பஞ்சு போன்றது; எரிக்கத்தக்கது. இறைவன் சூரியனைப் போன்றவன்; இறைவன் நமக்கு எட்டாத நிலையில் தொலைவில் உள்ளான். சூரியன் தானே நேராகப் பஞ்சை எரிக்க முடியாது. சூரியகாந்தக் கல்லின் வழியாகவே, சூரியன் பஞ்சை எரிக்க முடியும். எனவே சூரியகாந்தக் கல், குருவைப் போன்றது. சூரியகாந்தக்கல், சூரியனின் வெப்பத்தைத் தன்பால் ஏற்கத்தக்கது. அதுபோலக் குரு, இறைவனின் அருளைத் தன்பால் தேக்கி நிற்பவன். சூரியகாந்தக் கல்லின் வாயிலாகவே, சூரியனின் வெப்பம் ஊடுருவி நின்று, பஞ்சை எரிக்கும். அதுபோலக் குருவின் வாயிலாகவே, இறைவனின் திருவருள், உயிர்களின் மும்மலங்களைப் போக்குதல் இயலும். குருவின் உதவியின்றி உயிர்களும் இறைவனருளைப் பெறமுடியாது. இறைவனும் குருவின் வாயிலாக அன்றி, உயிர்களுக்கு நேரே அருள் செய்தல் இயலாது. சூரியன், இறைவன். சூரியனின் வெப்பம் அல்லது நெருப்பு, திருவருள். சூரியகாந்தக்கல், குரு. பஞ்சு எரிக்கத்தக்க மும்மலங்கள். இவ்வுண்மையினை,

''சூரிய காந்தக் கல்லின் இடத்தே செய்ய
சுடர்தோன்றி யிடச்சோதி தோன்றுமாபோல்,
ஆரியனும் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்...''

எனச் சிவஞான சித்தியார் கூறுகின்றது. இச் சித்தியார் செய்யுளுக்குப் பின்வரும் திருமந்திரப் பாடலே, மூலமும் முதலும் ஆகும் எனலாம்.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா;
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே

(6) கருட தியானம் :

கருட தியானத்தில் வல்லவர்கள், உலகிற் பாம்பு கடியுண்டவர்க்கு, அப்பாம்பின் விடத்தைப் போக்கி, நலம்புரிதல் காண்கின்றோம். ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆதியான்மிக கருடன், எனக் கருடன் மூன்று வகைப்படும். இவற்றுள் உலகத்திற் காணப்படுவது ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோலப் பாவனை செய்து தியானித்துக் கணிக்கப்படும் மந்திரம், ஆதிதைவிக கருடன். அம் மந்திரத்தின் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி, ஆதியான்மிக கருடன். மாந்திரிகன் தன் உள்ளத்தில் மந்திர ரூபமாகிய ஆதிதைவிக கருடனை நாள்தோறும் பாவனை செய்து பழகி, அப்பயிற்சியின் ஆற்றலால், அம்மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனை செய்து, தன் அறிவு அதன் வயமாகும்படி உறைத்து நிற்பான். அந்நிலையில் மந்திர சித்தி கைவரப்பெற்ற மாந்திரிகன், மந்திர வலிமை கொண்ட தனது கண்கொண்டு நோக்கினால், பாம்பு கடியுண்டோருக்கு அப்பாம்பின் கடுவிடம் தணிந்து நீங்கும். அதுபோல ஒருவன் 'சிவோயம்' எனத் தன்னுள்ளே பாவித்து, 'சிவதத்துவமசி' (சிவம்நீ ஆகின்றாய்) என்னும் சித்தாந்த மகா வாக்கியப் பொருளை நாடோறும் பயின்று, சிவோகம் (சிவம் நான்) எனப் பாவிப்பானாயின், அந்தப் பாவகத்தின் விளங்கும் முதல்வனால் தனது மலமாயா கன்மங்கள் நீங்கப் பெறுவன். இவ்வுயரிய உண்மையினைச் சிவஞான சித்தியார் (9. 3:1) '' கருட தியானத்தால் விடம் ஒழியும்; அதுபோலச்

சிவோகம் எனப் பாவிக்க, விண்டகலும் மலங்கள்எலாம்; விமலதையும் அடையும்'' என்று தெளிவுறுத்துகின்றது. இக்கருத்தும் திருமூலர் பெருமானுல் திருமந்திரத்தில் பின்வருமாறு அருளிச் செய்யப் பெற்றிருத்தல் அறிந்து மகிழத் தக்கது.

''கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்தஅப் போதே
திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே''

(7) இருவினையொப்பு :

இருவினையொப்பு என்பது, சஞ்சிதமாய் ஈட்டப்பட்டுக் கிடந்த நல்வினை, தீவினைகள் இரண்டும், பக்குவ முறையாற் பயனுக வரும் வழி, பரிவேள்விப் புண்ணியமும் பிரமக் கொலைப்பாவமும் தம்முள் ஒன்ருன்ஒன்று சுந் தோபசுந்த நியாயமாய்த் தம்முள் அடிபட்டு ஒத்துக் கெட்டொழிதல் என்று சிலரும்; சஞ்சிதமாய்ச் சேர்ந்து கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றிச் சரிநிகர் சமானமாய்த் தம்முள் ஒத்துநிற்றல் என்று சிலரும் கூறுவர். ஒன்றில் விருப்பும் மற்ருென்றில் வெறுப்பும் இன்றிப் புண்ணியபாவம் இரண்டிலும், அவற்றின் பயன்களிலும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுபவனது அறிவின்கண், அவ்விரு வினையும் ஒப்ப நிகழ்தலே இருவினையொப்பு எனப்படும். போற்றினும் தூற்றினும், செத்தினும் போழினும் செஞ்சாந்து பூசினும், நெஞ்சோர்ந்து ஓடா நிலைமையாகிய இவ்விரு வினையொப்பு நிலை நிகழ்ந்த வழி, மலம் தனது வலிமை தேய்வதற்குரிய துணைக் காரணங்கள் எல்லாவற்ருேடும் கூடுதலே, மலபரிபாகம் ஆகும். மலபரிபாகமே, உயிர்கள்பால் இறைவனின் திருவருள் பதிதல் ஆகிய சத்திநிபாதம் நிகழ்வதற்குக் காரணம் ஆகும். அந்நிலையில் மலத்திற்குத் துணையாய் நின்று நடாத்திவந்த திரோதான சக்தியாகிய மறைப்பாற்றல், பராசக்தியாகிய அருளாற்றலாக மாறி நலம் புரியும்.

''இருவினைச் செயல்கள் ஒப்பின்,
ஈசன்றன் சத்தி தோயக்,
குருவருள் பெற்று ஞான
யோகத்தைக் குறுகி, முன்னைத்
திரிமலம் அறுத்துப், பண்டைச்
சிற்றறி வொழிந்து, ஞானம்
பெருகி நாயகன்றன் பாதம்
பெறுவது சுத்தம் ஆமே''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள் (4. 3:9), இக் கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. இவற்றைப் பின்வரும் திருமந்திரச் செய்யுள் சுட்டுதல் காணலாம்.

இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும்எனும் ஞானத்தால் தன்செயல் அற்ருல்
திரிமலம் தீர்ந்து சிவனவ ஞமே.

(8) ஐவகை அவத்தைகள்:

உயிரானது உடலின்கண் பலவகைக் கருவிகளோடு கூடி நின்று, முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐவகை அவத்தைகளை அடைந்து வரும். இவற்றை முறையே நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் எனவும் வழங்குவர். இவை முறையே புருவநடு கழுத்து நெஞ்சு கொப்பூழ் மூலம் என்னும் இடங்களில், நிகழும். சாக்கிரத்தில், பொறிகள் 10, புலன்கள் 10, பிராணன் அபானன் முதலிய வளிகள் 10, அகக் கருவிகள் 4, புருடதத்துவம் 1 ஆக 35 கருவிகள் தொழிற்படும். கனவு நிலையில் இவற்றுள் பொறிகள் 10 நீங்கலாக, ஏனைய 25 கருவிகள் தொழிற்படும். உறக்க நிலையில் பிராணன் சித்தம் புருடன் என்னும் 3 கருவிகளும், பேருறக்கத்தில் பிராணன் புருடன் என்னும் 2 கருவிகளும், உயிர்ப்படக்கத்தில் புருடன் ஆகிய கருவி ஒன்றும் தொழிற்படும்.

சாக்கிரம் முப்பத் தைந்து
நுதலினில்; கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து
களத்தினில்; சுழுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில்;
துரியத்தில் இரண்டு நாபி;
நோக்கிய துரியா தீதம்
நுவலின்மு லத்தில் ஒன்றே

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள், அரிய இந்த அனுபவச் செய்திகளைக் கூறுகின்

றது. இச் செய்யுளுக்கு மூலமும் மேற்கோளு மாகப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளங்கு தல் காணலாம்.

> ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரம்;
> கைகண்ட ஐயைந்திற் கண்டம்
> கனுஎன்பர்;
> பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையில்
> மெய்கண் டவன்உந்தி மேவல் இருவரே.

(9) சிவானுபவத்திறம்:

இறைவனுடைய திருவருள் அனுபவத் தைப் பக்குவ மில்லாதவர்கள் அறியவோ நுகரவோ இயலாது. பக்குவமுடையவராய்ச் சிறப்புமிக்க தக்கவர்களும்கூட, இறையருள் இன்ப அநுபவத்தை அறியவும் நுகரவும் இயலுமேயன்றி, அதனைப் பிறருக்கு எடுத் துரைத்தல் இயலாது. ஆதல்பற்றியே அதனைப் "பேசா அநுபூதி' என்பர். மணிவாசகரும் "சொல்லுவது அறியேன் வாழி" என்றார். இத் தகைய சொல்லிறந்த இன்பமாகிய சிவாநுபவத் திறத்தினைச் சிவஞானசித்தியார் "கன்னிகை தான் காமரசம் காணுள்; மருவி இருவரும் புணர வந்த இன்பம் வாயினுற் பேசரிது; மணந்தவர்தாம் உணர்வர்" எனக் குறிப்பிடு கின்றது. இக் கருத்தினை வலியுறுத்தும் வகையில்,

> "முகத்திற் கண் கொண்டு காண்கின்ற
> மூடர்காள்
> அகத்திற் கண்கொண்டு காண்பதே
> ஆனந்தம்
> மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
> சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா
> றெங்ஙனே?

(10) சிவாயநம எனும் குளிகை:

உயிர் செம்பு போன்றது. உயிரைப் பற்றி யுள்ள ஆணவ மலம், செம்பைப் பற்றி நிற்கும் களிம்பு போன்றது. மலத்தால் பிணிப்புண்ட உயிர், களிம்பு கலந்த செம்பு போல்வதாகும். செம்பில் களிம்பு நீங்கினுல், பொன்னுக மாறும். அப்போது அது, செம்பொன்னோடு சேர்தல் இயலும். மலநீக்கம் பெற்று வீடு பேற்று இன்பம் எய்தி நிற்கும் முக்தர்கள், செம்பொன் போல்வர். சிவபெருமான் செம்பினின்று களிம்பை நீக்கும் இரதகுளிகை போல்வன். இரதகுளிகை செம்பொன் ஆகாது; செம்பொன் இரதகுளிகை ஆகாது. அதுபோல இறைவன் உயிர் ஆகான்; உயிர்கள் இறைவன் ஆக மாட்டா. செம்பு களிம்பு நீங்கிச் செம்பொன் ஆனுலும், தன்னைச் செம்பொன்னுக்கிய இரத குளிகைக்குச் சமமாகாது. அதுபோல மலப் பிணிப்புண்ட உயிர்களாகிய பெத்தான்மாக் கள், மலநீக்கம் பெற்றுத் தூய்மையுற்ற முத் தான்மாக்கள் ஆயினும், தம்மை மலநீக்கம் பெறச் செய்த முழுமுதற் பெரும்பொருளாகிய சிவபெருமானுக்கு ஒருபோதும் சமமாகமாட்டா. ஆதலின் மலநீக்கம் எய்தி முத்தி பெற்ற உயிர் கள், சிவபெருமானைப் போல ஐந்தொழில் இயற் றும் திறம் இன்றி, சிவபிரானின் திருவருள் இன்பத்தை அனுபவிப்பதற்கு மட்டுமே உரிமை யுடையனவாகும். "செம்பு இரதகுளிகை யினுல் களிம்பு அற்றுப் பொன்னுய்ச் செம்பொனு டன் சேரும்; மலம் சிதைந்தால் சீவன் நம்பனு டன் கூடும் எனில், பொன்போல் அல்லன்; நற் குளிகைபோல, அரன் நணுகும் மலம் போக்கி, அம்பொன் அடிக்கீழ் வைப்பன்; அருங்களங்கம் அறுக்கும் அக்குளிகை தானும் பொன் ஆகா தாகும்; உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன்; உயிர்தானும் சிவானுபவம் ஒன்றி னுக்கும் உரித்தே" என்பது சிவஞான சித்தி யார் செய்யுள். இதன்கண் உயிர்களின் மலத் தைப் போக்கும் சிவபெருமானைச் செம்பின் களிம்பைப் போக்கும் இரத குளிகையாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம். பின்வரும் திரு மந்திரப்பாடல், சிவபெருமானுக்குரிய திருவைந் தெழுத்தை இரத குளிகையாகக் கூறியிருத் தல், ஒப்புநோக்கி மகிழத்தக்கதாகும்.

> "எளிய வாதுசெய் வார்எங்கள் ஈசனை
> ஒளியை உன்னி உருகும் மனத்தராய்த்
> தெளிய ஓதிச் சிவாய நமஎன்னும்
> குளிகை யிட்டுப்பொன் ஆக்குவன்
> கூட்டையே"

(11) மூவகை நிலைகள்:

உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று நிலைகளைப் பொருந்தும். கேவலமாவது, இச்சை ஞானம் கிரியை என்னும் ஆற்றல்கள் சிறிதும் தொழிற்படாமல், உயிர்கள் ஆணவ மலத்துடன் கூடி நிற்றல். சகலமாவது, ஆணவ மலத்தோடு கூடி நின்ற உயிர்கள், பின்பு இறை வனுல் தனுகரண புவனபோகங்கள் கூட்டப்

பெற்று இச்சை ஞானக்கிரியைகள் ஒரு சிறிது விளங்கி நிற்றல். சுத்தமாவது, தனுகரண புவன போகங்களுடன் கூடிநின்ற உயிர்கள், ஆணவம் முதலிய மலங்கள் நீங்கிப் பிறவியொழிந்து, சிவத்துடன்கூடி, இச்சை ஞானக்கிரியைகள் எங்குமாய்ப்பரவி நிற்றல். இம்மூன்றனையும் காரண அவத்தைகள் என்பர்.

இவற்றுள், காரண கேவல அவத்தை நிலையில் உயிர்கள் உடம்பின்றியும், கலை முதலிய தத்துவங்களோடுகூடி அறிதலின்றியும், முத்தியின் குணமாகிய தருமம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் ஆகிய எட்டுமின்றியும், இச்சை அறிவு செயல்கள் இல்லாமலும், தமக்கென ஓர் உரிமையில்லாமலும், போக நுகர்ச்சியில் விருப்பமில்லாமலும், உடலின் தோற்றக் கேடுகள் இல்லாமலும், ஓரிடத்திற்குரியவாகாமலும், ஆணவ மலத்துடன் விரவி வியாபித்து நிற்கும். இதன் இயல்பினை,

''அறிவிலன் அமூர்த்தன் நித்தன்,
அராகாதி குணங்க ளோடும்
செறிவிலன், கலாதி யோடும்
சேர்விலன், செயல்கள் இல்லான்,
குறியிலன், கருத்தா அல்லன்,
போகத்திற் கொள்கை யில்லான்,
பிறிவிலன், மலத்தி னோடும்
வியாபி, கேவலத்தில் ஆன்மா''

என்று சிவஞான சித்தியார் விளக்குகின்றது. இங்ஙனம் கேவல நிலையில் உயிர்களுக்கு உரியனவாகிய இப்பத்துவகை இயல்புகளையும், சிவஞான சித்தியார் கூறுமாறு போலவே, பின்வரும் திருமந்திரப் பாடலும் குறிப்பிடுதல், ஒப்பு நோக்கி மகிழ்தற்குரியது.

அறிவின் றமூர்த்தன் அராகாதி சேரான்
குறியொன் றிலாநித்தன் கூடான் கலாதி
செறியும் செயல்இலான் திணக்கற்ற வல்லோன்
கிறியன் மலவியாபி கேவலம் தானே.

(12) சிவஞானியர் கொடைப்பயன்:

உயிர்கள் வீடுபேறு எய்துதற்குரிய நெறிகள் பலப்பல. அவைகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்பனவும், கன்மவேள்வி தவவேள்வி செபவேள்வி தியானவேள்வி ஞானவேள்வி என்பனவும், தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவம் சாந்தி விரதம் கன்மயோகம் என்பனவும், பிறவுமாம். இவைகளுள், சிவஞானிகளுக்குச் செய்யும் தானமும் ஒன்றாகும். இறையருட் பேறு எய்துவதற்கு, நாம் விதி நெறியிலும், பக்தி நெறியிலும் முயலலாம். அங்ஙனம் பக்தி நெறியில் நின்று சிவஞானியர்க்கு நாம் திலம் (எள்) அளவு தானம் செய்தாலும், அதன் பயன் திலமும் மலையும் போல் மிகப்பெரியதாக வளர்ந்தோங்கி, நம்மைப் பிறவிக் கடலினின்று எடுத்து, பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கும்; தவமாரும் பிறப்பொன்றில் சாரப் பண்ணும்; நவமாகும் தத்துவ ஞானத்தை நல்கும்; நம்மை எளிதின் நாதன் அடிக்கமலங்கள் நணுகுவிக்கும். இதனை,

''சிவஞானச் செயலுடையோர் கையில் தானம்
திலம் அளவே செய்திடினும், நிலமலை போல் திகழ்ந்து,
பவமாய்க் கடலின்அழுந் தாதவகை எடுத்துப்
பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கும் .''

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுள் சிறப்புறத் தெளிவுறுத்துகின்றது. இக்கருத்தினை வலியுறுத்தி அறிவுறுத்தும் முறையில், பின் வரும் திருமந்திரச் செய்யுள் பெரிதும் அழகுற விளங்குகின்றது.

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்;
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமற் றேபர போகமுங் குன்றுமே.

முடிவுரை:

'தண்டமிழின் மேலாந் தரம்' என்று போற்றத் தக்க நிலையில் சிறந்து விளங்கும் திருமந்திரம், சிவஞானசித்தியார் என்னும் இருபெருநூல்களினும், இங்ஙனம் எத்தனையோ பற்பல ஒப்புமைத் தன்மை மிக்க செய்யுட்கள் பற்பல, அழகுற அமைந்து காணப்படுகின்றன. அவைகளையெல்லாம் நுனித்தாய்ந்து நோக்கி நுண்ணிதின் எண்ணியுணர்தல், அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும். இத்தகைய ஒப்புயர்வற்ற தெய்விகத் தமிழ்ப் பெருநூல்களை, நாம் அனைவரும் கற்றுணர்ந்து பயன்கொண்டு உய்ய முற்படுவோமாக!

—ஆசிரியர்

மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும்.

சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், M. L. C.,

(மேலவைத் துணைத் தலைவர்)

மணிவாசகரின் திருவாசகத்திலே, ''திருவண்டப்பகுதி'' முழுவதிலும், மெய்ஞ் ஞானமும் விஞ்ஞானமும் கலந்துள்ளன. மெய்ஞ் ஞானிக்கும் விஞ்ஞானிக்கும் உள்ள நல் உறவை யும் அதிலே காண்கின்றோம். நம்முடைய மெய்ஞ்ஞானியர்களை விஞ்ஞானத்திற்கு மாறாகக் கருத்துக்களை வலியுறுத்தும் அஞ் ஞானியர் எனக் கருதுவோர் இன்னமும் இருக் கின்றனர். அவர்கள் திருவண்டப்பகுதியைப் படித்துத் தெளிவார்களானால், நான் சொல்லுவதிலுள்ள உண்மையை உணர் வார்கள்.

திருவண்டப்பகுதி என்ற தலைப்பே விஞ்ஞானக் கலைச்சொல் எனலாம். ''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்'' எனத் தொடக்கத்திலுள்ள முதல்வரி, ''பூமி உருண்டை வடிவமா, தட்டை வடிவமா? என வாதிட்ட மேதைகள் பிறப்பதற்கு முன்பே அறியவும் தேவையில்லாத வகையில் உண்மையை வெளிப்படுத்துகின்றது.

''அருக்கனிற் சோதி அமைத்தோன்'' எனத் தொடங்கி, இறைவன் பிரபஞ்சத்தை இயக்கு வித்த விதத்தைக் கூறும் வரிகள், விஞ்ஞானத்தைத் தன்னுள் கொண்ட மெய்ஞ் ஞான வாக்குகளாகும்.

''புல்லாகிப் பூடாய்'' எனத் தொடங்கி, உயிர்க் குலத்தின் தோற்றத்தையும், அதன் வளர்ச்சி யையும் கூறும் வாசகங்கள், டார்வின் தத்துவத் தோடு விஞ்ஞான ரீதியில் ஒட்டியும், மெய்ஞ் ஞான ரீதியில் அதனிற் பிரிந்தும் செல்வன வாகும்.

சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்புவதில் வெற்றிகண்ட விஞ்ஞானிகளை நாம் பாராட்டுகின்றோம். அவர்கள் புறக் கரணங்களாலும், அவற்றைக் கொண்டு படைத்த கருவிகளாலும் கண்ட சந்திர மண்டலத்தை, நம்மவரான மணிவாசகர் போன்ற மெய்ஞ்ஞானியர், தங்கள் அகக் கரணங்களால் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே கண்டனர். இந்த உண்மையை விளக்கு கின்றது, திருவாசகத்திலுள்ள திருவண்டப் பகுதி.

மெய்ஞ்ஞானியரை வாழையடி வாழை யெனப் பெற்றெடுத்த பாரதப் பெருநாடு விஞ்ஞான அறிவிலே பின்தங்கி விட்டது. ஆம்; இருநூருண்டு காலம் அன்னியருக்கு அடிமைப் பட்டிருந்த காரணத்தால், மெய்ஞ்ஞானத்தில் முன்னேறிய நாடுகள், விஞ்ஞானியரைப் பெறத் தவறிவிட்டது. இதனால், புதுமை மணக்கும் விஞ்ஞானமும், பழைமை மணக்கும் மெய்ஞ்ஞானமும் உறவற்றுவிட்டன.

தமிழகத்தில் விஞ்ஞானக் கலைகள் தாய் மொழியில் பயிற்றுவிக்கப்படுமானால், மெய்ஞ் ஞானமும் விஞ்ஞானமும் உறவாடும் காலம் வரும். அப்போது மணிவாசகர் தாயுமானவர் போன்ற ஞானியர் பெருமையை உலகம் அறியும். இந்த உண்மையை உணர்ந்தே,

''உருவண்டப் பெருமறை என்று
உலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதி எனும்
திருவகவல் வாய்மலர்ந்த
குரு என்று எப் பெருந்தவரும்
கூறுகின்ற கோவே நீ
இரு என்று, அத் தனியகவல்
எண்ணம் எனக்கு இயம்புதியே''

என்று, பத்தொன்பதாம் நூற்றுண்டவரான வள்ளலார், திருவண்டப் பகுதியைப் போற்றினர் போலும். ★

ஞானநெறி

திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள்

(மாம்பாக்கம், மதுராந்தகம், செங்கற்பட்டு மாவட்டம்)

சீலமும், நோன்பும் (சரியை, கிரியை):

சாதி சமயம் மதம் மார்க்கம் ஆசாரம் முதலியன முதன்முதலில் மக்கள் வாழ்க்கை உயரும் முறையிலேயே முற்காலத்தில் ஏற்பட்டன. இக் கோட்பாடுகள் தேவையே என்றாலும், அவற்றில் பற்று அற்றிருக்கவேண்டும். தாமரை மேல் தண்ணீர் போல் தொடர்பு கொண்டும், தொடர்பு இல்லாமலும் நடந்துகொள்ளவேண்டும். சாதி முதலியவற்றில் அபிமானித்து உழலக்கூடாது என்றுதான் வள்ளலாரும் தெரிவித்தார்; இவற்றில் தடுமாறக்கூடாது என்றுதான் மாணிக்கவாசகரும் விளக்கினார்,

உலகியலில், தேவையான எல்லாப் பொருள்களோடும் இருந்துகொண்டே அவற்றுள் பற்று வைக்காமல் இருப்பது, அறிவு நெறி. சாதி முதலிய வேறுபாடுகள் அடிமரம் போலவும், கிளைகள், மலர்கள், இலைகள், காய்கள், கனிகள் போலவும் படிமுறையாய் ஒன்றுக்கொன்று உதவியும் துணையுமாய் இருக்கின்றன. பற்று நீங்குதல் என்றால், பயன்படுத்துதல் என்று பொருள். பற்று இருக்கும் வரையில் எதையும் பயன்படுத்த முடியாது. கரும்பைச் சக்கையாக்கியபோதுதான் அதன் பயனாகிய சாற்றைப் பெற முடிகிறது. சமயம் சாதி என்று பெருமைப்படுத்திக்கொண்டு இருப்பதை விட, அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு பற்றற்றிருப்பதே சிறப்பு. பெரியோர்கள் எல்லாம் இவ்வாறுதான் நடந்துகொண்டார்கள்.

செறிவும் அறிவும் (யோகம், ஞானம்):

சாதியைவிடச் சமயங்களும், சமயங்களை விட மதங்களும், மதங்களைவிட மார்க்கங்களும் மேன்மேல் உயர்ந்தவை. மார்க்கங்களிலும் சன்மார்க்கம் என்னும் அறிவுநெறி தலையானது. 'மார்க்கங்கள்' ஆண்டவனை உறவு முறையில் நெருங்குகின்றன. உறவுகளால் அன்பு என்னும் உணர்வு மலர்கிறது. அந்த அன்பு, அருள் கொண்டு உயர்ந்தால் பயன் சிறக்கும். "உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" என்றார் அப்பர் அடிகள். இப்படி அன்பு சிறப்பது அறிவு நெறி. இதில் செறிவும் அடங்கியிருக்கிறது.

அன்பிலும் உயர்ந்த உணர்வு உண்டு; அது கணவன் மனைவியர் உணர்வு; உறவு முறையில் இதுவே சிறந்தது; மிகவும் அணுக்கமானது: இரண்டற்றது; இந்த உறவு முறையால் இறைவனிடம் தொடர்பு கொண்டு அணுகிச் செல்லச் செல்ல, அப்பெருமானின் இணக்கம் உயிர்கட்கு மிகுந்து வரும். அறிவு இங்ஙனம் நெறிகொண்டு செல்லுகிறது. இத்தகைய உண்மையான அறிவு நெறியிலும், சில படி முறைகள் காணலாம். உண்மை என்றால் உள் முகம் நினைவுக்கு வரும். அகம் என்பதும் அது. கணவன் மனைவியர் உறவு இத்தகைய அக மார்க்கமாகும். ஆகவே உண்மை நெறியில் சன்மார்க்கம், இல்வாழ்க்கையிற் கற்பு மேம்பட்ட உறவாய்த் தொடங்கி, மலரக்கூடியன எல்லாம் மலர்ந்து, இறையருள் தொடர்பில் ஓங்கி முழுமை அடைகிறது.

இயற்கையுண்மை விளக்கம், இன்பம்:

உள்ள பொருள்களிலும் எக்காலத்திலும் ஒரே சீராய் மங்காமல் உள்ளதும் உண்டு. அதுதான் கடவுள் என்பது. மற்ற உள் பொருள்களெல்லாம் ஒரே சீராய் உள்ளனவல்ல. ஆன்மாவும் உள்பொருளேயாயினும் அது வளர்ச்சிக்குரியது. உலகம் உள்ள பொருளே; ஆனால் தேய்வுக்குரியது. ஆதலால் கடவுள் ஒருவரே, ஒரே சீராய் இருக்கும் உள்பொருள். இத்தகைய உள்பொருள்களில் இறைவனே தலையானவன். அவன் உள்ளவனாய் இருப்ப

தோடு, விளங்குவோனாகவும் இருக்கிறான். அறிஞன் ஆதலால் அவனுக்கு விளக்கம் இருக்கிறது. உள் பொருளைப் பற்றினால் உள் ஒழுக்கம் சிறக்கும். அது நிறைவடைகிற பொழுது வெளி முகத்தில் விளக்கம் காட்டும்.

இல்பொருளாய் இருந்தால் வெளிவந்து விளங்க வாயில் இல்லை. காய்களில் சாறு நிறையும்பொழுது கனிகளாய் நிறங்கொண்டு, வெளி முகத்தில் விளக்கம் காட்டுகிறது. "காயெலாம் கனியெனக் கனிவிக்கும் ஒரு பெருங் கருணை அமுதே" என்னும் வள்ளலார் பாடல் இங்கே நினைக்கத்தக்கது. இப்படி உள்ளே இருப்பது வெளியே முன்வந்து விளங்குவதே 'முல்லை யொழுக்கம்' எனப்படும். இதை 'இருத்தல் ஒழுக்கம்' என்றும் சொல்வார்கள். 'உள்முகமான இருத்தல் ஒழுக்கம்' என்பது அதன் பொருள். உள்முகத்தில் இருத்தல் சிறந்தால், வெளி விளக்கம் மிகுதியாகும். கற்பு ஒழுக்கம் என்று சொல்வதும், ஒருமைகொண்டு இங்ஙனம் உள்பொருள் பற்றித் தவம் இருக்கும் ஒழுக்கமேயாகும்.

கடவுள் உள்பொருளா யிருப்பதோடு சூரியனைப்போல, விளங்கும் பொருளாகவும் மிளிர்கிறார். இருளை நாம் விரும்புவதில்லை. காரணம், அது விளக்கமில்லாதது. ஆதலால் உள்பொருள் என்றால், அது விளக்கமுடையதாயும் இருந்தால் மட்டுந்தான் போற்றற்குரியதாகும். இனி, உள் பொருள் என்பது விளங்குவதாய் இருப்பதோடு பயன் தருவதாயும் மேம்பட வேண்டும். பயன்படுவதிலேதான் தூய இன்பம் இருக்கிறது. இவ் வளர்ச்சிதான் 'சத்' நெறியின் உயர் நிலை. இறைவன் இவ்வாறுதான் இருக்கிறான். அவன் சத்தாகவும் (உள்ள பொருளாகவும்), சித்தாகவும் (விளங்கும் பொருளாகவும்) ஆனந்தமாகவும் (பயன்படும் பொருளாகவும்) சச்சிதானந்தமாக அதாவது சத்து சித்து ஆனந்தமாக இருக்கிறான். ஆன்மா கூடிய வரையில் உலகத்தில் இவ்வளர்ச்சியைப் பெறுவதுதான் அறிவு நெறி (ஞானமார்க்கம்) எனப்படும்.

ஆன்மா சிற்றறிவுடையது; உள் பொருளே. அது சீலத்திற் பழகினால், அந்நிலையில் இயன்ற வரையில் நிலை தாழாமல் உயர்ந்துகொண்டு ஒரே சீராய் (சத்தாய்) உள்ளதாகும். நோன்பைப் பின்பற்றினால் அந்நிலையிலிருந்து விளங்கும் 'சித்' நிலைக்கு உயரும்; சீலம் நோன்புகளோடு செறிவையும் பின்பற்றினால் சித் நிலையில் ஆழ்ந்த ஒருமையிற் சிறக்கும்; சீலம் நோன்பு செறிவுகளோடு முற்றும் பற்றற்ற அறிவையும் (ஞானத்தை) பின்பற்றினால் பயன்படும் பெருநிலை (ஆனந்தம்) பெருக்கெடுக்கும்.

அறிவுக் கூட்டம்:

சச்சிதானந்தப் பொருளை, இங்ஙனம் அதன் இயல்பிற் பழகிப் பின்பற்றுகிறவர்கள், தமக்குள் வேற்றுமை கொள்ளாமல் எப்பொழுதும் ஒற்றுமையாய்க் கூடி இருந்து வருவார்கள். இறைவன் என்னும் ஒரு பொருளினிடத்தில் தொடர்பு இருப்பதனால் அவர்கட்குள் இவ்வொற்றுமை சிறக்கிறது, நிலைத்திருக்கிறது. "சித்தத்தை ஒன்ற வைத்தார்; சிவமதே நினையவைத்தார்" என்னும் அப்பரடிகள் வாய் மொழியில் இக்கருத்து மிளிர்கின்றது. 'ஒற்றுமை' என்னும் சொல்லுக்கு ஒன்றில் ஒன்றுதல் என்பது பொருள். ஒன்றோடு ஒன்றினால் ஒற்றுமை வரும்; பலவற்றோடு ஒன்றவும் முடியாது; அதனால் ஒற்றுமையும் வளராது.

உலகத்தில் ஒரு பொருளாய் இருப்பது இறைவன் ஒருவனே. 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்றார் மாணிக்கவாசகர். மொழி நாடு சாதி முதலியவற்றால் அமையும் ஒற்றுமை, ஓர் அளவுதான் கூடும். ஏனென்றால் அவை பன்மை; ஒவ்வொன்றும் பலமொழி பலநாடு பல சாதி முதலியவாகப் பன்மைகளாயுள்ளன. இதை அறிந்து ஒரே பொருளாய் உண்மை விளக்க இன்பப் பொருளாய்த் திகழும் இறையோடு ஒன்றுதலை வளர்த்தால் நாடெங்கும் ஒற்றுமை உண்டாகி வேற்றுமைகள் தலையெடுக்காமல், சிக்கல்கள் தீர முடியும். ஆன்ம நேய ஒருமைப்பாடு என்று வள்ளலார் குறிப்பிட்ட பரந்த ஒற்றுமை, இப்படி உண்டாவதுதான். இச்சிறப்பை உடையது திருக்கூட்டம் என்பது!

அறிவு நெறி, நாட்டில் ஓங்கினால் இத்திருக் கூட்டத்தைக் காணலாம். திருக்கூட்டம் உலகத்தில் தொடர்ந்து இயங்கிக் கொண்டு தான் இருக்கிறது. கூடித் தொடர்ந்து இயங்கும் இயல்பு, அஃதாவது வாழையடி வாழையாய் வருவது, திருக்கூட்டத்துக்கே

உரியது. அக்கூட்டத்திற்கு இறைவனே தலைவன். தலைவர் பலராக இருக்க முடியாது. ஒருவர்தாம் இருக்க முடியும். ஆன்மாக்கள் தம் தலைவர் இன்னார் என்பதை அறிந்து தம்முள் ஒ்றுமை கொண்டு, நலம் பெற வேண்டும்.

ஒன்றாக உயர்ந்தது :

உலகத்தில் எந்தப் பொருளும் இயற்கையில் ஒன்றுக்கொன்று சமம் இல்லை. கைவிரல்களே இதற்குச் சான்று; ஏற்றத் தாழ்வு இருக்கவே செய்யும். ஆதலால் இறைவன் ஒருவனே உயர்ந்தவன். அவனுக்குச் சமம் வேறொன்றில்லை. மற்றவர்கள் யாரும் அவன் தயவைப் பெறும் அடியவர்களே! இவைகளை அடையும் நெறிகளிலும் ஒன்றுதான் சிறந்ததாய் இருக்க முடியும். எல்லா நெறிகளும் ஒன்றுதான் என்னும் பேச்சு, மழுப்பிப் பேசுவதாகும். ஒரு நெறி மற்றொரு நெறியிற் சென்று முடியும். துறைவரையிற் செல்லாது. ஓர் ஊருக்கு வழிகள் பல இருந்தாலும், எல்லா வழிகளும் அங்கங்கும் ஒரு முக்கிய வழியிற் சேர்ந்து அதன் மூலமாக மாளிகையை அடைவதே இயல்பு. இன்ன நெறி இன்ன காரணத்தால் இத்தகையது என்று அதன் இயல்பை உணர்ந்திருந்தால் மட்டுந்தான், தக்க நெறியில் நன்றாக ஈடுபடவும், ஈடுபட்டுச் சிறந்த பயனை அடையவும் இயலும்; வாழ்க்கைக்கு இது முதன்மையானது; இல்லாவிட்டால் அலைவு மிகுந்துவிடும்.

மெத்தைப் படிகளைப் போன்றவை சமய நெறிகள்; அவை மேன்மேல் இடங்களாய் ஒரு முறைமையில் இருந்தால் மட்டுமே, மாடியை ஏற முடியும். "முத்தியை முற்றவைத்தார் முறை முறை நெறிகள் வைத்தார்" என்பது அப்பர் தேவாரம். அத்தகைய படிகளில் கடைசியாக உயர்ந்த நிலையில் மேடையை ஒட்டி அமைந்திருப்பது ஒன்றுதான். அது படிக்குப் படியாகவும், அதுவே ஏறி நடக்கக் கூடிய மேடையாகவும் திகழ்கிறது. சமயங்களிலும் ஒன்றுதான், அப்படி உயர்ந்த நிலையிற் சமயத்துக்குச் சமயமாகவும் சமயங்கடந்து சேரும் துறையாகவும் (சமயாதீதம்) விளங்கும். "மிகு சைவத்துறை விளங்க" என்னும் சேக்கிழார் திருமொழி இங்கே சிந்திக்கத்தக்கது. இம்முறையில், மார்க்கங்களிலும் உயர்ந்த மார்க்கமாய்ச் சன்மார்க்கம் திகழ்கிறது.

மாணிக்கவாசகர் இம் மார்க்கத்தில் சென்றார். அவர்க்கு முன் திருவள்ளுவர், திருமூலர் முதலியோர் சென்றனர். அவர்கள் வழியில் அடியார் பலரும் வள்ளற் பெருமானும் சென்றிருக்கிறார்கள். மரங்களில் உயர்ந்தது வாழை மரம்; நூன் முறையிற் சிறந்தது திருக்குறள்; சன்மார்க்க சாதியில் மேற்பட்டது அந்தண்மை; சமயத்தில் சைவம்; மதத்தில் சித்தாந்தம். மார்க்கத்தில் சன்மார்க்கம் மேம்பட்டது; அவரவர் விருப்பமும் அன்பும் தகுதியும் எதில் இருந்தாலும் உண்மையைக் கூறும்பொழுது இப்படித் தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

நான் சைவன்; திருமுறைகளில் ஈடுபாடுடையவன் என்றாலும், நூல்களிலும் நூன்முறைகளிலும் திருக்குறள் சிறந்தது என்று கூற வேண்டி இருக்கிறது. இதனால் திருவாசகம் போன்றவை சிறந்தனவல்ல என்பது கருத்தாகாது. திருவாசகம் பழம் போன்றது. பழம் மரத்தின் ஒரு பகுதி; திருக்குறள் மரத்தில். திருவாசகப் பழம் தொங்குகிறது. மரம் என்றால் அது பழத்தையும் உள்ளடக்கி இருக்கும்; வெளிப்படையில் பழம் என்றால் மரமும் உள்ளடங்கியதாகாது. திருக்குறள் அத்தகைய பழுமரம்; அதுவும் வாழைப்பழு மரம்.

வாழையடி வாழை :

வாழை ஓர் உள்பொருள். மற்ற மரங்களை விட ஒளி விளக்கமாகவும் இருக்கிறது. முழுப்பயன் தருவதாகவும் உள்ளது. மேலும் அதன் மரபு இடையீடின்றித் திருக்கூட்டம்போல் வளர்ந்து கொண்டு இருக்கிறது. திருவடித் தொடர்பு போல ஒன்றின் அடியில் மற்றொன்று தோன்றித் தொடர்கிறது. திருக்கூட்டமும் அப்படியே திருவடித் தொடர்பால் நல்லோர் பலரைத் தோற்றுவிக்கும். வாழை மரத்திலுள்ள சிறப்பு வேறு எதிலும் இல்லை. மரம் என்னும் ஒரு பொருளாய் இருப்பதோடு, ஒளி விளக்கத்தால் இன்பம் விளைப்பதாயும், அறம்என்னும் ஒழுங்கு முறையைப் பட்டை இலை பூ காய் என எல்லாவற்றிலும் புலப்படுத்துவதாயும், 'பொருள்' 'இன்பம்' 'அறம்' என்னும் முப்பால் பாடத்தை நமக்குக் கற்பிக்கிறது. முப்பால் மரமாய் இருப்பதோடு, தன்னையே பிறருக்கு உதவி விடக்கூடிய பற்றற்ற பான்மையாகிய வீடும் கொண்டு, முப்பாலில் நாற்பால் மரமாயும் வளர்கிறது. குலையை உலகுக்குக் கொடுத்து விட்டுத் தான் உயிரையே விட்டுவிடுகிறது. தான் இருக்கும்பொழுதே தன்னைப்போல் உலகுக்கு உதவும்படி தன் இனத்தையும் வளர்த்துவிடுகிறது; இப்படிப் பிறர்க்கென வாழ்வது வாழை!

திருவள்ளுவர் திருமூலர் மாணிக்கவாசகர் போன்ற மூன்று வாழையின் பின் வாழைதாம், பட்டினத்தடிகள் தாயுமானார் இராமலிங்க அடிகள் முதலியோர்! இதை 'வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அலனோ' என்னும் அருட்பா மெய்ப்பிக்கும். அறிவு நெறிப்பாடு உடைய இத்திருக்கூட்ட மரபு, மேலும் வளமாகத் தொடர்ந்து செல்ல, ஆண்டவன் அருள் நாளும் உதவி வருக. ★

வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறி

பேராசிரியர், பைந்தமிழ்ப் பாவலர்
திரு. அ. கி. பரந்தாமனர், எம்.ஏ.,

தெய்வத்தமிழ் நாடு செய்த நற்றவப் பயனால் இன்று உலகம் போற்றும் வள்ளுவர் இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் தோன்றி, நாம் மட்டுமின்றி உலகமக்களும் உய்யும்பொருட்டு எய்துதற்கு அரிய ஒரு நூலை, எக்காலத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருமறையை, உலகப் பொது நூலை, இம்மைக்கும் மறுமைக்கும் வழி காட்டும் திருக்குறளை, உடல் நோய்க்கும் ஆன்மநோய்க்கும் ஒரு மருந்தாக அளித்துச்சென்ருர். நிலவுலகிலிருந்து இரண்டரை இலட்சம் கல் தொலைவிலிருக்கும் நிலாவுலகில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட மணி நேரத்தில் கால்வைத்து நடந்து இம்மண்ணுலகுக்குத்திரும்பும் அளவு அறிவியற் சிறப்புப் பெருமை அறவே நமக்கு இல்லையெனினும், வள்ளுவரை உலகுக்கு ஈந்து வான் புகழ் கொண்ட பெரும் பெருமை, இன்று நமக்குண்டு. திருவள்ளுவர் அளித்த திருக்குறள் 20 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நிலவுலகில் இன்று மக்கள் உள்ளத்தில் உலவி வருகிறது. நிலாவுலகில் மக்கள் குடியேறினும் அங்கும் திருக்குறள் போய் உலவினாலும் உலாவும்.

திருக்குறளைப் படித்த ஐரோப்பிய அறிஞர் பலரும், இந்நாட்டுப் பெரியோர்கள் பலரும் பாராட்டிப் புகழ்ந்திருப்பதைக் காண்கிறோம். மாஸ்கோபல்கலைக்கழகத்தின் கீழ்நாட்டுமொழிகள் கல்லூரியில் துணைப்பேராசிரியராகப் பணிபுரிந்துவரும் ருசிய அறிஞர் வி. மகரெங்கோ என்பவர் திருக்குறளைப் படித்து ஆராய்ந்து அண்மையில் எழுதியிருக்கும் கட்டுரை வெளிவந்துள்ளது. அதில் அவர் திருக்குறளின் சிறப்பைப்பற்றிக் கூறியிருக்கும் சில பகுதிகளை மட்டும் இங்கே தருகின்றேன். அப்பகுதிகள் வருமாறு :

"இம் மொழி பெயர்ப்பு (திருக்குறள் மொழி பெயர்ப்பு) வந்த பின்னரே நாங்கள் (ருசியர்கள்) தமிழ் இலக்கியத்தைப் பற்றிய சிறப்பை நன்குணர்ந்தோம் எனலாம். அந்நூலின் தொன்மை, தத்துவார்த்தச் செறிவு, ஞான விரிவு, மேலும் வடமொழியோடு போட்டியிட்டு நிற்கக்கூடிய செந்தமிழின் அழகு ஆகியவற்றை அறிந்து கொண்டோம்.

"திருக்குறளைத் தமிழ் மறை என்று குறிப்பிடுவதிலும் பொருள் உண்டு. இந்நூல் தனது காலத்திய சமூக வாழ்வின் எல்லாக் கூறுபாடுகளையும், மானிட வாழ்வின் மதிப்பு, குறிக்கோள்கள் அனைத்தையும், அறம், பொருள், வீடு ஆகியவற்றையும் பிரதிபலிக்கிறது. திருவள்ளுவர் தமது சமயக் கருத்துகளிலும் தத்துவ நோக்கிலும் அறநெறிக் கோட்பாடுகளிலும் உண்மையான ஞானியாகவும் மாபெரும் மனிதாபிமானியாகவும் திகழ்கின்ருர். அவர் எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியனவும் தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் ஏற்புடையனவுமாகிய சர்வ ஜன சமய அடிப்படைகளையும் ஒழுக்க நெறிகளையும் வகுத்துரைக்க முயன்றிருக்கிருர். இந்த மெய்ந்நூற் கவிஞர் ஒழுக்கநெறி, சமயம், சமுதாயம், அரசாங்கம், காதல், குடும்பவாழ்க்கை, அனைத்தையும் பற்றிய தமது சொந்தமான தனிச்சிறப்பு மிக்க கருத்துக்களை வழங்கியிருக்கிருர்".

இது திருக்குறளுக்கு இக்கால ருசிய அறிஞர் அளித்திருக்கும் பாராட்டு.

இனி, இந்தியநாட்டு அறிஞரும், இசுலாம் சமயத்தவரும், பாரத நாட்டு ஜனதிபதியும் ஆகிய காலஞ்சென்ற டாக்டர். ஜாகீர் உசேன் திருக்குறளைப்பற்றி என்ன கூறியிருக்கிருர் என்பதைக் காண்போம். 1968-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் எட்டாம் நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் ஆராய்ச்சித் துறையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் அவர்,

"இன்றைய நாகரீக மக்களைச் சிக்கித் தவிக்கவைக்கும்மனவிருளை இந்த அறிவுச்சுடர்-திருக்குறள்-அகற்றிவிடும். இத்திருக்குறள்-நன்னெறி காட்டும் நன்னூல்; ஆன்மீக ஞானத் திறவுகோல். தூய வாழ்க்கை உயர்ந்த சிந்தனை-இவையே குறள்காட்டும் நெறிகள்,"

என்று நடுவு நிலையில் நின்று கூறியிருக்கிறார்.

இசை, இலக்கியம், தத்துவம், மருத்துவம் ஆகிய இந்நான்கு கலைகளிலும் பெறுதற்கு அரிய நான்கு டாக்டர் பட்டங்களைப் பெற்ற ஜெர்மனி நாட்டுப் பேரறிஞர் ஆல்பர்ட் சுவிட்சர் என்பார், ஜெர்மன் மொழியில் திருக்குறள் படித்துவிட்டுத் தமது 'இந்திய தத்துவக் கருத்து வளர்ச்சி' என்னும் நூலில்,

"திருக்குறள் எளிதாகக் கைக்கொள்ளக் கூடிய நல்வாழ்வுக்குரிய குறிக்கோளுக்கான அறங்களைக் கூறுகிறது; மானிடருடைய தனி வாழ்விற்கு வேண்டிய தனி ஒழுக்கத்திற்கும் உலகத்தோடு ஒட்ட நடந்துகொள்ள வேண்டிய பொது வாழ்விற்குத் தேவையான பொது ஒழுக்கத்திற்கும் பல வகையான அறங்களை இயம்புகிறது. அவை பெருந்தன்மையுடையனவாகவும் அறிவுக்குப் பொருத்தமுள்ளனவாகவும் இருக்கின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறு மேலைநாட்டு அறிஞர் பெருமக்களால் பாராட்டப் பெறுபவர் வள்ளுவர். இத்தகைய பேரறிஞரின் உண்மை வடிவமும் நமக்குத் தெரியாது: உண்மை வரலாறும் நமக்குத் தெரியாது. இன்று நாம் காணும் அப்பெருமானது திருவுருவம் கற்பனையானது; வரலாறும் கட்டுக்கதையே. திருக்குறள் நூலாலேதான் அவரை நாம் நன்கு கண்டறியலாம். அவர் அக்கால அரசாங்கத்தில் பெரிய அலுவலராக இருந்து அரசியல் துறையும் போர் முறையும் மருத்துவக்கலையும் இன்னபிறவும் நன்கு அறிந்தவர்; காதல் தன்மையும் தெரிந்தவர். அவருக்குத் தாயின் இடமும், குழந்தையின் இடமும் பேரன்பு இருந்தது. நீண்ட காலம் குழந்தை இல்லாமல் அவர் குழந்தைச் செல்வத்தை அடைந்தவர் போலும். இக்கவிஞர் தம் இளமைப் பருவத்திலிருந்தே மக்களை நன்கு அறிந்து அவர்களுக்குஇருக்கக்கூடிய குறைகளை நிறைய அறிந்து தமக்கு ஒய்வு கிடைத்தபோதெல்லாம் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை ஏறக்குறைய முப்பதாண்டுகளாக எழுதிவைத்திருந்து பின்பு அவைகளைத் தொகுத்து அதிகாரங்களாய் அடைவு செய்து முப்பாலாக வகுத்து உலகுக்குத் திருக்குறள் நூலை என்றும் நின்று நிலவுமாறு ஈந்திருக்கிறார் என்பதைத் திருக்குறளாலே அறிகிறோம்.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" [குறள்
(வான் சிறப்பு—2வது அதிகாரம்)

என்னும் குறட்பா, சொல்லின்பத்தை இயற்கையாக விரும்பும் இளமைப் பருவத்தில் ஏறக்குறைய 25 வயதில் பாடப்பட்டிருத்தல் வேண்டும். மருந்து என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் உணவு சீரணமாவதில் இன்பம் காண்பதைப்பல முறை வற்புறுத்திக் கூறியிருப்பதோடல்லாமல் 133 வது அதிகாரத்திலும்,

"உணலினும் உண்ட(து)அறல் இனிது; காமம்
புணர்தலின் ஊடல் இனிது"

என்றும் பாடியிருக்கிறார். "உண்பதைக் காட்டிலும் உண்டது சீரணமாவதில் இன்பம் உண்டு, புணர்தலைப் பார்க்கிலும் ஊடல் நடத்திப் பின்பு கூடலில் இன்பம் உண்டு" என்பது இக்குறட்பாவின் திரண்ட கருத்து. இக்குறட்பாவைப் பாடியபோது வள்ளுவருக்கு வயது 55 இருக்கும் என்று உய்த்துணரலாம். இப்படிக் கூறுவது வள்ளுவருக்கு இழுக்காகாது. சிறப்பாகும் பெருமையுமாகும். மில்டன் என்ற ஆங்கிலப் பெருங் கவிஞர் தமது உலகப் பெருங் காப்பியத்தை 1638இல் தொடங்கி 1664இல் 26 ஆண்டுகளுக்குப் பின் முடித்ததாய் அவர் வரலாறு கூறுவது அறிக.

இப்படி நீண்ட காலம் சிந்தித்துச் சிந்தித்து இயற்றிய நூலாகலின் திருக்குறள் எக்காலத்தும் வாழ்க்கைக் கடலைக் கடந்து இன்பக் கரையை அடைய வழி காட்டும் கலங்கரை விளக்காக 2000 ஆண்டுகளாக வழிகாட்டிக்கொண்டு வந்திருக்கிறது, அப்படி என்ன வழி காட்டுகிறார் வள்ளுவர் என்று வினவலாம். எத்தனையோ அறிஞர்களும் கவிஞர்களும் "வாழ்வாவது மாயம், நாளை மண்ணாவது திண்ணம்" என்று கூறியுள்ளார்கள். ஆனால் வள்ளுவரோ "உலகம் நிலையற்றது, செல்வம், நிலையற்றது" என்றும் "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை, என்னும், பெருமை உடைத்து இவ்வுலகு"

என்றும் குறிப்பிடினும், 'வாழ்வு வாழ்வதற் குரியது', 'வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத் துள் வைக்கப்படும்', என்றும்; உடம்பு பெற்றான் தேடித்து உய்க்குமாறு உண்ட உணவு சீரண மானது அறிந்து நல்ல உணவு உண்டு பொரு ளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளைத் தேடிப் பேராசை கொள்ளாமல், திருமணம் செய்துகொண்டு, மக்களைப் பெற்று, சமுதாயத் துக்குத் தேடிய பொருளைப் பயன் படுத்தி, அற வழியில் வாழ்ந்த பின்பு அக்கால நிலையில் நாற் பது வயதுக்குமேல் விரும்பினால் உண்மையான உள்ளத்துறவு கொண்டு வாழ்க என்றும், பிற ரினும் வேறுபட்டுக் கூறியிருப்பதுதான் அவ ருக்குரிய தனிச் சிறப்பாகும். வள்ளுவர் கூறு வதை மூன்று சொல்லாலே சொல்ல வேண்டு மாயின் அறம், அன்பு, அறிவு, என்று குறிப்பிட லாம். 'காதலனாயிருப்பினும் சரி காதலியா யிருப்பினும் சரி, கணவனாயிருப்பினும் சரி, மனைவியாயிருப்பினும் சரி, அரசனாய் இருப் பினும் சரி, ஆன்ற துறவியாயிருப்பினும் சரி, வீரனாயிருப்பினும் சரி, தூதனாயிருப்பினும் சரி எவரும் அறவழியில் நின்று அன்பு காட்டி அறிவோடு நடந்து கொள்ளவேண்டும் என் பதே வள்ளுவர் நோக்கமாகும்.

எவரையும் இளமையிலேயே வள்ளுவர் துறந்துவிடச் சொல்லவில்லை. ஏறக்குறைய எல் லாருமே சமுதாயத்தில் பயனுள்ளவர்களாய் இருக்கும் பொருட்டு மணஞ் செய்து கொள்ள வேண்டும் என்று வாழ்க்கைத் துணை நலம் என் னும் அதிகாரத்தில் கூறியிருப்பதோடு நில்லாது, நன்றியில் செல்வம் என்னும் 101வது அதிகாரத் திலும் உவமை வாயிலாக,

"அற்றார்க்(கு) ஒன்று ஆற்றாதான்
செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள் மூத்தற்று"

என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம். ஒன்றுமற்ற வறியவனுக்குப் பயன்படாத ஒருவனது செல்வம், மிகுந்த அழகுள்ள ஒரு நங்கை மணந்து கொள்ளாது கிழவியாய்ப் போனது போலாகும் என்று, இங்கு வள்ளுவர் குறிப்பிட்டிருப்பதைக் காண்க. இதனால் சமுதாயத்தில் பெரும்பாலோர்க்கு மண வாழ்வு பயனுடையது என்பது வள்ளுவர் கருத்தாகும்.

அப்படி ஒருவன் மணஞ்செய்து வாழுங் கால் மனைவியிடம் அன்புகாட்டி, பேராசைக்கு இரையாகாமல், ஒழுக்கத்தை மறவாமல், மக்க ளைப் பெற்று அவர்களுக்குக் கல்வி புகட்டும் கடமையை ஆற்றி, பிறர் ஆக்கத்தில் பொறாமை கொள்ளாது, பிறரைப்பின்னால் பழித்துக்கூறாது, பயனில் சொற்களைக் கூறாமல், தீயசெயல் செய் வதற்கு அஞ்சிப் பிறர்க்கு உதவி செய்யும் பண் புடையவனாய் வாழவேண்டும். கற்பு என்பது இருபாலார்க்கும் பொது. ஆண் மகனுக்குப் பிறர் மனை நோக்காத பேராண்மை வேண்டும், பெண் மகளுக்கோ கற்பு என்னும் மனத்திண்மை யாகிய உறுதி வேண்டும். பெண்ணுக்குக் கற்பு வேண்டுமென்று அவளை வீட்டுக்குள் வைத்து வெளியே போக விடாமல் செய்வது கூடாது. சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர் நிறை காக்கும் காப்பே தலையாகும். கணவன் மனைவியிடம் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும். மனைவியும் ஊடலை அளவு கடந்து செய்தல்கூடாது. மனைவி கணவனது வருவாய்க் குத் தக்கவாறு செலவு செய்பவளாக இருக்க வேண்டும். வருவாய் சிறியதாயிருக்கச் செல வினத்தைப் பெருக்கி விட்டால் குடும்பம் அழிந்து விடும். ஆகாறு அளவு இட்டிதாயி னும் கேடில்லை போகாறு அகலாக்கடை. பொருளை அறவழியிலே தேடிச் சிக்கனமாகச் செலவு செய்து வாழவேண்டும். வணிகனாக இருந்தாலும் முறையற்ற வழியில் பிறர் அழும் படியாக வாணிகம் செய்து பொருள் தேடினால் அப்பொருள் அழிந்துவிடும். அழக்கொண்டது அழப்போம். இப்படியெல்லாம் வள்ளுவர் வாழும் நெறிகளைக் கூறியிருப்பது காண்க.

அறம் என்பது ஒருவர்க்குப் பிச்சையிடுவது மட்டும் ஆகாது; கிருத்திகையன்று திருத்தணிக் குப்போய் அங்கு பத்துப்பண்டாரங்களுக்குஉண வளிப்பது மட்டும் ஆகாது. உள்ளத்தில் மாசு இல்லாமல் இருப்பதே அறமாகும். பொறாமை; பேராசை, கடுஞ்சினம், கடுஞ்சொல் இவற்றைக் கொள்ளாமல் வாழ்க்கை நடத்துவதும் அறமாகும். துன்பம் வந்தால் நடுநடுங்கி உள்ளம் உடைந்து விடுவது கூடாது. துன்பத்தைக் கண்டு சிரித்து விட வேண்டும். இடுக்கண் வருங்கால் நகுக. சிரிப்பே அந்தத்துன்பத்தைச் சிதறடித்துவிடும். 'விதி விதி' என்று விதியின்மேல் பழி போட்டுச் சோம்பியிருத்தலாகாது. விதி என்று ஒன்று உண்டு. இதனை ஊழ் என்பர். இவ்வூழ் இருவகைப்படும். ஆகூழ் என்பது ஒன்று; போகூழ்என்பது மற்றொன்று. ஆகூழ் நன்மை

செய்வது, போகூழ் தீமை செய்வது. போகூழாயிருப்பினும் அதனை எதிர்த்துப் போராடினல் உறுதியாக ஒருவன் வெற்றிகாண முடியும். முடியாதென்பதில்லை; தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும். முயற்சி திருவினையாக்கும். முயற்சி இல்லாமை வறுமையில்புகுத்திவிடும். ஊழ்வினை இல்லையென்பது பழியன்று. அறியவேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாதிருப்பதே பழி.

"பொறியின்மை யார்க்கும் பழியன்(று);
அறி(வு) அறிந்(து)
ஆள்வினை இன்மை பழி"

என்றறிந்து ஊக்கம் கொண்டு ஆக்கவழியில் ஈடுபட்டு முயற்சி செய்து, இடர்களைக் கடந்து இன்பமாக வாழவேண்டும்.

இக்காலத்தில் வணிகர் பலர் தீயவழிகளைப் பின்பற்றி மக்களை ஏமாற்றிப் பணந்தேடி வாழ முயல்கின்றனர். அரிசியில் வேண்டுமென்றே அரிசிபோலவே கல்லை உடைத்து வைத்திருந்து கலத்தல், உளுந்தில் களிமண் உருண்டை செய்து கலத்தல். மட்டமான காப்பிக் கொட்டைக்கு நல்ல நிறம் பூசி முதல் வகைக் காப்பிக்கொட்டை என்று சொல்லி விற்றல், தேயிலையில் மஞ்சணத்தி இலையை வறுத்துக் கலத்தல், நல்லமிளகில் பருத்திக்கொட்டையைக் கலத்தல், நல்லெண்ணெயில் ரப்பர்க்கொட்டை எண்ணெயைக் கலத்தல், மஞ்சள் பொடியில் ஈயத்தூளைக் கலத்தல், வெண்ணெயிலும் நெய்யிலும் ஆட்டுக்கொழுப்பைக் கலத்தல், வனஸ்பதி டின்னின் அடிப்பாகத்தை எடுத்துவிட்டு அந்த டின்னிலிருந்து ஒரு பகுதி வனஸ்பதியை வெளியே எடுத்துவிட்டுக் கொழுப்புக் கலந்த வனஸ்பதியைப்போட்டு அடைத்துமுன் போல அடிப்பாகத்தைப் பற்றவைத்து நல்ல வனஸ்பதியென்று விற்றல், வேர்க்கடலைப் பருப்பால் 'அல்வா' செய்து பாதம் கொட்டை 'எஸன்சை'த் தெளித்து பாதம் அல்வா என்று விற்றல், லிட்டர், கிலோ முதலிய அளவுகளைத் தேய்த்து எடை போடல், தரமற்ற மருந்துகளைச் செய்து விற்றல், சுண்ணும்பு கலந்து செய்த பொருளை 'விட்டமின்' மாத்திரைகள் என்று விற்றல் ஆகிய படுமோசங்கள் வாணிக உலகில் நடைபெறுகின்றன. இப்படிச் செய்து தேடும் பணம் நிற்குமா? இத்தகையோரும் கோயில்களில் அறம் செய்கிருர்கள். இவர்கள் செய்வது அறமாகுமா? மேலை நாடுகளில் இத்தகைய படுமோசங்கள் நடைபெறுவதில்லை. இப்படி மோசம் செய்யாமல் வாழவேண்டுமென்ருல் இத்தகையோரிடமும் திருவள்ளுவர் கூறிய அறவுரைகள் நடமாடவேண்டும். வள்ளுவர் கருத்துக்கள் இந்தத் தீய உலகில் நடமாடுமானல் ஒரு சிலராவது திருந்தக்கூடும்.

ஒரு காலத்தில் சிற்றூர்கள் நல்ல நிலையில் இருந்தன. திருடுகள் இச்சிற்றூர்களில் நடந்ததில்லை. இச்சிற்றூர்களில் பண்புள்ள மக்கள் வாழ்ந்திருந்தார்கள். அந்நிலை இன்று மறைந்துவிட்டது. வடமொழி வேதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த அறிஞர் மாக்ஸ்முல்லர் கி. பி. 18ஆம் நூற்ருண்டில் மாவட்ட ஆட்சியாளர்களாக வந்த கலெக்டர்களுக்கு இந்திய நாட்டைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவுகளில் 'மண்ணுலகில் ஒரு விண்ணுலகம்' உண்டு என்ருல் இதோ! இதோ! இந்தியாவைக் காட்டுவேன். அந்நாட்டில் உள்ள கிராமங்களில் வீடுகளுக்குப் பூட்டுப் போடுவதில்லை. ஆனல் ஒரு பொருளும் களவு போவதில்லை" என்று கி. பி. 18ஆம் நூற்ருண்டில் நம் சிற்றூர்களில் இருந்த செம்மை நிலையைக் கூறியிருப்பதைக் காணும்போது அந்த நிலை இன்று வருமா என்று ஏங்குகிருேம். திருவள்ளுவரின் திருக்குறட் கருத்துக்களை மக்கள் அறிந்து கடைப்பிடிக்க முற்படுவார்களாயின், உலகம் ஓரளவேனும் திருந்தும் என்பது திண்ணம்.

வள்ளுவம் வாழ்க !

வள்ளுவர் கண்ட வாழ்க்கைநெறி எங்கும் பரவுக

ஐயனார்

சிவயோகி திரு. மா. இரத்தினசபாபதிபிள்ளை அவர்கள்,
திருவாரூர்.

முன்னுரை:

பரப்பிரம்மத்தைச் சைவர்கள் சிவம் என்று கூறுகின்றனர். சாக்தர்கள் பராசக்தி என்று கூறுகின்றனர். சௌரசமயத்தினர் சூரியன் என்று கூறுகின்றனர். காணுபத்தியம் கணபதி என்று கூறுகின்றது. கௌமாரம் குமரன் என்று கூறுகின்றது. வைஷ்ணவம் விஷ்ணு என்று கூறுகின்றது. அப்படியாகக் கூறினும், அவை களுள் அவ்வவ் வகுப்பிலும் உபதேவதைகள் உள்ளன. சைவத்தில் சிவத்திற்குப் பிரதானம் கொடுத்தாலும், ஏனைய ஐந்து மூர்த்தங்களும் சைவ வழிபாட்டில் ஆலயங்களில் இடம்பெறும். அரசாங்கம் என்ற மூலம் ஒன்ருயினும், அதன் ஆளுகை செல்லுமிடம், இருந்து அரசாளும் கோட்டை, உள்விவகாரங்களைப் பாதுகாக்கக் காவல்துறை, வெளி விவகாரங்களைப் பாது காக்க இராணுவத்துறை, வருவாய்த்துறை, மந்திராலோசனை செய்யும் மந்திரிகள் என நிர் வாகத்தில் பலர் உள்ளனர். அதுபோலவே தேவ சேனுதிபதியாக விளங்குபவர் குமரன். காவல் துறையில் விளங்குபவர் ஐயனுர் ஆவார். இருவரும் சிவகுமாரர்களே ஆவர். உமைக்கும் சங்கரனுக்கும் தோன்றியவர்குமாரர். திருமாலுக் கும் சங்கரனுக்கும் தோன்றியவர் ஐயனுர். ஐயனுர்க்குச் சாஸ்தா, சாத்தா, சாத்தன், சாத் தனுர் என்றும் பெயர்கள் வழங்கும்.

> பார்த்தனுக்கு அருளும் வைத்தார்
> பாம்பரை ஆட வைத்தார்
> சாத்தனை மகனு வைத்தார்
> சாமுண்டி சாம வேதம்
>
> கூத்தொடும் பாட வைத்தார்
> கோளரா மதியம் நல்ல
> தீர்த்தமும் சடைமேல் வைத்தார்
> திருப்பயற் றூர னரே.
>
> —திருநாவுக்கரசர்.

ஐயனுர் பிறப்பு :

முன்ஞெரு காலத்தில் சம்புவை நோக்கி ஓர் அசுரன் கடுந்தவம் செய்து, ஒரு விந்தையான வரத்தைப் பெற்ருன். அவ்வரம் யாதெனில் யார் தலையில் அவ் அசுரன் கை பட்டாலும், அவர்கள் பஸ்பமாய் விடவேண்டும் என்பதே யாகும். எப்பொழுதும் அசுரர்கள் கூட்டம் அதிகம். அவர்கள் அதிக சுயபலங் கொண்ட வர்கள். தேவர்கள் கூட்டம் குறைவு. சுய பலமும் குறைந்தவர்கள். எப்பொழுதும் அசுரர் கள் தேவர்களது ஆட்சியைக் கைப்பற்றுவதும், அவர்களை இம்சிப்பதும் நடைபெறும். அதனுல் தேவர்கள் மிக வல்லமையுள்ள விஷ்ணுவை யோ சம்புவையோ நாடி உதவி கோருவர். இவ் வகையில் யாரையும் பஸ்பமாக்க வேண்டும் என்ற வரத்தைப் பெற்ற அசுரனைப் பஸ்மா சூரன் என்றனர்.

இந்த வரத்தைப் பெற்றவுடனே, சிவ பிரான் தலையில் அவ் அசுரன் கையை வைக் கத் தாவினுன். தாவினவுடனே சிவபிரான் மறைந்துவிட்டார். தேவர்கள் விட்டுணுவிடம் சென்று இந்த அபாயகரமான அசுரனை ஒழிக்கக் கோரினர். விட்டுணு ஜகன்மோகினி வடிவுடன் அசுரன் முன் தோன்றினர். அசுரன் காமவசப் பட்டு மோகினியைத் தழுவ விரைந்தான். அப் போது மோகினி ''பெரிய தவம் செய்து, அரு மையான வரத்தைப்பெற்ற உன்புகழ் கேட்டே நான் உன்னை அணுகியுள்ளேன். உன் நீண்ட காலத்தவத்தினுல் உடலில் அசுத்தம் மிக்குள் ளது. நீராடிப் பரிசுத்தமாய் வந்து என்னைத் தழுவலாம்'' என்று கூறவே, நீராடிவரச் சென் சென்ருன். அவன் எங்கெங்கு அலைந்தாலும், நீர் நிலை கிட்டாமல் கடைசியில் ஒரு சிறு குட் டையைக் கண்டான். அதில் இறங்கிக் கை யினுல் நீரை எடுத்து ஒவ்வொரு அங்கமாகச்

சுத்தம் செய்துகொண்டு, தலையில் சுத்தம் செய்ய எத்தனித்தபோதுசாம்பராயினன். துர்க் குணமுடையோர் அவரவர் தீய குணத்தாலே அழிவர் என்ற நியாயப்படி, அசுரனை விஷ்ணு வஞ்சகமாய் அழித்துவிட்டுச் சிவபிரான் இருக்குமிடம் சென்று சிவபிரானை வெளிவரும் படி செய்து, அசுரன் அழிந்த வரலாற்றைக் கூறவே, சிவபிரான் மோகினியின் பேரழகைப் பார்க்க விரும்பினர். விட்டுணுவும் மோகினி வடிவில் விளங்கினர். அம்மோகினி வடிவான திருமாலுடன் கூடிப்பிறந்தவர் ஐயனர் ஆவர். அதனல் அவர் அரியரபுத்திரர் என்று அழைக்கப்படுவாராயினர். அரியரபுத்திர ருக்கு ஊர்கள்தோறும் விளங்கி அறத்தைப் பாதுகாக்க உத்திரவிட்டுச் சிவபிரானும் திருமாலும் மறைந்தனர். ஐயனர் அறத்தைக் காப்பவராகத் தமிழ்நாட்டிலும் கேரளதேசத்தி லும் ஊர்தோறும் விளங்குகின்றர்.

குமரனைப் பாலசுப்பிரமணியன், வள்ளி தேவசேனமணவாளன், தண்டாயுதபாணி, ஆறுமுகன் என்று எவ்விதம் அழைக்கின்றே மோ, அவ்விதமே சாத்தரும் பல்வேறு கோலத் தில் அழைக்கப்படுகிறர். சாத்தர் பாலசாத்தர் மகாசாத்தர் வீணசாத்தர் யோகசாத்தர் தர்ம சாத்தர் எனப்பலவாறன திருக்கோலத்தில் ஐயனர் வழிபடப்பட்டு வருகின்றர்.

தமிழ்நாட்டில் வழங்கும் ஐயனரின் பெயரும் விளக்கமும்:

1. ஐயன்—ஐயனர்—வணங்கத்தக்கவன்.
2. காரி—கரிய நிறமுடையவன்.
3. கடல்வண்ணன்—நீலநிறமுள்ளவன்.
4. சாத்தா—துட்டரைத் தண்டிப்பவன்.
5. பூரணை கேள்வன்—பூரணைஎன்ருல் நிறைந்த சத்தி. இது உயிரைக் குறிக்கும். உயிரி னங்களுக்குத் தலைவன் பூரணையின் மண வாளன்.
6. புட்கலைமணவாளன்—புட்கலம் என்ருல் தேகம். பிருதிவி மயமான தேகமுடைய சத்திக்கு மணவாளன்.
7. யோகி—யோகத்தை அறிந்தவன். நிர்மல சத்துவபரிமணும ரூபமாகிய சித்தவிருத்தி களை அந்தர்முகமாக்கிக் காரிய ரூபமான தேகத்தைக் காரணமான உயிரில் ஒடுக்கும் ஆற்றல் பெற்றவன்.
8. மாசாத்தன்—மகானுக்கிரக முடையவன். துட்டரையும், தவறு செய்பவரையும் நன்கு தண்டிப்பவன்.
9. செண்டாயுதன்—செண்டு என்ருல் குதிரை ஓட்டும் சவுக்குக்குப் பெயர். தேகத்தில் உள்ள உயிர் இயக்கத்தைக் குதிரையாகக் கூறுவது யோக மரபு. பிராண சத்தியே குதிரையாகும். அதை முறைதப்படுத்திச் செலுத்தச் சவுக்கைக் கையில்ஏந்தியவன்.
10. வெள்ளையானையூர்தி—யோக பரிபாடையில் இந்திரியங்களை யானையாகக் கூறுவது யோக மரபு. அவைகள் பரிசுத்தமான போது வெள்ளையானை என்ற பிரணவ தேகம் உண்டாகும். அத்தகைய பிரணவ சொரூபமான வெள்ளையானையின் மீது ஆரோகணித்துச் செல்பவன். 'தாளி அறுகின் தாரோய் போற்றி'' என்பது திரு வாசகம் போற்றித் திருவகவல். (இ-ள்) பக்குவப்பட்டயானையைச் செலுத்துபவனே போற்றி என்பது. தாளி—பக்குவப்படுத் தல். அறுகு—யானை. தார்—அங்குசம்.
11. ஆரியன்—பூசிக்கத்தக்கவன், குரு.
12. அறத்தைக்காப்போன்—தருமத்தை நிலை நிறுத்துபவன். இந்நாளிலும் அரசாங்கத் தில் கிடைக்க முடியாத நியாயத்தை வழங் கும் ஐயன் சந்நிதிகள் பல உள்ளன.
13. அரிஅர குமரன்—விஷ்ணுவுக்கும் அரனுக் கும் உதித்தவர்.
13. சேவகனர்—சிவ சந்நிதியில் சேவகம் செய்ப வர். சிவசக்கரத்தில் உச்சாடனம் செய்ய ஐயன் கோட்டமே கூறப்பட்டுள்ளது.

> "சேவகனுகித் திண்சிலை ஏந்திப்
> பாவகம் பலபல காட்டிய பரிசும்''

என்பது கீர்த்தித் திருவகவல், திருவாசகம். சாத்தருக்கு உரிய புவனம் பூமித் தத்துவத்தில் கீழ்த்திசையாகும்.

தத்துவவிளக்கம்:

அண்டத்தில் கூறப்பட்டவைகள் எல்லாம் பிண்டத்திலும் சூக்குமமாய் உள்ளன. புட்கலை என்ற சத்திக்கு மணவாளன் என்ருல், தேகத் திற்குத் தலைவன் என்று பொருள். தேகதர்மம்

பிராணஅபானன் சேர்க்கையால் தசவாயுக்களாக இயக்கப்படுகிறது. வாயுக்கள் மனம் எவ்விதம் பாவிக்கிறதோ அவ்விதம் இயக்கப்படுகிறது. வாயுக்கள் மனம் எவ்விதம் பாவிக்கிறதோ அவ்விதம் இயக்கம்பெற்றுத்துட்டக் குதிரையாகவோ நல்ல குதிரையாகவோ ஆகக்கூடும். அத்தகைய பிராண இயக்கத்தை அவனை எண்ணுபவர் மனத்தில் பொருந்தி நல்ல முறையில் நடப்பிப்பவன்.

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற்
றென்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாது
போய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே.
—திருமந்திரம், 564.

தேகத்தில் உள்ள பிராண அபான இயக்கத்திற்குக் காரணம், மனிதனின் மனமண்டலமாகும். மனமண்டலம் மனிதனைச் சூழத் தொம்பைக் கூடுபோல் உள்ள அண்டகோசத்தினுலாயது. அது மனிதனை ஒரு முழ அளவில் மேல்கீழ்ப் பக்கங்களிற் சூழ்ந்துள்ள ஆகாயமண்டலமாகும். இந்த ஆகாயமண்டலத்தைச் சீவன் இடமாகக் கொண்டு இதைப் பிரணவம் என்ற பெயரால் அழைப்பர். தேகத்தின் சிருட் டி திதி ஒடுக்கம் எல்லாம் இதற்குள்ளே நடைபெறும். இது ஆணவம், கன்மம் மாயை என்ற மும்மலப் பிணிப்புண்டபோது காரிருளாய் விளங்கும். மும்மலம் அகன்றவருக்கு இதுவே வெண்ணிற ஒளியுடன் விளங்கும். அதில் விளங்குபவன் தேகியானபடியால் அதைப் 'பூரணை' என்ற சத்தியாகக் கூறினுர்கள். பூரணை என்ருல் நிறைமதிநாள் என்று பொருள். சந்திர மண்டலம் என்பது தோளுக்கு மேலுள்ள பிரதேசமாகும். அவ்வொளியில் அறிவாய் வீளங்குபவன் ஆதல் பற்றிப் 'பூரணை கேள்வன்' எனப்பட்டார். வெள்ளையானை ஊர்தி என்பதற்கும் இதுவே பொருள். பூரணையும் புட்கலையும் சாத்தாவின் இரு சத்திகளாகும். இத்தத்துவ உண்மையை உணர்த்த, ஐயனுர் ஆலயத்தில் யானைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

சாத்தா கவசம்:

அரசாங்க நிர்வாகத்தில் தக்க சாட்சியில்லாது அசக்தராக உள்ளவர் தருமத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. அந்தர்யாமியாக எல்லாவற்றையும் அறிபவன் ஆனபடியால், பல இடங்களில் ஐயன் சந்நிதி பிரசித்தம் ஆக விளங்கிக் கொண்டுள்ளது. சிதம்பர வித்தையில் புத்திர விருத்திக்கு சாத்தாயந்திரம் கட்டும்படி கூறப்பட்டுள்ளது. பிரணவம் விந்து நாதமயமானது. அதிலிருந்து நடப்பிப்பவன் ஆனபடியால், தேகத்தை வெல்ல யோகியர்க்கு உபாசனு மூர்த்தமாக ஐயனுர் விளங்குகின்ருர். அதனுல் யோக மூர்த்தமாகவும் இருந்து உதவுபவர் மகா சாஸ்தாவாக விளங்குகின்ருர். மனிதன் தனது சூழ்நிலை காரணமாகப் பலவிதமான பயத்துக்குள்ளாகிருன். எதிர்பாராத பகைவர் கள்வர் புலி பாம்பு தீய விலங்குகள் முதலியவற்ருல் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும். சாத்தாவின்பக்தன் இவைகளிலிருந்து காப்பாற்றப்படுவான் என்று சாத்தாகவசம் கூறுகிறது.

"குதிரை மேலுள்ள சாஸ்தா சத்துரு நாசனம்செய்யும் குளிர்ந்த சந்திரமண்டலத்தில் வீணை புத்தகம் செபமாலை சின்முத்திரையுடன் விளங்குபவர். வாக்கு சித்தியை அளிப்பவர். யானை மீது ஆரோகணித்துக் கரும்புவில் மலரம்பு மாணிக்கப்பாத்திரத்தில் மது அபயம் ஏந்தியவராகத் தியானிக்கில் மூன்று உலகங்களும் மோகனம் அடையும். பூரணை புட்கலை ஆகிய தேவியருடன் கூடியுள்ள சாத்தனுரைத் தியானிக்கில் சர்வ காரியமும் சித்தியாகும்"

தேவரும் அசுரரும்:

வேதகால முனிவர்கள், வேதங்களில்கூறிய கருத்தைஅடிப்படையாகக் கொண்டேபுராணங்கள் கதாபாத்திரங்கள் ஆகியவற்றைச் சிருட்டித்து எளிதில் புரியும் வண்ணம் கருத்தை விளக்கினர். தேவர்களும் அசுரர்களும் காசிபராகிய தந்தைக்கு இரண்டு தாயின் வழியாகப் பிறந்தவர்கள். திதி என்பவள் மூத்த மனைவி. அவள் வழியில் வந்தோர்களே தைத்தியர் என்ற அசுரர் ஆயினர். இளைய மனைவி அதிதி. இவள் வழியில் வந்தவர் தேவர்கள். சொல்லின் பொருளைச் சிந்திக்க விளங்கும். ஒளியை விரும்புபவர் என்று பொருள். நிலைத்தவை என்ற பொருள் திதிக்கும் பொருந்தும். இவ்வுலகில் காணப்படுபவைகளே நிலைத்தவை என்பதும், அவைகளை, அடைந்து வாழ்வதே குறிக்கோள் என்பதுமே அசுரர் கொள்கை. இது இருள்நிலை. அதனுல் அவர்கள் மிகுந்த ஆசையுடன் கூடிப் பிறர் அழிவதையும் தாம் வாழ்

வதையும் குறிக்கோளாகக் கொண்டவர்கள். அதனுல் பிறரை அழிக்க விரும்பும் பலத்தையும், தாம் வாழ்வதையும் விரும்பினர். புராணங்கள் பல தடவைகளில் தேவர் உலகம் கைப்பற்றப் பட்டது எனக்கூறும். ஒவ்வொரு தடவையும் விஷ்ணுவையோ சங்கரனையோ உதவிக்கு வேண்டித் தங்களை நிலை நிறுத்தும் படி தேவர்கள் வேண்டியதாகக் கூறும். இதன் கருத்து அவர்கள் வாழ விரும்பியே உதவி கேட்டனர் என்பது. இவ்வுலகம் இருள் பொருந்தி நிலையாமையை உடையது; ஒளி உலகமே நிலைபேறுடையது என்ற கொள்கையுடையவர் தேவர். அதனுல் இவர்கள் ஒளியை விரும்பினபடியால் தேவர்களின் மரபாய், அதிதியின் மைந்தராயினர். இந்த இருசாராரும் வானுலகமாகக் கொண்டு, அவர்கள் கருத்தை முடிக்கின்றனர் என்பதை அறியவும். அசுரத்தனம் காமத்தை அடிப்படையாகக் கொண்டது. காமம் என்ருல் பெண்ணின்பால் செல்லும் விருப்பம் மாத்திரமல்ல. பொருள், அதிகாரம் போன்றவைகளும் அதன் கூறுகளே ஆகும். இராமாயண அடிப்படை அதிகாரமோகம். பாரத அடிப்படை மண்ணுசையாகும். இத்தகைய அசுரர்களும் தேவர்களும் அவர்களுக்கு வரம் கொடுத்தவனும், தேவர் உதவிக்கு வந்தவனும், எல்லாவற்றிற்கும் காரணமானவனும் நம்மிடம் உள்ளான் என்பதை அறிந்துகொள்ளவே மனிதன் பூமிக்கு வந்த காரியமாகும். கையைச் சிரசில் வைப்பது என்பது ஒரு குறியீட்டுச் சொல். சிவகுரு தனது சீடன்பால் கிருபைகொண்டு நீ உலகாசையை ஒழித்துவிட்டு ஒளி உலகம் செல்வாயாக என்று அனுக்கிரகிக்கும் சிவதீக்கைக்குப் பெயர். ஆசையுடன் கூடியபோது சிவத்தின் வரமே அழிவுச் சத்தியாய் அசுரனை அழித்தது என்பது பொருள்.

> நானென நீயென வேறில்லை நண்ணுதல்
> ஊனென வூனுயிர் என்ன வுடனின்றும்
> வானென வானவர் நின்று மனிதர்கள்
> தேனென இன்பந் திளைக்கின்ற வாறே
>
> —திருமந்திரம், 1788.

இப்புராணக் கருத்தைப் போல உள்ள பிருகதாரண்யக உபநிடதத்தில் வரும் கதையை விளக்குகிறேன். பிருகதாரண்ய உபநிடதம், அத்தியாயம்

பிருகதாரண்யக்கதை:

பிரசாபதியின் வம்சம் தேவர்கள் என்றும் அசுரர்கள் என்றும் இரு பிரிவாக உள்ளனர். தேவர் கூட்டம் சிறியது. அசுரர் கூட்டம் பெரியது. இவர்கள் எப்போதும் பகை உணர்ச்சி கொண்டு ஒருவரை ஒருவர் அழிக்க முயல்வர். எப்போதும் அசுரர்களே பலம் மிகுந்தவராக விளங்கினர். அவர்கள் பல தடவைகளில் தேவ உலகத்தைக் கைப்பற்றவும் செய்தனர். தேவர்கள் மனிதனிடம் உள்ள வாக்கைத் தங்கள் நன்மைக்காகப் பிரார்த்திக்கும்படி கேட்டனர். வாக்கும் அதற்கு இணங்கியது. பிரம்மத்தை நல்ல சொற்களால் புகழ்ந்து கொண்டிருந்தது. அசுரர்கள் இதைக்கண்டு இதை இப்படியே விட்டுவிட்டால் தேவர் பலங்கொண்டு விடுவர் என்று கருதி, வாக்கை உலகமயமாகத் திருப்பத் தூண்டினர். வாக்கு நல்ல காரியத்தினின்றும் உலகமயமான பேச்சுக்களைப் பேச ஆரம்பித்தது. இது சமயம் பார்த்து அசுரர் தேவரை வீழ்த்திவிட்டனர்.

பின்னர் தேவர்கள் மூக்கைப்பார்த்து எங்கள் நலங்கருதி நல்ல வாசனையை முகர்ந்து எங்களுக்கு உதவி புரிவாயாக என்று கேட்டனர். மூக்கு சிறிது நேரம் நறுமணத்தில் ஈடுபட்டதும் அசுரர்கள் அதை அலுப்படையும்படி செய்து கெட்டவாசனையின்வழித்திருப்பிவிட்டுத்தேவர்களை வீழ்த்திவிட்டனர். பிறகு தேவர்கள் கண்ணைப் பார்த்து நல்லவைகளைப் பார்த்து எங்களுக்குப்பலம் வரும்படி செய்வாயாக என்று கேட்டனர். கண்களும் ஒப்புக்கொண்டு சிறிது நேரம் நல்ல காட்சியைப் பார்த்ததைக் கண்டு அசுரர்கள் கண்ணை நற்காட்சியினின்றும் திருப்பிவிட்டுத் தேவர்களை வீழ்த்தி விட்டனர்.

பிறகு தேவர்கள் காதுகளை நல்லவற்றையே கேட்டுத் தங்களுக்குப் பலம் தருமாறு கேட்டுக் கொண்டனர். காதுகளும் இசைந்து அவ்விதமே பிரம்ம விசாரணை போன்றவைகளைக் கேட்டுத் தேவர்களுக்கு வலுவூட்டின. அசுரர் காதுகளை உலக மயமானவற்றைக் கேட்கும்படித் தூண்டினதும் தேவர்கள் வலுவிழந்தனர். அது சமயம் அசுரர்கள் தேவர்களைத் தோற்கடித்தனர். பிறகு தேவர்கள் மனதை நோக்கிச் சத்துப் பொருளைச் சிந்தித்துத் தங்களுக்குப் பலம் கொடுக்குமாறு வேண்டிக் கொண்டனர். மனமும் ஒப்புக் கொண்டு அவ்விதம் செய்தது. இதை அறிந்து அசுரர்கள் மனத்தை உலகமயமாகத் திருப்பினர். அது சமயம் தேவர்கள்

பலங்குறையவே தேவர்களை அசுரர்கள் வீழ்த்திவிட்டனர்.

உருத்திரர் அம்சம்:

பேச்சால் வாசனையால் பார்வையால் கேள்வியால் சிந்தனையால் தேவர்கள் பலம் பெறுவதை, அசுரர் ஆற்றலினல் தடுத்துத் தேவர்களை வெற்றி கண்டனர். இறுதியாகத் தேவர்கள் பிராணனின் அம்சமாகிய வாயினின்றும் புறப்படும் உதானனைத் தங்களுக்கு உதவுமாறு கேட்டனர். அது சம்மதித்துத் தொண்டையின் உட்புறமிருந்து மேல்நோக்கிச் சிரசை நோக்கிப் பாய ஆரம்பித்தது. அசுரர்கள் பலங்குறைவதைக்கண்டு உதானவாயுவை எதிர்த்தனர். இதுகாறும் பெற்ற வெற்றிபோல இப்போது கிட்டாததுடன் மலையுடன் மோதிய மண்ணுங்கட்டி போல் பொடிப்பொடியாய் வீழ்ந்தழிந்தனர். தேவர்கள் ஆதிக்கியம் பெற்றனர். இந்த உண்மையை எவன் அறிகிருனே, அவன் மெய்ப்பொருளாக மாறித் தேவனுவான். தேவர்கள் வெற்றிபெற்ற பிறகு நமக்கு வெற்றியை அளித்துத் தேவபூமியை வழங்கினவன், நம் வாய்க்குள்ளிருக்கும் ஆயஸ்ய அங்கிரஸேயாகும். அதுவே எல்லா உறுப்புக்களிலும் சிறந்தது என்று முடிவுக்கு வந்தனர். ஆயஸ்ய என்ருல் ஆகாய ரூபமான, கருவியில்லாது ஓசையை உண்டாக்குவது என்று பொருள். இதை அநாகதம் என்பர். ஆகதம் அடித்தல்; அநாகதம் என்ருல் ஒன்ருெடொன்று உரசாதது என்று பொருள்! அநாகதத் தொனி என்ருல் அடிக்காமல் ஓசை எழுப்புதல் என்று பொருள்! அங்கிரச என்ருல் அங்கங்களின் சேஷ்டைக்குக் காரணமாயும் அவைகளை ஒடுக்குவதாகவும் உள்ள ஆகாயமயமான அக்கினிக்குப் பெயர். முன்னர் உதானனே பேச்சின் செயல்பட உதவினவன். அவனே மேலே சென்றபோது பிராணகதியை மாற்றியமைத்தது. இந்தத் தேவதையை "துர்" என்பர். இதன் வாசம் மரண எல்லைக்கு வெகு தொலைவில் உள்ளது. அதனுல் இதை அறிந்தவனுக்கும் மரணமில்லை. இந்த தேவதையே அசுரர் ஆட்சியை அழித்துத் தேவரரச்சியத்தைத் தேவர்களுக்கு அளித்தது. சாக்த வழிபாட்டில் குண்டலினியைத் துர்க்கையாக்கியுள்ளனர். சைவ வழிபாட்டில் உருத்திரனுகக் கொண்டுள்ளனர். உருத்திரர் அம்சமே ஐயனுர்.

சிவசக்தி:

இந்தத் தேவதை தேவர்களின் பழைய வினைகளை மாற்றி மரண பயத்தைக் கெடுத்து நித்திய உலகிற்குச்செல்ல உதவிற்று அதுமுதலில் வாயைப் பேசுவதினின்றும் பேசாமையாகிய மௌனத்திற்கு அழைத்துச் சென்று மரணத்தின் வாயிலிருந்து மீட்டது. பேசும் வாக்கே மௌனக்கிளியாகி மரண எல்லையைத் தாண்டி அழைத்துச் சென்று விட்டது. பிறகு அது மூக்கின் காரியத்தை மாற்றி உலக வாசனையினின்றும் விடுவித்து மரண எல்லையினின்றும் கடத்திற்று. பிறகு கண்ணை வெளிப்பார்வையினின்றும் இழுத்துக் கொண்டு உள்ளே பிரகாசிக்கச் செய்ததும் அது சூரியனுயிற்று. பிறகு காதுகளின் புறக் காரியத்தை மாற்றியதும் எல்லாத் திக்குகளையும் அதற்கு உரியதாக்கி மரணத்தினின்று மீட்டது. பிறகு மனத்தை இழுத்துக் கொண்டு சென்று சாவின் எல்லையைத் தாண்டி விட்டதும் அது சந்திரனுயிற்று.

ஆயஸ்ய அங்கீரச என்று ஏன் கூற வேண்டுமென்ருல், அதுவே தேகத்தின் கருவிகளுக்குச் சத்தாக இருந்து அவைகளைத் தொழிலில் விடுவதும் தொழிலிலிருந்து மீட்பதுமாக உள்ளது. அந்த அங்கிரசே பிரகஸ்பதி. இதுவே சிவ சத்தியாகும்.

சாமன்—என்று உபநிடதத்தில் உள்ளது. ச-பெண்பால்-வாக்கு (Speech), அம-ஆண்பால்-பேச உதவும் ஆற்றல் (Force). இதுவே எறும்பு கொசு யானை முதலாக உள்ள மூவுலக வாசியுமாகும். எவன் இதை அறிந்தானே அவன் சிவன் சக்தி உள்ள நித்திய உலகில் வாழ்வான். இதையே உத்கீதம் என்று வேதம் கூறுகிறது உத்-பேசுவதற்கு உதவும் ஆற்றல். கீதா-பேசும் மொழி. இவை இரண்டும் சேர்ந்து உத்கீதமாயிற்று. இதன் பொருள் சப்திப்பதைத் தூக்கி நிறுத்துவது (உத்-தூக்கி நிறுத்துவது, கீதா என்பது காய் என்ற தாதுவிலிருந்து வந்தது. இதன் பொருள் சப்திப்பது). சைவ பரிபாடையில் இதற்குச் சிரசில் உள்ள நாதம் என்று பெயர். இந்த சாமன் என்ற அக்கினியை அறிந்தவன், குரு ஸ்தானம் வகிக்கும் ஆற்றல் பெறுவான். தேவதைகள் அவன் விருப்பப்படி நடக்கும். இது பிருகதாரண்யக்கதை.

பரமயோகி:

இக்கதைக்கும் புராணக் கதைக்கும் உள்ள சம்பந்தம் அறிதலே இங்கு முக்கியம். உலகாசை யால் உந்தப்பட்ட பேச்சு, மூச்சு பார்வை கேள்வி மனம் உடையவன் அசுரன். அவன் காமாக்கினி காரணமாகச் சாவின் எல்லையை அடைந்தான். விஷ்ணுவின் காரியம், இரண்டு பொருள்கள் சேரும்படி ஒன்றை ஒன்று மோகிக்கும்படி செய்வதில் உலகின் திதி நிலை உள்ளது. மோகம் இல்லாதபோது உலகில் இன விருத்தியே இல்லை. அந்த மோகமே நித்தியப் பொருளானதில் அமைவதே சுயேச்சை பெருகி விசாரணை வலுவடைந்து முன்னர் சிருட்டித்துக் கொண்டிருந்த அசுர உலகம் அழியும். இதுவே தநுமானசி (தநு-உலகம். மானசி-மனம் நாசம்) ஆகும். இதன் மேல் பெறுவது சத்துவத்தில் பத்தி கொள்ளல் ஆகும். உலகப்பற்றும் ஒரு ஆசை தான், தெய்வப்பற்றும் ஒரு ஆசைதான். அதனாலே ஆசையைத் தூண்டும் ஜகன் மோகினி அசுரனை வஞ்சித்து அழித்தாள். அவளே நித்தியப் பொருளான சங்கரனைக் கூடி அரிஅரபுத்திரனை உலகுக்கு அளித்தாள். முக் கண்ணன் என்ற பெயர் ஞானதிருட்டியைக் குறிக்கும் சொல். பல மகாதேவர்களுக்கு ஆற்ற லிருந்தாலும், காரணத்தைக் கொண்டு கண்ணு தலாகிய சிவத்தையே குறிக்கும் ஒரு சொல் லாகும். அதுபோல யோகி என்ற சொல் அருகன், அரன், ஐயன் மூவரையே குறிக்கும் சொல்லாகும்.

ஊர்க்காவல் தெய்வம்:

ஐயனார் பரமயோகி என வழிபடத் தக்கவர். தொண்டையிலிருந்துசிரசைநோக்கிப் பாயும் ஊர்த்துவ கதியுடைய பிராணனே குதிரையாகும். அதில் ஆரோகணித்துச் செல்பவனே, தேகமாகிய ஊரைப் பாதுகாக்கும் ஐயனார் ஆகும். அவனே மதங்கொண்ட இந்திரியங்களாகிய யானையின் மீதும் ஊர்ந்து செல்பவன். அந்த அக்கினி சொரூப மானவனே குதிரையாகிய பிராணனைச் செலுத்தச் சவுக்கையும், இந்திரியங்களாகிய யானைகளைச் செலுத்த அங்குசத்தையும் உடையவன். அந்த அக்கினியே, தர்ம ரூபமாக ஒவ்வொருவரிடமும் உள்ளது. அந்த அக்கினியே உலகமயமான தேகமாக இருந்த போது இருண்ட அண்டகோசமாயிருந்தது. அதுவே பிரம்ம மயமானபோது வெள்ளையானை யில் ஊர்ந்து செல்பவனாக ஆயிற்று. ஐயன் ஊரைக் காப்பவனாக இருந்தும், அவன் ஊருக்குப் புறம்பே வாசம் செய்வதின் தத்துவம், பதார்த்த அபாவனை என்று கருத் தாகும். உலக நாட்டமற்ற யோகிக்கு வேண்டும்போதுதான் உலகம் செயல்படுவது. மற்றைய கால மல்லாம் நித்தியப் பொருளிலே உலகை மறந்து வாழ்வது என்ற பொருள்.

வாகனமும் விளக்கமும்:

ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு வாகனத்தைச் சிறப்பாகக் கூறி அவ்வாகனத்தில் ஊர்ந்து செல்பவனே என்று, பக்தர்கள் தோத்திரம் பாடிப் போற்றுகின்றனர். சிவத்திற்கு எருது, அம்பிகைக்குச் சிங்கம், முருகனுக்கு மயில், திருமாலுக்குக் கருடன் என்பதுபோல், குதிரையூர்தி என்றால் ஐயனாருக்கே சிறப்புடைய வாகனம் எனக் கொள்ளப்பட்டுத் தென்னாட்டில் குதிரை விடுதல் என்ற வழிபாடு, ஐயனார் கோவிலுக்கு நடைபெறுகிறது. சாத்தவர் என்றால் குதிரை வீரர்க்குப் பெயர். இவருடைய சேனைகள் குதிரை வீரர்களேயாவர். கடவுளை வழிபடு வோர் இறைவனைத் தனது அறிவில் பொருந்தித் தேகமாகிய கட்டை நீக்கும்படி வேண்டுவதே சிவாயநம என்பதில் நமவால் குறிக்கப்படும் குறியீடு. இறைவனுக்குத் தேகத்தை ஆசன மாக்கு என்பதேயாகும். அவ்விதம் செய்யின் சிவத்தின் புரம் கிட்டிச் சிவமாவர். சிவபுரம் கிட்டினபோது நமவாகிய பசுத்தன்மை போம். அறிந்தவர் சிவமேயாவர். இதனால் பெருமை யுள்ள மோனநிலை கிட்டிச் சிவமாகி மெய்யாகி வீடுபேற்றை அடைவர்.

நமவது வாசன மான பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவ தன்றாஞ்
சிவமாகு மாமோனம் சேர்தல்மெய் வீடே

-திருமந்திரம், 1013.

முடிவுரை:

காரண ரூபமாகச் சீவனின் விந்து மண்டலத்தில் இருப்பதே காரியரூபமாக உலகில் காணப்படுகின்ற, பல உறவாகவும் பொருள்களாகவும் உள்ளது. சிவபெருமானை "உண்ணும் உணவும், உடுக்கும் ஆடையும், அணியும் பொன் மணி முத்து எல்லாம் நீயாக இருந்தும், என் உள்ளத்துறைபவனாக இருந்து, இந்த தேக உறவையும் பற்றையும் துறப்பிக்க வல்ல இடப வாகனவூர்தியை யுடையவனே" என்று திருநாவுக்கரசர் முதலிய அடியவர்கள் போற்றுவர். இது எல்லா உபாசனையிலும் பொருந்தும் கருத்தேயாகும். ஊர் என்பது தேகத்தைக் குறிக்கும். ஊர்க் காவல்புரிவோன், தொண்டைக்கு மேல் செல்லும் பிராணவாயு (உதானன்) என்ற குதிரையில் ஊர்ந்து உயரச் சென்று, தேகத்தைக் காமாதி அறுபகைவர் களால் கெடாதுபாதுகாத்து சீவனுக்குத் தேவ ராச்சியம் என்ற ஒளி உலகை நிலையாக அறிவிப் பவன் என்று பொருள். அத்தகைய குதிரை வீரனாக விளங்கும் 'மெய்யாத்தூர் திருவரச மூர்த்தியை வணங்கி, நாம் நம் துயர் நீங்கி நற் பேறு பெற்று உய்வோமாக! ★

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

திரு. டாக்டர், ந. சுப்பு ரெட்டியார், M.A., Ph.D.,

தமிழ்ப் பேராசிரியர் — துறைத்தலைவர், திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

'நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப் பெறும் சிறந்த பக்திப் பனுவல் என்பதும், அது மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவரால் அருளிச் செய்யப்பெற்ற பாசுரங்கள் என்பதும், பக்திப் பாடல்கள் என்ற என்ற நூல்வகையில் இதனைப்போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிகமிகச் சிலவற்றைத்தான் கருதுதல் கூடும் என்பதும், யாவரும் அறிந்த செய்திகளாகும். இந்த நூலில் அடங்கியுள்ள பிரபந்தங்களின் தொகை பற்றியும் பாசுரங்களின் தொகை பற்றியும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவற்றை ஈண்டு ஆராய்வோம்.

காலவெள்ளத்தாலும் போற்றுவாரின்மையாலும் எப்படியோ மறைந்து போன இப்பாசுரங்களை நாதமுனிகள் என்ற வைணவப் பெரியார் அரும்பாடுபட்டுத் திரட்டி, வேத வியாசர் வேதங்களை நான்காக வகுத்துத் தொகுத்தது போல நாத முனிகளும் இப்பாசுரங்களை நான்கு தொகுதிகளாக்கி ஒவ்வொரு தொகுதியிலும் கிட்டத்தட்ட ஆயிரம் பாடல்கள் அடங்கியிருக்குமாறு அடைவு படுத்தினர். பாசுரங்களை அவர் இசைப்பா, 'இயற்பா' எனப்பிரித்து இசைப்பாக்களை மூன்று தொகுதிகளாகவும், இயற்பாக்களை ஒரு தொகுதியாகவும் அடைவுபடுத்தி வெளியிட்டார். அங்ஙனம் அடைவுபடுத்திய தொகுதிகள் வருமாறு.

(அ) இசைப்பாத் தொகுதிகள்

(முதலாயிரம் : இதில் அடங்கிய பிரபந்தங்களும் அவற்றிலடங்கிய பாசுரங்களின் தொகையும்.

	பிரபந்தம்	பாசுரத்தொகை
1.	பெரியாழ்வார் திருமொழி	437
2.	திருப்பாவை	30
3.	நாச்சியார் திருமொழி	143
4.	பெருமாள் திருமொழி	105
5.	திருச்சந்த விருத்தம்	120
6.	திருமாலை	45
7.	திருப்பள்ளி எழுச்சி	10
8.	அமலனாதிபிரான்	10
9.	கண்ணிநுண் சிறுத்தாம்பு	11
	ஆக பிரபந்தங்கள் 9க்குப் பாசுரங்கள் :	942

இவற்றுள் 1 எண்ணிட்டுள்ளது பெரியாழ்வாராலும்; 2, 3 எண்களிட்டுள்ளவை ஆண்டாளாலும்; 4 எண்ணிட்டுள்ளது குலசேகராழ்வாராலும்; 5 எண்ணிட்டுள்ளது திருமழிசைப் பிரானாலும்; 6, 7 எண்களிட்டுள்ளவை தொண்டரடிப் பொடிகளாலும்; 8 எண்ணிட்டுள்ளது திருப்பாணாழ்வாராலும்; 9 எண்ணிட்டுள்ளது மதுரகவிகளாலும் அருளிச் செய்யப் பெற்றவையாகும்.

(2) பெரிய திருமொழி : இதில் அடங்கிய பிரபந்தங்களும் பாசுரங்களின் தொகையும்.

	பிரபந்தம்	பாசுரத்தொகை
10.	பெரிய திருமொழி	1084
11.	திருக்குறுந்தாண்டகம்	20
12.	திருநெடுந்தாண்டகம்	30
	ஆக, பிரபந்தங்கள் 3 க்குப் பாசுரங்கள் :	1134

இம் மூன்று பிரபந்தங்களும் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றவையாகும்.

(3) திருவாய்மொழி : இதிலடங்கிய பிரபந்தமும் பாசுரத் தொகையும்

பிரபந்தம்	பாசுரத்தொகை
13. திருவாய் மொழி	1102
ஆக, பிரபந்தம் 1க்குப் பாசுரங்கள்	1102

இப் பிரபந்தம் நம்மாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றதாகும்.

(ஆ) இயற்பாத் தொகுதி

(4) இயற்பா : இதில் அடங்கிய பிரபந்தங்களும் பாசுரங்களின் தொகையும்.

பிரபந்தம்	பாசுரத் தொகை
14. முதல் திருவந்தாதி	100
15. இரண்டாம் திருவந்தாதி	100
16. மூன்றாம் திருவந்தாதி	100
17. நான்முகன் திருவந்தாதி	96
18. திருவிருத்தம்	100
19. திருவாசிரியம்	7
20. பெரிய திருவந்தாதி	87
21. திருவெழு கூற்றிருக்கை	1
22. சிறிய திருமடல்	1
23. பெரிய திருமடல்	1
ஆக, பிரபந்தங்கள் 10க்குப் பாசுரங்கள் :	593

இவற்றுள் 14, 15, 16 எண்களிட்டுள்ளவை முறையே முதலாழ்வார்களான பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகியோராலும்; 17 எண்ணிட்டுள்ளது திருமழிசைப் பிரானாலும்: 18, 19, 20 எண்களிட்டுள்ளவை நம்மாழ்வாராலும்; 21, 22, 23 எண்களிட்டுள்ளவை திருமங்கையாழ்வாராலும் அருளிச் செய்யப் பெற்றவையாகும்.

நாதமுனிகள் தாம் ஏற்படுத்தின திருமொழி-திருவாய்மொழித் திருநாளில் (பகல் பத்து-இராப்பத்து) முதலாயிரத்தையும், பெரிய திருமொழியையும் திருவாய் மொழியையும் தேவகானத்தில் ஏறிட்டுச் சேவித்தார் என்றும் இயற்பாவை இயலாகச் சேவித்தார் என்றும் 'கோயிலொழுகு' என்ற நூலினால் அறிகின்றோம். இச்செய்தி 'இசைப்பா', 'இயற்பா' என்னும் பாகுபாட்டைத் தெளிவாக உணர்த்துகின்றது. இசைப்பாத் தொகுதிகட்குப் பண், தாளங்கள் அமைந்திருத்தலும் கவனிக்கத்தக்கது. திருவாய் மொழிப் பாசுரங்கள் முழுமைக்கும் பண், தாளங்கள் உள்ளன. 'பண் ஆர் பாடல் இன்கவிகள், (திருவாய் 10.7:5) என்று சடகோபரே அருளிச் செய்திருப்பதும், அவரது சீடரான மதுர கவிகளும்

> ''தேவுமற் றறியேன்; குருகூர் நம்பி
> பாவின் இன்னிசை பாடித் திரிவனே''

என்று கூறியிருப்பதும் (கண்ணிநுண்-2) காண்க. பெரிய திருமொழிக்குப் பண், தாளங்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏட்டில் காணப்படுகின்றன. 'இன்னிசையால் சொன்ன செஞ்சொல்மாலை' (பெரிய திருமொழி 2.8:10;9.2:10), 'பண்ணார் பாடல்' (ஷை 1.9:10), 'பண்ணுள் ஆர்தரப் பாடிய பாடல்' (ஷை 4.2:10), 'பண்கள் அகம் பயின்ற சீர்ப் பாடல், (ஷை 6.9:10) முதலியனவாக வரும் பெரிய திருமொழிப் பாசுரப் பகுதிகள் இத் தொகுதியும் 'இசைப்பா' எனத் தெரிவிக்கின்றன. இங்ஙனமே முதலாயிரத்திற்கும் பண், தாள அமைப்புக்கள் முன்பு வழக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும். பெரியாழ்வார் பாசுரங்கள் பண்ணில் இயன்றவை என்பதை, ''பட்ட நாதன் பண்ணியல்நானூற்றேழு பத்து மூன்றும்''

(பட்ட நாதன்-பெரியாழ்வார்)

என்ற வேதாந்த தேசிகன் வாக்கினால் (பிரபந்தசாரம்,15) அறியலாம். திருமழிசைப் பிரான் அருளிய இரண்டு பிரபந்தங்களில் 'திருச்சந்த விருத்தம், முதலாயிரத்திலும் 'நான்முகன் திருவந்தாதி' இயற்பாவிலும் சேர்க்கப் பெற்று முறைப்படுத்தியுள்ளமையை நோக்கினாலும் முதலாயிரத் தொகுதியிலுள்ள பிரபந்தங்கள் அனைத்தும் இசைப்பாக்களே எனத் துணிய இயலும். எனவே, இயற்பா ஒழிந்த ஏனைய மூன்று தொகுதிகளும் இசைப் பாத் தொகுதிகள் என்பது தெளிவாகும்.

மேலே கூறப்பெற்ற முதலாயிரம் பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்ற பாகுபாடும், பிரபந்தங்களின் அமைப்பு முறையும் நாதமுனிகள் காலத்தில் ஏற்பட்டவையாகும். பிரபந்தங்களின் எண்ணிக்கை இத்தனை நாதமுனிகள் காலத்தில் வழங்கி வந்ததாகத் தெரியவில்லை. திருவரங்கத்தமுதனார் இராமாநுசர் மீது அருளியுள்ள 'இராமாநுச

நூற்றந்தாதி' இராமாநுசர் காலத்தில் இயற்பாத் தொகுதியுடன் சேர்க்கப்பட்டது என்பதைக் 'கோயிலொழுகு' என்ற நூலின் வாயிலாக அறிகின்ரும். அக்காலத்திலிருந்து முதலாயிரத்தில் 'கண்ணிநுண் சிறுத்தாம்பைப்' போல இயற்பாவின் இறுதியில் 'இராமநுச நூற்றந்தாதி' எங்கணும் பெருவழக்காக ஓதப் படுவதாயிற்று. இன்றும் அவ்வழக்கு நடைமுறையில் உள்ளது. திருக்கோயில்களில் இயற்பாவின் இறுதியில் இப்பிரபந்தத்தை அநுசந்தித்து வருகின்றனர். இதனல் இந்நூற்றந்தாதி இயற்பாப் பிரபந்தங்களுள் ஒன்ருக அமைந்து விட்டமை புலனுகும்.

திவ்வியப் பிரபந்தம் நான்கு ஆயிரமும் சேர்ந்து அச்சிட்ட பதிப்புக்களில் சில குளறுபடிகள் நேர்ந்துள்ளன. இப்போது கிடைத்திருக்கும் பெரும்பான்மையான ஏட்டுப் படிகளில் திவ்வியப் பிரபந்தம் நான்கு ஆயிரங்களும் தனித்தனியாகவே அமைந்துள்ளன. பெரும்பான்மையான இயற்பா ஏடுகளில் 'இராமாநுச நூற்றந்தாதி' இறுதியில் சேர்ந்தே அமைந்துள்ளது. கி. பி. 1856-இல் அச்சிடப் பெற்ற திரு. கூர்மாசாரியர் பதிப்பில் இயற்பாவுடன் 'இராமாநுச நூற்றந்தாதி' சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நாலாயிரம் முழுமையுமுள்ள ஒரு சில ஏடுகளில் இயற்பாவை நான்காவது ஆயிரமாக அமைத்துள்ளனர். இதுவே நாதமுனிகள் அமைத்த முறையாகும். திருமொழி திருவாய்மொழித் திருநாளில் இறுதியாக இயற்பாவை ஓதும் வழக்கமும் இந்த அமைப்பு முறையை உறுதிப் படுத்துகின்றது. என்னும், பிற்பட்ட பதிப்பாசிரியர்கள் பலரும் 'இராமாநுச நூற்றந்தாதியை' இயற்பாவின் இறுதியில் சேர்க்காமல் திருவாய்மொழிக்குப் பின்னர் திவ்வியப்பிரபந்தத்தின் இறுதியில் பதிப்பித்துள்ளனர். இவர்கள் 'இராமாநுச நூற்றந்தாதியை' மட்டிலும் அஃது இருந்த இடத்திலேயே விட்டுவிட்டு மற்ற இயற்பாப் பகுதி முழுவதையும் மூன்ருவது ஆயிரமாக மாற்றி விட்டனர் போலும்! கி. பி. 1865-இல் திவ்வியப்பிரபந்தத்தைப் பதிப்பித்த திரு. அப்பாவு முதலியார் இயற்பாவுடன் 'இராமாநுச நூற்றந்தாதியை'ச் சேர்க்காமலும் திருவாய்மொழியின் இறுதியில் இணைக்காமலும் தனி நூலாகவே வெளியிட்டுள்ளார். நாலாயிரம் எண்ணிக்கையில் இவர் இப் பிரபந்தத்தை உட்படுத்த விரும்பவில்லை போலும்! இவரைப் பின் பற்றியே பின்வந்த பதிப்பாசிரியர்கள் பலரும் திவ்வியப்பிரபந்தத்தின் இறுதிச் சேர்க்கையாக 'இராமாநுச நூற்றந்தாதியை' அமைத்தனரோ என்று கருத வேண்டியுள்ளது.

'இராமாநுச நூற்றந்தாதியை'ச் சேர்ந்த திவ்யப்பிரபந்தம் இருபத்து நான்கில் இயற்பாப் பிரபந்தங்கள் பதினென்று. இவற்றுள் கட்டளைக் கலித்துறைப்பாக்களால் அமைந்தனவும், இசைக்குச் சேரக்கூடியனவாகவும் உள்ளதை 'திருவிருத்தம்' 'இராமாநுச நூற்றந்தாதி' ஆகியவை இயற்பா என்றே பெயர் பெறுகின்றன. மற்றும், இயற்பாத் தொகுதியில் ஒரே பாடலாகவுள்ள, 'திருவெழு கூற்றிருக்கை, 'சிறிய திருமடல், 'பெரிய திருமடல்' ஆகிய மூன்றைத்தவிர ஏனைய எட்டுப் பிரபந்தங்களும் அந்தாதிப் பிரபந்தங்களாகும். 'இராமாநுச நூற்றந்தாதி' மட்டிலும் கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைந்தது. 'திருவிருத்தமும்' கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைந்த அந்தாதிப் பிரபந்தமாக இருப்பினும், அதனை அந்தாதி எனப் பெயரிட்டு வழங்குதல் இல்லை. அந்தாதிப் பிரபந்தங்களைத் தொடர்நிலைச் செய்யுள் வகையில் சொற்ருெடர் நிலைச் செய்யுள் என வழங்குவர், இவை தொல்காப்பியர் கூறும் 'விருந்து' என்ற வகையில் அடங்கும்! மேற் கூறப்பெற்ற எட்டு அந்தாதிப் பிரபந்தங்களில் முதலாழ்வார் மூவர் பாடிய அந்தாதிகள், நான்முகன் திருவந்தாதி, பெரிய திருவந்தாதி ஆகிய ஐந்தும் வெண்பா அந்தாதிகள். 'இராமாநுச நூற்றந்தாதி' மட்டிலும் கலித்துறை அந்தாதி. 'திருவாசிரியம், 'திருவெழுக் கூற்றிருக்கை' ஆகிய இரண்டும் ஆசிரியப் பாவால் அமைந்த பிரபந்தங்களாகும், 'திருவாசிரியம்' அந்தாதிப் பிரபந்தமாக அமைந்தும், இயற்பாவிலுள்ள ஏனைய அந்தாதிப் பிரபந்தங்களைப் போல இறுதியும் முதலும் மண்டலித்து அமையவில்லை. 'திருவிருத்தம்', 'சிறிய திருமடல்', 'பெரிய திருமடல்' ஆகிய மூன்றும் அகத்துறைப் பிரபந்தங்களாகும். இம் மூன்றனுள் மடல்கள் இரண்டும் கலிவெண்பாவாலான பிரபந்தங்களாகும்.

திவ்யப் பிரபந்தத்திலுள்ள பிரபந்தங்களின் எண்ணிக்கையும் பாசுரங்களின் எண்ணிக்கையும் வேதாந்த தேசிகன் காலத்தில் வரையறுத்துக் கூறப் பெற்றவைகளாகும். தேசிகன் திருப்பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கொள்ளவில்லை. அது பெரியாழ்வாரின் திருமொழியுடன் சேர்ந்தது என்ற சம்பிரதாயத்தை அப்படியே கொண்டவர்.

''ஏரணிபல் லாண்டுமுதற் பாட்டு நானூற்
றெழுபத்தொன் றிரண்டுமெனக் குதவு
வாயே''

என்று சேர்த்து (பிரபந்தசாரம்—9) ஒரே தொகையாகக் கூறியிருப்பதனுல் இதனை அறியலாம். அவர் தமது பிரபந்தசாரத்தில் மேற்கொண்டுள்ள முறையைக் கவனித்தால் இது தெளிவாகும். இந்தமுறை பிரபந்தசார முதற் பாட்டில்,

[3]''வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின்
வகையான தொகைஇலக்கம் மற்றும் எல்லாம்''

என்று (ஷை—1) பேசப்பெறுகின்றது. இதில் பாட்டின் வகையான தொகை என்பது 'பாட்டின் வகுப்பின்படி எண்கள்' என்பதையும், 'இலக்கம்' என்பது 'அவரவர் அருளிச் செய்த பாசுரத்தின் கூட்டியஎண்' என்பதையும் குறிக்கின்றன என்பது தெளிவு. இந்த முறையை மேற்கொண்டு தமது பிரபந்தசாரம் இரண்டாவதுமுதல் பதினன்காவது வரையிலுள்ள பதின்மூன்று பாட்டுக்களில் ஒவ்வொரு ஆழ்வாருடைய திருமொழிகளையும் அல்லது திருமொழியையும், தனித்தனியே அதனதன் தொகை இலக்கத்தையும் கூறுகின்றார். அவற்றில் திருமழிசைப் பிரான், நம்மாழ்வார் ஆண்டாள், தொண்டரடிப்பொடிகள், திருமங்கைமன்னன் இந்த ஐவர்களைப்பற்றின பாட்டுக்களில் அவரவர் அருளிச்செய்த பிரபந்தங்களைத் தனித்தனியே எடுத்து அவற்றின் தனித்தனி தொகை இலக்கத்தைக் கூறியுள்ளார். முதலாழ்வார்கள் மூவர் மதுரகவிகள், குலசேகரப்பெருமாள், திருப்பாணுழ்வார், திருவரங்கத்தமுதனர் (இராமாநுசநூற்றந்தாதியை அருளிச்செய்தவர்), இவ்வெழுவர் பற்றிய பாடல்களில் இவர்கள் ஒவ்வொரு பிரபந்தத்தையே அருளிச் செய்தவர்களாதலின் வகை எதுவுமின்றி அதனதன் தொகை இலக்கமே கூறப்பெற்றுள்ளது. ஆயின் பெரியாழ்வாரைப் பற்றின பாடலில் வகை எதுவுமின்றித் தொகை மட்டிலும் 'நானூற்றெழுபத்தொன்றிரண்டு' (473) என்று கூறியுள்ளதை நோக்கும் போது தேசிகளின் திருவுள்ளத்தில் 'திருப்பல்லாண்டு' தனிப் பிரபந்தம் அன்று என்பது தெளிவாக அறியக் கிடக்கின்றது. இவர் 'இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்த்துத் திவ்யப்பிரபந்தம் நாலாயிரம் பாசுரங்களையுடையது என்ற கொள்கையினர். தேசிகனுக்குக் காலத்தால் சற்றுப் பிற்பட்டவரான அப்பிள்ளார் என்பார் திருப்பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கொண்டவர். இதனை,

''நல்லதிருப் பல்லாண்டு நான்மூன்ருேன் வாழியே
நானூற்றறு பத்தொன்றும் நமக்குரைத் தான் வாழியே''

என்று (வாழித்திருநாமம்—8) பெரியாழ்வாரைப் பற்றிய தமது வாழித்திருநாமத்தில் கூறியிருப்பதனுல் அறியலாகும்.

மேற்குறிப்பிட்ட இருவர் கருத்துக்களையும் ஒரு சிறிது ஆராய்வோம். திவ்யப்பிரபந்தத்தை நாலாயிரமாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதியிலும் இந்த இந்தப் பிரபந்தம் இந்த இந்தவரிசையில் இருக்க வேண்டுமென்ற முறையை வரையறைசெய்தவர் நாதமுனிகள், அவர்திருப் பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கருதியிருந்தால் 'வண்ணமாடங்கள்' (1.1) முதல் 'மெச்சூது' (2.1) வரையில் பத்துத் திருமொழிகளைச் சேர்த்து ஒருதொகுதியாக்கிப் 'பெரியாழ்வார் திருமொழி முதற்பத்து' என்று வகுத்திருக்கவேண்டுமேயன்றி ஒன்பது திருமொழிகளை வைத்துப் 'பத்து' என்று பெயரிடக் காரணம் எதுவுமில்லை. அவர் அங்ஙனம் செய்யாமல் 'வட்டு 'நடுவே' (1.9) என்ற திருமொழியுடன் ஒரு பத்தாக்கியுள்ளார். திவ்யப்பிரபந்தத்தில் 'பத்து' என்ற பிரிவு'இருக்கு' வேதத்தில் மண்டலங்களின் உட்பிரிவுகள் வகுக்கப் பெற்றுள்ள மரபினையொட்டியது. அங்கு அந்த உட்பிரிவுகள் 'ஸூக்தம்' என வழங்கப்பெறுகின்றன. ஸூக்தம்' என்பதே தமிழில் 'திருமொழி' என்று வழங்கப்பெறுகின்றது. பல திருமொழிகளுள்ள பிரபந்தங்களே ''பெரியாழ்வார் திருமொழி'' 'நாச்சியார் திருமொழி', 'பெருமாள் திருமொழி' 'பெரிய திருமொழி' என்றிப்படி திருமொழி என்ற பெயர்பெற்றன என்பதும், நம்மாழ்வாராயிரமும் 'நம்மாழ்வார் திருமொழி' என்றே கூறப்பெறலாமாயினும் அதன் சிறப்புத் தோன்ற 'திருவாய்மொழி' என்று வழங்கப் பெற்றது என்பதும் ஈண்டு அறிதற்பாலவை. எனவே 'திருமொழி' 'திருவாய்மொழி' என்ற பெயர்கட்குக் காரணமான பெயரையுடைய திருமொழிகளின் தொகையைக் கொண்டு 'முதல்பத்து', 'இரண்டாம் பத்து' —என்றிப்படி வரையறை ஏற்பட்டது என்பது தெளிவு: இம்முறையால் பெரியாழ்வார் திருமொழிமுதல் பத்துக்கு இதில் இரண்டாம்பத்து முதலானவற்றைப் போலும், 'பெரியதிருமொழி', 'திருவாய்மொழி' இவற்றின் பத்துக்களைப் போலும் வழக்கமாகப் பத்துத் திருமொழிகள் இருந்தே தீரவேண்டும். ஆயின், 'பெரியாழ்வார் திருமொழி' ஐந்தாம்பத்தில் நான்கு திருமொழிகள் தாமே உள்ளன? அதனைப் போலவே பத்துக்குக் குறைந்த

ஒன்பது திருமொழிகளேயுள்ள முதல்பத்தினை, ஏன் பத்து என்று வழங்குதல் கூடாது என்று வினவலாம். பத்துப் பத்துத் திருமொழிகளாகப் பிரித்துக்கொண்டே போய் எஞ்சியுள்ள நான்கு திருமொழிகளை ஒருபத்தாகக் கொள்வதற்கும் திவ்யப் பிரபந்தத்தின் தொடக்கத்திலேயே அங்ஙனம் கொள்வதற்கும் வேறுபாடு உண்டு. தான் வரையறுத்த கொள்கையை எடுத்த எடுப்பிலேயே எவரும் கைவிடார். தவிர, முழுப் பத்து ஒன்றுக்குமேல் இருக்கும் இடங்களில் தான் ஓதுதல் முதலான வசதிகளைக் கருதித் திருமொழிகளைப் பத்தாகப் பிரித்தனர் என்பதும், பதினன்கு திருமொழிகள் உள்ள 'நாச்சியார் திருமொழி'யைப் பத்துப்பத்தாகப் பிரிக்காததற்குக் காரணம் முழுப்பத்து ஒன்றுக்குக் குறைந்திருப்பதேயாகும் என்பதும் ஈண்டு அறிதற்பாலவை. எனவே, 'திருப்பல்லாண்டு' தனிப் பிரபந்தம் என்று கொள்வதற்கு ஏதுவொன்றும் இல்லை. பெரியவாச்சான் பிள்ளை போன்ற வியாக்கியாதாக்கள் முதலானவர்களும் 'திருப்பல்லாண்டுடன்' சேர்ந்து 'பெரியாழ்வார் திருமொழி' ஒரே பிரபந்தம் என்ற திருவுள்ளம் கொண்டவர்கள். 'பெரியாழ்வார் திருமொழியின் இறுதிப் பாசுரமான 'வேயர்தங்கள் குலத்து' (5.4:11) என்றதில் 'கோயில் கொண்ட கோவலனை' என்ற சொற்றொடருக்கு வியாக்கியானம் செய்யுமிடத்தில்,

> ''திருப்பல்லாண்டு தொடங்கி இவ்வளவும் இவர்
> மனத்திலிருக்கின்ற கிருஷ்ணன் தான் பிறந்த
> படியையும் வளர்ந்த படியையும் இவரைக் கொண்டு கேட்டான்''

என்று பெரியவாச்சான் பிள்ளை கூறியிருப்பதனுலும், இதற்கு முன்னர் ''திருப்பல்லாண்டின் அர்த்தத்தை நிகமிக்கிருர்'' என்று பன்முறை கூறியிருப்பதனுலும், ஒரு பிரபந்தமானுல்தான் 'தொடக்கம்' என்பதும் 'நிகமனம்' என்பதும் சேருமாதலாலும், இவர் கருத்து 'திருப்பல்லாண்டு' தனிப்பிரபந்தமன்று என்பது உறுதிப்படுகின்றது.

மேலும், 'உபதேசரத்தின மாலை'யில் பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் (16) ஆதித் திருப்பல்லாண்டானதுவும் (19) 'உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர்கலை' (20) என்ற சொற்றொடர்களில் வரும் 'திருப்பல்லாண்டு' என்பது அது தனிப்பிரபந்தம் என்பதை உறுதிப் படுத்துகின்றது என்றும், திருக்கோயில்களில் ஏதாவது ஒரு பிரபந்தம் ஓத நேரிடும் போதெல்லாம் 'திருப்பல்லாண்டு' முதலில் ஓதப்பெற்று அதன் பின்னரே அக்குறிப்பிட்ட பிரபந்தம் ஓதப்படுகின்றது என்ற வழக்கம் இருப்பதால் 'திருப்பல்லாண்டு' தனிப்பிரபந்தம் என்பது மேலும் வலியுறுகின்றது என்றும் கூறுகின்றனர். மேற்குறிப்பிட்ட உபதேசரத்தினமாலைப்பாசுரங்களில் இரண்டாவது தொடரிலுள்ள 'திருப்பல்லாண்டு' வேதத்திற்கு 'ஓம்' என்ற பிரணவம் போல் திவ்வியப் பிரபந்தத்தின் பொருளுக்கெல்லாம் சுருக்கமாயும் மங்கல ரூபமாயும் இருப்பதாகக் கூறுகின்றதேயன்றி, தெளிவாக அது ஒரு பிரபந்தம் எனக் கூருமையாலும், அங்ஙனமே கோயில்களில் இருந்து வரும் வழக்கும் அது தனிப்பிரபந்தம் என்பதற்குத் தக்க ஆதாரம் அல்லாமையாலும் இரண்டையும் தக்க சான்றுகளாகக் கொள்வதற்கில்லை. மேலும் 'உபதேசரத்தினமாலை' ஆழ்வார்கள் அவதரித்த நாட்கள், மாதங்கள், தலங்கள் முதலிய செய்திகளைக் கூறுகின்றதேயன்றி அவர்கள் அருளியுள்ள பிரபந்தங்களைப் பற்றி யாங்கணும் கூறவில்லை. ஆயினும், 'திருப்பல்லாண்டு' என்ற திருமொழி அகண்ட திவ்வியப்பிரபந்தத்தின் தொடக்கத்திலிருப்பதாலும், அது வேதத்தின் பிரணவம் போல் திகழ்வதாலும், அதற்குத் தனிப்பெருமை உள்ளது. திருக்கோயில்களில் அது முதலில் ஓதப் பெறுவதற்கு இதனையே காரணமாகவும் கொள்ளலாம்; 'திரு' என்ற அடை மொழியால் அது சிறப்பிக்கப் பெறுவதற்கும் இதுவே காரணமாகும்.

இனி, திவ்வியப் பிரபந்தத்திலுள்ள பாசுரங்களின் எண்ணிக்கையைப்பற்றிய இருவேறு கருத்துக்களையும் ஆராய்வோம். மேலே குறிப்பிட்ட வாறு இருபத்து மூன்று பிரபந்தங்களடங்கிய திவ்வியப் பிரபந்தத்தின் பாசுரத் தொகை (947+1134 +1102+593) 3776 ஆகின்றது. அஃதாவது இரு திருமடல்களையும் நீக்கினுல் இத்தொகை 3774 என்று ஆகின்றது. இத்தொகை நாலாயிரத்திற்திற்கு (4000—3774) 226 குறைகின்றது. வேதாந்த தேசிகன் தாம் இயற்றியுள்ள பிரபந்தசாரத்தில் இரு திருமடல்களையும் 118 பாசுரங்களாகக் கொள்வர்.

''சிறியமடற் பாட்டு முப்பத் தெட்டு
இரண்டும்
சீர் பெரிய மடல் தனிப்பாட்டு எழுபத்
தெட்டும்''

என்பது (பிரபந்தசாரம்—13) அவரது திருவாக்கு பிறிதோரிடத்தில் அவர்,

அத்தனுயர் வேங்கடமாற்கு ''பரகாலன்
சொல் ஆயிரத்தோடு
ஆனஇரு நூற்ரேரைம் பத்து மூன்று''

என்று (ஷை—16) திருமங்கை மன்னனின் பாசுரங்களை 1253 என்று பேசுவர். மடல் ஒழிந்த நான்கு பிரபந்தங்களிலும் அடங்கிய பாசுரங்கள் (1084 + 20 + 30 + 1) 1135 ஆகின்றன. எனவே, இரு திருமடல்களும் (1253—1135) 118 பாடல்கள் ஆகும் என்பது இதனுலும் தெளிவாகின்றது. ''சிறிய திருமடல் முப்பத்தெட்டு இரண்டும்'', ''பெரிய மடற்பாட்டு எழுபத் தெட்டு'' என்று குறித்த எண்ணிக்கையைப் பெரும்பாலான பதிப்பாசிரியர்கள் மேற்கொண்டுள்ளனர். பாடலின் பொருட்போக்கினைக் கொண்டு அங்கங்கே பாசுரங்களாக நிறுத்தியுள்ளனர் 2. இப்பதிப்புக்களில் பெரிய திருமாலை 78 பாசுரமாகப் பிரித்துக் காட்டியுள்ளனர். சிறிய திருமாலை 40 பாசுரமாகப் கொள்வதால் நூலை38 பாசுரங்களாகவும், பிற்சேர்க்கைப் பாடலை 2 பாசுரங்களாகவும் இவர்கள் கொள்கின்றனர். பிற்சேர்க்கைப் பாடலைச் சேர்த்துக் கொள்வது சிறிதும்பொருத்தமன்று. சில ஏட்டுப் பிரதிகளில் சிறிய திருமாலை 38 பாசுரங்களாகவும் பெரிய திருமாலை 80 பாசுரங்களாகவும் பிரித்துள்ளனர். இம்முறையால் இரு திருமடல், பிரபந்தங்களும் 118 செய்யுட்கள் என்ற எண்ணிக்கை நிரம்பி விடுகின்றது. தேசிகப் பிரபந்தத்தில் ''சிறிய திருமடல் முப்பத்தெட்டு இரண்டும், பெரிய திருமடல் எழுபத்தெட்டும்'' என்றிருப்பதை 'சிறிய திருமடல் முப்பத்தெட்டு; இரண்டும் எழுபத்தெட்டும்'' எனக் கூட்டிப் பெரிய திருமடலை எண்பது பாசுரமாகக் கொண்டனரோ என்று நினைக்கவும் இடமுண்டு. எப்படியிருப்பினும் இதுவே சரியான முறை. இங்ஙனம் பெற்ற 118 பாடல்களும் இராமாநுச நூற்றந்தாதி'ப் பாடல்கள் 108—உம் சேர்ந்து 226 என்ற தொகையாகித் திவ்யப் பிரபந்தம் (3774+ 226) 4000 பாடல்கள் என்ற கணக்கு நிறைவு பெறுகின்றது.

அப்பிள்ளார் என்பார் திருமடலில் அமைந்த ஒரு கண்ணியை (இரண்டுவரிகளை) ஒரு பாசுரமாகக் கொண்டு சிறிய திருமடலை 77½ பாசுரங்கள் என்றும், பெரிய திருமடலை 148½ பாசுரங்கள் என்றும் கணக்கிட்டு இருமடல்களிலும் 226 பாசுரங்கள் உள்ளனவாகக் கொள்வர். இதனை இவர் இ பற்றிய வாழித் திரு நாமத்தில்,

''இலங்குஎழு கூற்றிருக்கை இருமடல்
ஈந்தோன் வாழியே
இம்மூன்றில் இருநூற்று இருபத்து ஏழ்
ஈந்தான் வாழியே''

எனவரும் (வாழித்திருநாமம்—11) வாழித்திருநாமப் பகுதியால் அறியலாம். இவர் கொள்கைப்படி 'இராமாநுச நூற்றந்தாதி' இன்றியே (3774+256) 4000 என்ற எண்ணிக்கை நிறைவு பெறுகின்றது. இருவர் கொள்கை எப்படியிருப்பினும் இரு கொள்கையைச் சேர்ந்தவர்களும் 'இராமாநுச நூற்றந்தாதியை' மறக்காமல் ஓதி வருவது பாராட்டத்தக்கது. அங்ஙனம் ஓதாமல் கைவிட்டால் ''செய்ந்நன்றி கொன்ற'' பாவத்திற்கு ஆளாவர். வைணவம் நிலைத்திருக்கும் காலம் வரையிலும் இராமாநுசருடைய பெயரும் நிலைத்திருக்குமாறு காத்தல் வேண்டும்.

யாப்பிலக்கணப்படி திருமடலை ஒரே பாட்டாகக் கொள்வதே பொருத்தம். காரணம், ஒவ்வொன்றும் ஒவ்வொருகலிவெண்பாவாலான பிரபந்தம். ஆகவே, திவ்யப் பிரபந்தத்தின் பாடல்கள் 3776 என்றும், 'இராமாநுச நூற்றந்தாதி'ப் பாடல்கள் சேர்ந்து அத்தொகை 3884 ஆகின்றது என்றும் அறியக் கிடக்கின்றது. இத்தொகை மிகுதிபற்றி 'நாலாயிரம்' என்றே வழங்கப் பெறுகின்றது என்று கொள்ளலே சால்புடையது. நாலாயிரத்திற்குச் சில பாசுரங்கள் குறையினும் கூடினும் 'நாலாயிரம்' என்று கொள்ளலே ஏற்புடைத்து. ஆயிரத்திற்கு நூறு, ஐம்பது குறைந்த கால்களையுடைய மண்டபத்தை 'ஆயிரக்கால் மண்டபம்' என்பது போலவும், நான்கு அல்லது இரண்டு கைகளுடன் வீடுவிக்கப்பெற்ற வாணசுரனது வதத்தை ''வாணனை ஆயிரம் தோள் துணித்த'' என்றும், ''இண்ட வாணனீரைஞ்ஞூறு தோள்களைத் துணித்த'' என்றும், ஆழ்வார்கள் அருளிச் செய்தது போலவும் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனமே திருவாய்மொழி 1102 பாசுரங்களால் அமைந்திருப்பினும் ''நிரணிறை ஆயிரத்து'' (திருவாய் 1:1:11), சீர்த்தொடை ஆயிரத்து'' (ஷை1.2:11), ''குருகூர்ச் சடகோபன், ஓராயிரம் சொன்ன'' (ஷை2.1:11), என்று ஆழ்வார் தாமே அருளிச் செய்துள்ளமையும், பெரிய திருமொழி 1084 பாசுரங்களால் அமைந்திருந்தும் ''பொங்கு'' புகழ் (தனியன்) மங்கையர்கோன் ஈந்த மறையாயிரம் என்று அருளிச் செய்யப் பெற்றுள்ளமையும், 108பாடல்கள் அமைந்த பிரபந்தத்தை ''இராமாநுச நூற்றந்தாதி'' என்று வழங்கப் பெறுவதும் ஈண்டு சிந்தித்தல் தகும். இக்கூறியவற்ருல் நாலாயிரத்துக்குச் சில பாடல்கள் குறைந்துள்ள திவ்யப் பிரபந்தத்தை ''நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்'' என்று வழங்குவது எல்லாவற்ருனும் பொருந்தத் தடை இல்லை என்பதை உணர்தல் வேண்டும்.

★

இசையும் இறைவனும்

(தமிழிசைச் சங்கம, தேவாரப்பண் ஆராய்ச்சிக் கூட்டத்தின் தொடக்கவுரை)

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S.,

(ஆணையர், இந்து அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.)

மதிப்பிற்குரிய பெரியோர்களே,
தாய்மார்களே, அன்பர்களே!

தமிழிசைச் சங்கத்துப் பண் ஆராய்ச்சியின் 23-ஆம் கூட்டத்தினைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினை எனக்கு அளித்த திருவருளை எண்ணி வணங்குகிறேன். இயலிசை வல்லுநர்கள், இசைப் பேரறிஞர்கள் பலர் இருக்க என்னையும் அழைத்து இங்குப் பேசுமாறு பணித்திட்ட தமிழ் இசைச் சங்கத்தார்க்கு என் நெஞ்சுகந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1949-ஆம் ஆண்டிலிருந்து பண் ஆராய்ச்சிக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தி அதன்வழியாகத் தமிழிசையின் இலக்கணத்தை ஆய்ந்து அறிந்து தெளிந்து, தற்கால இசைப்புலவர்களும் பண்டைக்கால இசையின் இலக்கணத்தை ஒப்பிட்டு உணர உதவும் ஒப்பற்ற பணியை இச்சங்கம் செய்து வருவதை நாம் அறிவோம். ''தமிழ் நாடெங்கிலும் தமிழிசை முழங்கவேண்டும்'' என்ற அளப்பரும் ஆவலில், 1943-இல் தமிழ் இசைச் சங்கம் தோற்றுவித்துக் காலமாறுதலால் இறந்துபடும் நிலையிலிருந்த தமிழிசைக்கு நல்லிசைப் பணிபுரிந்து உயிர்தந்து, தமிழிசையைப் பயிலவும் நுகரவும் வழிகாட்டியாய் அமைந்து மறைந்த பெருங் கொடை வள்ளலும் செட்டி நாட்டரசருமாகிய இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களையும், அவர்தம் அருமை மைந்தர் இராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களையும், தமிழகம் மறவாது. கலையின் உயிர் நாடியான தமிழ் இசைக் கலைக்கு உயிரூட்டி வரும் அறிஞர்கள் அனைவர்க்கும் தமிழ்நாடு கடப்பாடுடையது.

தமிழிசைச் சங்கத்தார் ஆண்டு தோறும் டிசம்பர் திங்களில் நடத்திவரும் இசைத் தமிழ் ஆராய்ச்சியில் இசைவல்லுநர்களும், இயற்றமிழ்ப் புலவர்களும், இசைப் பேரறிஞர்களும், பண்ணாராய்ச்சிக்குத் துணைபுரிவது ஓர் நல்லிசைப் பணியாகும். இத்தூய நற்பணியினைத் தொடர்ந்து நடத்தி இசைத் தமிழ் வளர்க்கும் பண்ணையாகத் திகழ்கிறது தமிழிசைச் சங்கம். இச்சங்கம் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

இற்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்தோன்றி, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் நன்னோக்கத்துடன் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மற்றும் நம்பி ஆரூரர் ஆகிய மூவரும் எல்லாம் எல்ல இறைவனை இன்னிசையாற் பரவிப்போற்றிப் பாடிய செழுந்தமிழ்ப் பாடல்களே தேவாரம் என்பது. தேவாரத் திருப்பதிகங்களைத் திருவாய் மலர்ந்தருளிய அப்பரும், சுந்தரரும், ஆளுடைப்பிள்ளையும் இயலிசைத் தமிழ் வளர்த்த அருளாசிரியர்களாவார்கள். தேவார ஆசிரியர் மூவரும் அருளிச் செய்த திருப்பதிகங்கள் அனைத்தும், அவர்களது திருவாயிலிருந்து வெளிவரும்போதே பண்ணார் இன் தமிழாய் வெளிப்பட்ட இன்னிசைப் பாடல்களாயின. இவையே, ''பண் சுமந்த பாடல்'' எனப் போற்றப்பட்டன.

திருஞானசம்பந்தர், தாம்பாடிய திருப்பதிகங்கள் யாவும் இனிய பண்ணமைந்த இசைத் தமிழ்ப் பாடல்கள் என்பதனை,

''ஏழே யேழே நாலே மூன்றியலிசை
யிசையியல்பா''

எனவும்,

''பண்பொலி செந்தமிழ் மாலை''

எனவும்,

''சந்தமிவை தண்டமிழின் இன்னிசை
யெனப் பரவு பாடல்''

எனவும் குறிப்பிடும் தொடர்களால் அறியலாம். ஆளுடைப் பிள்ளையார் நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்த சிறப்பினையும், அவர் மேற்கொண்ட இசைத்தமிழ்த் தொண்டு இனிது நிகழும் வண்ணம் இறைவன் திருக்கோலக் காவில் பிள்ளையாருக்குப் பொற்றுளம் தந்தருளிய நிகழ்ச்சியினையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக் குலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கிரங்கும்
தன்மையாளனை ....''

எனும் பாடலில் உளங்கசிந்து போற்றியுள்ளார்.

தாண்டக வேந்தராகிய நாவுக்கரசர் இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் இசையுருவாகிய இறைவனை, நாடோறும் நன்னீரும் நறுமலரும் கொண்டு வழிபட்டவர்; இறைவனது புகழை நினைந்து நெஞ்சம் நெக்குருகி இசைத் தமிழ்ப் பாடல்களால் பரவிப் போற்றியவர். இவ்வுண்மை,

''சலம் பூவொடு தூபம் மறந் தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''

''பத்திமையாற் பணிந்தடியேன்றன்னைப்
பன்னாள்
பாமாலை பாடப்பயில் வித்தானை
''பன்னியநூல் தமிழ் மாலை பாடுவித்தென்
சிந்தை மயக்கறுத்த திருவருளினானை''

எனவரும் திருநாவுக்கரசர் பாடற் பகுதிகளால் இனிது புலனாகும்.

நல்லிசை ஞானசம்பந்தரும், நாவினுக்கரசரும் பாடிய நறுந்தமிழ்ப்பாக்களை இயலிசை நலம் தோன்ற நாடொறும் இறைவன் திருமுன் ஓதி மகிழ்ந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்பது,

''நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கரையனும்
பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி யேத்துகப்பானை''

எனவரும் அவரது சொல்லால் நன்குவிளங்கும். சுந்தரர் அருளிய திருப்பதிகங்கள் அனைத்தும் அவர் திருவாயிலிருந்து வெளிவரும் பொழுதே இன்னிசையுடன் வெளிப்பட்ட பண்ணார்ந்த பாடல்களாகும். இஃது,

''உளங் குளிர் தமிழ்மாலை''

''ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும்''

''ஏழிசை இன்றமிழால் இசைந்தேந்திய
பத்தினையும்

''ஆழி கடலரையா அஞ்சையப்பர்க்கு
அறிவிப்பதே''

என நம்பியாரூரர் வாய்மொழிகளாக வரும் திருக்கடைக் காப்புத் தொடர்களால் அறிய வரும்.

''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில்
சுவை ஒப்பாய் கண்ணிடைமணி ஒப்பாய்''

என்ற சுந்தரர் பாடலும் இறைவனைப் பண்ணோடு சேர்த்து இணைத்துப் பேசியதும் இங்குப் போற்றத்தக்கது. தெய்வத்தைப் போற்றிய இசைப்பாடலை ''வாரம்'' என வழங்கினார் இளங்கோவடிகள். வாரம் என்ற சொல், சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் நிரம்பிய இசைப்பாடலைக் குறித்த பெயராகும். இசைத்திறத்தில் முழுவதும் வல்ல நல்லிசைப் புலவர்களால்தான் இயலிசை நலம் வாய்ந்த தேவாரப் பாடல்களைப் பாட இயலும். உயிர்க்குயிராய் விளங்கும் இறைவன் ''ஓசை'' ''ஒலி'' ஆகிய இருவகை ஒலி நுட்பங்களாய்ப் பிரிக்க வொண்ணாமல், இயைந்து நின்று உலகங்களை இயக்கி அருள்கின்றான்.

''ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே''

இவ்வுண்மையினை, எனவரும் திருத்தாண்டகம் எடுத்தியம்பும். இவ்விதம் இறைவன் இனிய இசையுருவாக விளங்கி நலந்தருகிறான் என்றும், இவ்விதம் இசையுருவாய் இலங்கும் சிவபரம் பொருளைப் போற்றி வழிபாடு செய்வதற்கு ஏற்புடைய மொழி இசைத் தமிழ் என்றும், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் பண்ணார் இன் தமிழாகவும், பாட்டகத்து இசையாகவும் விளங்கி மெய்யடியார்களின் உள்ளத்துக்கு உவகை அளித்து இன்னருள் வழங்குகின்றான் என்றும் தேவார ஆசிரியர்கள் வலியுறுத்தி அறிவுறுத்தியுள்ளனர்.

''ஏழ் இசையாய் இசைப்பயனாய்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இசையாகவும் இசைப் பயனாகவும் விளங்குகின்றவன் இறைவன். இறைவனைப் ''பண்ணானாய்'' என்று போற்றிப் புகழ்ந்தவர் நாவுக்கரசர். இறைவனுக்கு இசையில் அளப்பரும் விருப்பம் உண்டு என்று சேக்கிழார் சொல்வார். ''இசை விரும்பும் கூத்தனார்'' ''கானதி காரணராம் கண்ணுதலார்'' என்பது அவரது வாக்கு. இசையின் மூலமாக விளங்குகிறான் இறைவன் என்பது அவரது கருத்து.

கலைகள் அனைத்திலும் உயர்ந்தது இசைக் கலையே. நல்லார் பொல்லார், கற்றார் கல்லார், சிறியார் பெரியார், இல்லறத்தார் துறவறத்தார், உழுவார் உழுவிப்பார், குறவர் குரவர் ஆகிய அனைவருமே சற்றும் வேற்றுமையின்றி இசையில் இன்புற்று வயப்படுதலைக் காண்கின்றோம். இவர் மட்டுமின்றி யாழிசைக்கு மதயானையும், குழலிசைக்கு ஆடுமாடுகளும், மகுடிக்கு நச்சரவும் ஆகப்பல்வகைச் சிற்றறிவுயிர்களும் வயப்படுதலைக் காண்கிறோம். அவ்விதமே எல்லாச் செயல்களுக்கும் முதல்வனாயிருக்கும் இறைவனும், இசையொலிக்கு வயப்படுவது திண்ணம் என்பது தெளிவு. ஆகையால் இறைவனே இசை வடிவானவன் எனப்போற்றுமளவுக்கு உயர்வு பொருந்தியது இசை. கடவுளிடம் மனிதரையும், மனிதனிடம் கடவுளையும் இசையவைப்பதே இசை. ''கடவுளால் விரும்பப் பெறாதவர்கள் கானத்தை விரும்ப மாட்டார்கள்'' என்றார், மார்லி என்ற மேனாட்டறிஞர். ''கடவுளின் தனிப்பட்ட அபிமானத்தைப் பெற்றுள்ள மக்கள் இசைக் கலையினை ஓர் தெய்விகக் கலை யென்றே கருதுகின்றனர்'' என்றார் அடிசன். ''புனிதமும் தெய்விகமும் பொருந்திக் கடவுளையே நிகர்த்ததாகும் இசைக்கலை'' என்றார், சார்லஸ் கிங்லி. பிரைநார்டு (Brainard) என்னும் பெரியாரோ ''இசையினைப் படைத்தவன் இறைவன் ஒருவனே'' என்று கூறுகிறார். எனவே இசையே இறைவனின் வடிவம். இசையைக் கொடுத்தவன் இறைவனே. இறையுடன் நம்மை இணைப்பது இசையே என்று நாம் உணர்கிறோம். இறைவனுக்குகந்த நிவேதனப் பொருள் இசைதான். இசையின் மூலம் தான் நாம் இறைவனிடம் பக்திகொள்ள இயலும். இவ்வுண்மை உலக முழுவதற்கும் ஒத்ததாகும். பிற தொண்டுகளுக்கெல்லாம் ஓரொரு குறிப்பிட்ட பயனைத்தரும் இறைவன், இசைத் தொண்டு புரிபவர்களுக்கு மட்டும், ஓர் அளவேயில்லாமல் எல்லையற்ற நிலையில். தன்னுடைய திருவருளைப் பொழிகின்றான் என்கிறார் திருநாவுக்கரசர்.

''விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினாற் பதிற்றி யாகும்;
துளக்கில்நன் மலர்தொ டுத்தால்
தூயவிண் ணேற லாகும்;
விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞானம் ஆகும்;
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளு மாறே''

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் இசைக் கலையே தலையாயது. தெய்வத்தன்மை பொருந்தியது: நாடு, மொழி, மதம், நிறம் இவற்றையெல்லாம் கடந்த ஒருமைப் பாட்டு உள்ள உணர்வு ஏற்படச் செய்வது இசைக் கலையே யாகும்.

ஆழ்வார்கள் பாடியருளிய நாலாயிரத் திவ்வியப்பிரபந்தமும், நால்வர்கள் பாடிய தேவார திருவாசகமும், சந்த இசையால் கந்தனைக் கலந்து விந்தைப் பெருஞ்சான்றோர் ஆகிய அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழும் பக்தி நலமும் இசைநலமும் செழுமிய சிறந்த கருவூலங்கள்! அவை இறைவனது அருளியல்பினை நினைந்து நினைந்து, ஆரா அன்பினால் நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் மல்கிப் பாடப்பட்ட பண்ணார்ந்த பாடல்கள்! பண்கள் இசையின் உயிர்நாடிகள். தமிழ்ப் பண்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தனிக்கலையாய்ப் போற்றி வகுக்கப்பட்டவை. தேவாரப் பதிகங்களும், அவற்றின் பண்ணமைதிகளும், திருமுறை கண்ட சோழன் என்னும் பெயரைக் கொண்ட இராசராச சோழனின் வேண்டுகோளுக்கு இணங்கி, நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்டன. அவைகளுக்குப் பழைய பண்முறைகளை அடியொற்றித் திருஎருக்கத்தம்புலியூரில் யாழ்ப்பாணர் மரபில் தோன்றி, இசைத்துறையில் வல்லவராக விளங்கிய மதங்கசூளாமணியார்என்னும்அம்மையாரைக் கொண்டு, இசைவகுக்கப்பட்டது. பின்னர் வடநாட்டு இசைக்கலைப் புலவர் ஆகிய சாரங்கதேவர் என்பார், தாம் இயற்றிய ''சங்கீத ரத்தினாகரம்'' எனும் இசைநூலில் தேவாரப் பண்களுக்கு இலக்கணம் வகுத்துள்ளார். எனவே முன்னோர் வகுத்த பண்முறைப்படி, இசைத் தமிழ்ப்பனுவல்களாகிய தேவாரத் திருப்பதிகங்களை அவற்றிற்குரிய பண்முறை மாறாது, இசைமரபு வழுவாது பாடத் தமிழ் இசைச் சங்கத்தையும், பண் ஆராய்ச்சிக் கூட்டத்தினையும், குறிப்பாக இக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள முத்தமிழ்ப் புலவர்கள், சித்தத்தைச் சிவன்பால் வைத்த சீலர்கள், ஓதுவாமூர்த்திகள் ஆகியோரை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வாழ்க முத்தமிழ்!
வளர்க தமிழ்ப் பண்ணிசை!

★

உறக்கம் தவிர்த்த உத்தமி

திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை

உறக்கம் என்பது, கடவுள் உயிர்களுக்கு அளித்தருளிய ஓர் அருட்பெருங்கொடை! உறக்கம் இல்லாவிடில், உயிர்களுக்கு வாழ்க்கையில் ஊக்கமில்லை, உணர்வில்லை, செயலும் இல்லை. உலகியல் வாழ்வில், துன்பப் புயலில் சிக்கித் தவித்துத் தத்தளிக்கும் உயிர்களுக்கெல்லாம், ஊக்கமே உற்ற துணையாக அமைந்து, போதிய ஓய்வும் அமைதியும் ஆறுதலும் அளிக்கின்றது. உறக்கமே நம் கவலைகளைப் போக்கி, களைப்பைத் தீர்த்து, களிப்பை விளைவிக்கின்றது. உறக்கம் உடல் நலத்தைத் தந்து, வாழ்நாளை நீட்டிக்கின்றது. உறக்கம் குறைந்தால், நம் வாழ்க்கையும் குறையும். ஆரோக்கியமான உடலுடையவர்களே, ஆரோக்கியமான உறக்கம் பெற இயலும். பண்டைக்காலத்து மருத்துவநூற் பெருஞ்சான்றோராக விளங்கியிருந்த சுச்ருதர் என்னும் முனிவர் உறக்கத்தை, சாத்துவிகம் இராசதம் தாமசம் என மூன்றாகப் பிரித்தார். நடு இரவில் உறங்குவதைச் சாத்விகம் என்றும், நினைத்தபொழுது தூங்குவதை இராசதம் எனவும், அந்தி—சந்திகளில் உறங்குவதைத் தாமசம் எனவும் கூறினர். இம்மூன்றில் தாமச உறக்கம் அறவே கூடாதென்பர். 'உறக்கம் தவிர், அனந்தலாடேல்'' என்ற அறிவுரையெல்லாம், இந்நோக்கின்பால் எழுந்தவைகளே. இத் தாமச உறக்கம் அறிவைக் கெடுக்கும்; சோம்பலை வளர்த்துத் தீராத நோய்தனை உண்டுபண்ணும் என்பர். இவ்வுறக்கம் உடலுறக்கம் ஆன்மஉறக்கம் என இருவகைப்படும். இவ்வான்ம உறக்கத்திலிருந்து நம்மை முதல் முதலில் எழுப்ப முன் வந்தது, ஈசாவாஸ்யம் என்ற உபநிஷத்தாகும். இவ்வழியினைப் பின்பற்றியே அன்னை ஆண்டாளும், வாதவூர் எம்கோவும், பாவைப் பாட்டுகளால் தாமச நிலையில் உறங்கியிருக்கும் சீவரை எழுப்பினர். ''மல இருளூற்று உறங்காமல், மன்னு பரிபாகர் அருள் செல முழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவை'' என்று திருவெம்பாவையின் உண்மைப் பொருளைக் கூறினர். மேலும் ''நஞ்சு உண்டாரைப்போலே, அநாதி மாயையாலே மயங்கிக் கிடந்துறங்க, இப்படி இருக்கிற சம்சாரத்துக்குள்ளே உணர் வாரும் உணர்த்துவாருமாய் பரமபதத்தில் யாத்திரைபோல் செல்லா நிற்பதே'' என்று திருப்பாவையின் கருத்தினை இம்முறையிலே பிள்ளை லோகம் சீயர் என்பார் திருவாக்கிட்டார். ஆண்டாளும் கண்ணனை நோக்கித் தமது திருப்பாவை 17—ஆம் பாடலில், ''உம்பியும் நீயும் உறங்கேல்'' என்ற அடியால், ''மிகவும் சாத்விகனை நீயும் இவ்வாறு தாமச உறக்கம் உறங்கலாமா'' என்றுள்.

கோதை கீதை :

இவ்வாறு, அன்னை ஆண்டாள் நம்பால் கருணைகொண்டு, இறைவனையும், நம்மையும் ஒக்க எழுப்பியருளிய நூலைத் திருப்பாவை என்கிறோம். இது திவ்வியப் பிரபந்த நூல்களுக்கெல்லாம் உபநிஷதம் போன்றது. இதனைப் பாகவதத் திருப்பள்ளி எழுச்சி எனவும் அழைப்பார்கள். இந்த நூலுக்கு எம்மொழியிலும் இணை கிடையாது என்பார். இதனைக் ''கோதைகீதை'' எனவும் அழைப்பர். இவள் பாடிய 30 பாடல்களையும் எழுத்து எழுத்தாய் ஆய்ந்து, சுவை வெள்ளத்திலாழ்ந்து பல பெரியோர்கள் அருமையிலும் அருமையான உரைகண்டார்கள். அப்பாடல்களில் ஈண்டு 13 ஆம் பாடலான ''புள்ளின்வாய் கீண்டானை'' என்ற பாடலின் இன்சுவைதனை ஓரளவு காணலாம்.

பாசுரப்பொருள்:

ஆண்டாள் என்ற சீவான்மா, ஞானேந்திரியம் கன்மேந்திரியம் ஆகிய பத்துப் புலன்களான பத்துப் பெண்களையும் எழுப்பி, மனம் என்னும் நந்தகோபர் மாளிகைக்குள் சென்று அங்குப் படுத்திருக்கும் நப்பின்னை கண்ணன் என்ற திவ்விய தம்பதிகளை எழுப்பிக், கண்ணனுகிய சிங்கத்திற்கு ஆதனமிட்டு, போற்றிப் பாடி, ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமேயாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று'' என்று வேண்டி நிற்கும் வகையில், பத்துப் பெண்களையும் எழுப்பும் முறையில் இப்பொழுது எட்டாவது பெண்ணின் வீட்டை அடைந்து, ''பாவாய்! போதரிக்கண்ணினுய்! கொக்கு வடிவத்தில் வந்த பகாசுரனைக் கொன்ற கண்ணனையும், கொடிய இராவணனைக் கிள்ளிக் களைந்த இராமனையும் பாடிக்கொண்டு, பிள்ளைகள் முன்பே பாவைக் களம் சென்றுவிட்டார்கள். வெள்ளி என்ற கோள் எழும்பி, வியாழன் என்ற கோள் மறைகிறது. இரை தேட வெளியே சென்ற பறவைகள் சிலம்புகின்றன. ஆகக்

காலை வந்து விட்டது. இனி நீ தனியே கண்ணனை நினைத்துக் கொண்டு நீராடாமல் படுக்கையில் உறங்குவது தகாது. இது நன்னாள். எங்களுடன் கலந்து கொள்'' என்று அழைக்கிறாள்.

''புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா
அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை
பாடிப்போய்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்துஏலோர்எம்பாவாய்''

இதற்கு முன்பாட்டில் ''சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக் கினியானைப் பாடவும்'' என்று கூறிய ஆண்டாள், இப்பாட்டின் தொடக்கத்தில் கண்ணனையும், இராமனையும் சேர்த்துப் பாடினாளாக, 'புள்' என்பதற்கு முதலை எனப் பொருள் கொண்டு அதன் வாயைக் கீண்டவனாய் யானையைக் காக்க வந்த ஆதிமூலம் எனவும், 'பொல்லா அரக்கனை' என்பதினால் இரணியன் எனப்பொருள் கொண்டு அதன் இரண்டாமடி நரசிங்கவதாரத்தையும் குறிக்கலாமெனச் சிலர் பொருள் உரைப்பதுண்டு.

பொல்லா அரக்கன் :

''பொல்லா அரக்கனை'' என்ற அடியால் அறப்பற்றுள்ள விபீஷணனை விலக்கி இராவணனைக் குறித்ததென்பர். முன்பாட்டில் 'கோமான்' எனப் புகழப்பட்ட இராவணனை இங்குப் 'பொல்லாதவன்' எனக் குறித்ததில் சுவைஉண்டு. இராவணன் சீதையின்பால் காதல் வைத்த உள்ளம் தவிர மற்றை நிலைகளில் மிகவும் சிறப்புடையவன் தானே. அதனாலே தான் கிழங்கைக் கிள்ளி எடுப்பாரைப்போல், அவன் உள்ளத்தில் உள்ள முறையற்ற காதல் என்னும் நச்சுக் கிழங்கைக் கிள்ளி எறிந்தான் எனக் குறிப்பிடுகிறாள் ஆண்டாள். இக்கருத்தினை ஒட்டியே கம்பரும், இராவணன் வதைப் படலத்தில் மண்டோதரியின் புலம்பல்,

''வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிர்இருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ?
கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை
மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உட்புகுந்து
தடவியதோ ? ஒருவன் வாளி!''

எனக் கூறி இராமன் அம்பு இராவணன் உள்ளத்தைத் துளைத்தது என்றார். கிள்ளி என்ற சொல்லுக்கு உரையில் ''நோய்புக்க இடங்களைக் கிள்ளிப் போகடுமாப்போல், தோஷாம்சத்தை வாங்கிப் போகட்டபடி'' எனக் கூறப்பட்டுள்ளது. களைவது என்பது இரக்கத்தினால் புரியும் செயலாகும். அதனால் தான் அவனை 'மனத்துக் கினியான்' எனவும் அழைத்தாள்போலும்.

வெள்ளியும் வியாழமும் :

அடுத்து, காலைவந்தத்தின் அடையாளம் கூறும்பொழுது வெள்ளி எழுந்ததையும், வியாழன் உறங்கினதையும் எடுத்துக் கூறினாள். இவ்வடி, வானநூலாராய்ச்சியாளருக்கு மிகவும் பிடிப்பாக உள்ளது. வெள்ளி என்பது தூயஞானம். வியாழன் என்பது அஞ்ஞானம். வெள்ளி என்பது பெண்கிரகம், வியாழன் என்பது ஆண்கோள். ஆகவே பெண்கோள் போன்ற ஆண்டாள் தோன்றியபின், ஆண் கோள்கள் போன்ற மற்றைய ஆழ்வார்கள் உறங்கவே எம்பெருமான் எழுப்பினாரென்றும், ஆழ்வார்களில் ஆண்டாள் ஒருத்தியே தானே முதலில் விழித்துக் கண்ணனையும் எழுப்பினாள் என்றும், இவருக்குச் சிறப்பினைத் தந்தனர். அன்றியும் பட்டர்பிரான் குலச் சிறுமியாகப் பிறந்தும், இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும் முடைநாற்றமுமாய்த் தன்னை இடைச்சியாக ஆக்கிக்கொண்ட ஆண்டாள், இடைப் பேச்சினாலேயே வியாழன் வெள்ளி என்று கிழமைகளையே குறித்தாள். இடையர்களுக்கு நட்சத்திரம் அறியவர இல்லை. உரையாசிரியரும் ''அவர்களுக்கு நட்சத்திரமெல்லாம் வெள்ளியும் வியாழனுமாய்த்து'' என்று கூறினார். பிரயாணம் சுக்கிரனை முன்னிட்டுச் செய்யக் கூடாதென்பர். ஆனால் இன்று அதுவும் இல்லை. சுக்கிரன் வெளிவந்து விட்டான் புறப்படு என்கிறாள். ''வெள்ளென'' என்று கிராமத்தார் கூறுவதும் இக்கருத்துக் கொண்டேபோலும்!

போதரிக் கண்ணினாய் :

போதரிக் கண்ணினாய்—பாவாய் என்பது மூதல்வரி. பதுமை போன்றவளே: மெல்லியல்பு உள்ளவளே! கண்ணனைக் கருத்தில் கொண்டவளே: பாடிக்கொண்டிருக்கும் வாயை உடையவளே! என்றெல்லாம் அச்சொல்லின் பொருளாகும். இக்கருத்தெல்லாம் அமையப் போதரிக் கண்ணினாய் என அழைக்கிறாள். இச்சொற்றொடர் ஒன்றே, ஆண்டாளின் அளவற்ற தமிழ்ப் புலமையை வெளிப்படுத்தா நின்றது. இதன் சொற்பொருள்களைக் காண்போம்.

(1) போது—(பூ) அரி = (பகைக்கும்) பூவைப் பகைக்கும் கண்ணினாய். (2)போது—(நடக்கும்) அரி(மான்)=நடமாடும் மான் போன்ற கண்ணினாய். (3)போது—(பூ) அரி (கண்வரி)=பூவைப்போல்அழகானகண்ணினாய் (4)போது—(பூ) அரி (வண்டு)=வண்டமர்ந்த

பூ போன்ற கண்ணினாய். (6)போது (நேரம்) அரி (போக்கும்) = பார்த்தால் நேரத்தையே அறியும் கண்ணினாய். கபோதம் (அறிவு) அரி (அழிக்கும்)=அறிவை அழிக்கவைக்கும் கண்ணினாய். (8) போது (நேரம்) அறி (அறிவிக்கும்)=கண்ணால் நேரம் காட்டும் கண்ணினாய். கண்ணொடு கண்நோக்குவதைக் குறிக்கும். (9)போது(உலாவும்) அரி(வண்டு)= சுழன்றுவரும் வண்டுபோன்ற கண்ணினாய். (10) போது(பூப்போன்ற கண்)அரி(திருமால்)= பூ போன்ற திருக்கண்ணில் திருமாலை என்றும் உடையவள். ''கண்ணன்'' என்ற பெயரும் அதனடியாய்த்து.

பள்ளிக் கிடத்தியோ: என்பது, ''போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ'' என்ற திருவெம்பாவைப்பாடலை நினைப்பிப்பது. பள்ளிக் கிடத்தலாவது கண்ணனுடன் பள்ளிப் பிள்ளைகள் போல் நினைவு இட்டுக் கொண்டிருக்கிறாயா? நீ அறிவு வந்த பெண்ணல்லவா? பள்ளி விடுத்தும் உறங்குகிறாயா? பள்ளி என்பது ஒருவகைச் சொல்லாகவும் ஆவதுண்டு. பள்ளிக் கிடத்தியோ—பாவைக் களமான காலக்ஷேப கூடத்தில் பயின்று இன்று ஆசான் உரைத்த ஆன்மதத்துவங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறாயா? திருமால் அறிதுயில் கொண்டதுபோல் நாமும் அறிதுயில் கொள்ளலாமெனப் பள்ளிக் கிடத்தியோ என்றெல்லாம் பொருள் நயம் கூறலாம். பள்ளிக் கிடத்தியோ? பள்ளிக்கிடத்தி—பள்ளியில் பயிலும் சிறு பிள்ளையோ?

நன்னாளால்: உருபு மயக்கமாகக் கொண்டு நன்னாளில் எனவும் பொருள் கூறலாம். ஆல் என்பதை வியங்கோள் விகுதியாகவும், அசைச் சொல்லாகவும் கூறலாம். முதற்பாட்டில் ''மதிநிறைந்த நன்னாளால்'' என்று கூறிய ஆண்டாள் இப்பாட்டினைப் பாடும் 13 ஆம் நாளை நன்னாள் என்று குறிப்பிட்டது, திருமாலின் சிறப்பான நாளான துவாதசியைக் குறிப்பது. முதல்நாள் பௌர்ணமி ஆனதால் 13—வது நாள் துவாதசியாகும். மற்றைய நாட்களில் உறங்குவது சரி என்று கொண்டாலும், ஏகாதசிக்குக் கண் விழித்துத் துவாதசி அன்று பெரும்பாரணை செய்ய வேண்டிய இந்த நேரத்திலா தூங்குவது! நம்பாடுவான் என்ற பாணனும், பிரம்ம ராட்சசனும் கண்ணன் பெயரைப் பாடிக்கேட்டு மோட்சம் பெற்ற துவாதசி நன்னாளன்றோ? வராக புராணத்தில் குறிப்பிட்ட படிக்கு நம்பாடுவான் சரிதத்தை ஆதிவராகன் கூறக் கேட்டு ஆண்டாளாக அப் பூமிதேவியே அவதரித்தாள் என்ற புராணக் கொள்கையை நினைவுபடுத்தும். இப்பாடல் ''திருமாலை''ப் பாடிய தொண்டரடிப் பொடியாழ்வாரைப் பள்ளி உணர்த்தும் பாசுரம் என்றும் கூறுவர்.

இன்னும் இப்பாட்டில் கண்ட ஒவ்வொரு சொல்லிற்கும் பல இன்சுவைக் கருத்துக்கள், மடுவெனத் தேங்கி நிற்கின்றன விரிவிற்கஞ்சி, இத்துடன் நிறுத்துவோம். கள்ளம் தவிரவும் கலந்து இருக்கவும் வேண்டும் சொற் சித்திரம் இதன்கண் அற்புதமாக அமைந்து உள்ளது. உலகத்தையும் உத்தமனையும் ஆண்டவளன்றோ ஆண்டாள்!

★

தேவி கருமாரியம்மன்

சீவக சிந்தாமணி

திரு. க. த. திருநாவுக்கரசு, M.A., M. Litt.,
(திருக்குறள் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.)

முன்னுரை :

இந்திய மொழிகளுள் தமிழ் தொன்மையான இலக்கிய வளமுடையது. பிற இந்திய மொழிகளுக்கில்லாத சிறப்பியல்புகள் பல தமிழிற்கு உண்டு. இந்தியாவில் தோன்றிய சமயங்கள், வந்து குடிபுகுந்த சமயங்கள் ஆகியவற்றின் சார்பாகப் படைக்கப்பெற்ற இலக்கியங்கள் அனைத்தும் தமிழ் மொழியில் உள்ளமை அதற்குரிய சிறப்புக்களில் ஒன்றாகும். பல்வேறு சமயங்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கின. அக்காலங்களில் புதிய சமயத்தின் சார்பாகப் பல புதிய தமிழ் இலக்கண இலக்கியங்களை அறிஞர்கள் தமிழில் படைத்துள்ளனர்.

தமிழகத்திற்குச் சமண சமயம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே வந்தது எனலாம். அக்காலம் முதற் கொண்டு கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சமண சமயப் பெரியோர்கள், தமிழன்னைக்குப் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வந்துள்ளனர். தென்னாட்டில் சமண சமயம் தழைத்தோங்கிய காலத்தில் எழுந்த நூல்கள் எண்ணற்றவை. அவற்றில் ஒன்றாகச் சிந்தைக்கினிய சீவக சிந்தாமணி, பெருங்காப்பியங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் சிறப்புடையதாகும். சமண சமயத்தைச் சேர்ந்த சீவகன் என்ற ஓர் அரசனின் வரலாற்றை எடுத்துரைப்பதன் மூலம், சமணசமயத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அழகுணர்ச்சி தோன்ற, இனிமை கனியும்படி செய்யுட்களாகப் பாடியவர் திருத்தக்கதேவர் என்ற சமணத் துறவியாவார்.

காப்பியமரபு :

தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரத்திற்கு அடுத்த நிலையில் சிறப்புற்று இலங்குவது செந்தமிழ்க் காப்பியமாகிய சிந்தாமணியாகும். காதலும் கற்பனையும் கலந்துறவாடுமாறு இன்பச்சுவை சொட்டச் சொட்டக் காப்பியம் இயற்றிய பெருமையும் சிறப்பும் தேவருக்கே உரியதாகும். 'காப்பியக் கலித்துறை' எனப்படும் விருத்தயாப்பில், ஓசை இனிமை என்ற உயிரோட்டத்தோடு கூடிய சொல்லழகும், சொல்லினிமையும் வாய்ந்த செய்யுட்களைப் படைத்ததன் மூலம் தமிழிலக்கிய வானில் 'பொங்கிவரும் பெருநிலவாக'த் தேவர் பொன்றாப் புகழ் பெற்று விட்டார்.

கவிகள் இயற்றுவன காப்பியம் எனப் பொதுவாகக் கூறப்படுவது மரபு. ஆனால், கவிஞர்கள் இயற்றும் எல்லாப் பாடல்களும் நூல்களும் காப்பியமாகப் போற்றப்படுவதில்லை. காப்பியத்தைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர், 'தொடர்நிலைச் செய்யுள்' என்பர். சிந்தாமணியில் வரும்,

> ''கருதுவ தங்கொன் றுண்டோ ?
> காப்பியக் கவிகள் காம
> எரியெழ விகற்பித் திட்டார்
> இறைச்சிப்போர் இதனை என்றான்''
> —1585

என்ற அடிகளுக்கு உரை விளக்கம் தந்த நச்சினார்க்கினியர், ''நால்வகை உறுதிப் பொருள்களையும் கூறுவதாய்க் கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்'' என்று

குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும்.

இக்காப்பியம் அமைப்பு முறையில் எளிமையானது. கதையினைப் படிப்போர், எளிதில் அதன் குறிக்கோளை உணரும் வகையில் நெகிழ்ச்சியுடைய இனிய சொற்களினுல் அரிய கருத்துக்கள் அழகுறச் சிந்தாமணியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆயினும், அதனுடைய கதையமைப்பு-கட்டுக்கோப்பு நெகிழ்ச்சி உடையதாகக் காணப்படுகிறது.

காப்பியக் கட்டுக்கோப்பு :

காப்பியம் என்பது கலையழகு வாய்ந்தது. அக்கலையழகும் சுவையுணர்வும் பெருக வேண்டும் என்ருல் காப்பியக் கதை, நிகழ்ச்சிகளைக் கால முறைப்படி (வரலாறு எழுதுவதைப் போன்று) ஒன்றன்பின் ஒன்ருக அமைத்துக் கூறக் கூடாது. காப்பியத் தலைவனுடைய வாழ்க்கையின் குறிக்கோளாய் அமைந்த பெருஞ்செயலை எடுத்துக் கொண்டு, அதன் தோற்றம், வளர்ச்சி, உச்சநிலை, முடிவுநிலை என்பனவற்றை வரையறுத்து அம்முறைப்படி கதையைக் கவினுற அமைத்தால், 'கதையொருமை' (Unity of Plot) என்ற உணர்ச்சி, கற்பவர் உள்ளத்தில் களிப்பினை யூட்டும். இக் கதையொருமை என்னும் காப்பியத் திறன் சிந்தாமணியில் சிறிதளவும் இடம்பெறவில்லை என்றே நாம் கூறலாம். தன்னிகரற்ற தலைவன் ஒருவனுடைய வாழ்க்கை வரலாற்றை முதலில் இருந்து முடிவு வரையில் கூறுவதோடு, அவன் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றைத் திரட்டிப் பட்டியல் அமைத்ததைப் போன்று சிந்தாமணி இயற்றப்பட்டுள்ளதால் அதனுடைய கலையழகு குன்றி விட்டது.

காப்பியத் தலைவனுகிய சீவகன் வாழ்க்கையில் நிகழ்ந்த பத்திற்கு மேற்பட்ட சுவை மிக்க நிகழ்ச்சிகளைச் சிந்தாமணி சித்தரிக்கிறது. அந்நிகழ்ச்சிகள் பல வண்ண மலர்களால் தொடுக்கப்பட்ட கவர்ச்சி மிக்க மாலையாகத் தோன்றவில்லை. உதிரிப் பூக்களாகவே சிதறிக் காணப்படுகின்றன. ஒரு நிகழ்ச்சிக்கும் மற்ரெரு நிகழ்ச்சிக்கும் நெருக்கமான பிணைப்பு இல்லை. எடுத்துக் காட்டாக, காந்தருவதத்தையார் இலம்பகத்தையும், குணமாலையார் இலம்பகத்தையும் குறிப்பிடலாம். இவ்விரண்டிற்கும் இடையே நெருக்கமான பிணைப்பு இருப்பதாகத் தோன்றவில்லை. சீவகன் என்ற காப்பியத் தலைவனுடைய வாழ்க்கையில் அடுத்து நிகழும் என்பதைத் தவிர; முன்னதன் வளர்ச்சியாக அடுத்து வரும் நிகழ்ச்சி அமையாமல்போனது வருந்தத்தக்கதாகும்.

''காப்பியம் என்பது பல உறுப்புக்களையுடைய ஒரு பொற்சங்கிலி. அதனுடைய பல்வேறு உறுப்புக்களும் தக்க முறையில் இணைந்தும் இழைந்தும், படிப்போருடைய உள்ளத்தில் ஒருவிதப் புத்துணர்ச்சியை ஊட்டுவதோடு, சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைய வேண்டும்'' என்பர் அரிஸ்டாட்டில். இதனுல் காப்பியம் என்பது தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் விரிவுரையாகவோ, குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் பண்பு நலனைப் புனைந்துரைப்ப தாகவோ அமையக் கூடாது என்பது புலனுகின்றது. இதனைத் தொல்காப்பியர் 'வனப்பு' என்பர்.

'வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியால் தாய பனுவலோ(டு)
அம்மை தானே அடிநிமிர் பின்றே'
செய்யு. 235.

''வனப்பு என்பது பெரும்பான்மையும் பல உறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகாதலின்..... பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப்பு என்னும் பெயர்ப்பகுதியான் ஏற்பதென்பது'' என்று பேராசிரியர் வரைந்துள்ள உரை விளக்கம் இங்குக் கருதத் தக்கதாகும். எனவே, வனப்பு என்னும் சொல்லிற்குத் 'திரண்ட அழகு' என்று தொல்காப்பியனுர் பொருள் கொண்டுள்ளமை தெரிய வருகிறது. இந்தத் திரண்ட அழகினையே அரிஸ்டாட்டில் காப்பியத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் பண்பு என்று கூறுகிருர். நம்முடைய சிந்தாமணியில் இப்பண்பு சிறிதளவுகூட இடம்பெறவில்லை.

தனித்தனிச் செய்யுட்களில் காணப்படும் கற்பனை வளம், கருத்தாழம், பொருள் நயம், சொன்னயம், இழுமெனும் ஓசையின்பம் என்பனவற்ருல் சிந்தாமணிக்கு ஒருவகையான

சிறப்பு உண்டாகியிருக்கிறது. ஆனால், அப் பண்புகள் ஒன்றாக இணைந்து, மாண்புமிக்க முழுவடிவம் பெற்றதொரு காவியத்தை உருவாக்கவில்லை. ஒரு பெரிய மாளிகையின் அமைப்பும் தோற்றமும் அழகுற்று விளங்க வேண்டுமானால் அதைக் கட்டுவதற்கு நல்ல கற்கள், சுதை போன்றவை வேண்டும். ஒரு வரையறைக்குட்பட்டு, கற்களைச் சீராகவும் முறையாகவும் அடுக்கி, அவற்றிடையே சாந்திணைப்பெய்து, புறத்தே சுதையினைப் பூசினால் காண்பவர் கருத்தைக் கவரும் மாளிகையாக அது தோன்றும். அவ்வாறு செய்யாமல், ஒரு பக்கம் செங்கற்களையும், மற்றொரு பக்கம் சுண்ணும்பையும், பிறிதொரு பக்கம் வேறு பிற பொருள்களையும் குவியல் குவியலாகக் கொட்டி வைத்தால், அக்காட்சி எவ்வாறு இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? அதைப் போன்று சிந்தாமணி, கொட்டப்பட்ட செங்கற்களாகக் காட்சி தருகிறதேயொழிய, கட்டப்பட்ட மாளிகை யாகத் தோன்றவில்லை என்று கூறலாம். இதனை வேறுவகையாக சி. எஸ். லியூயிஸ் என்னும் திறனாய்வாளர் குறிப்பிடுகிறார்: 'தனித் தனிச் செய்யுட்களின் அழகைக் கண்டு களித்தல், கட்டி முடிக்கப்பட்ட மாளிகையிலே ஒரு தனிக்கல்லின் அழகிய அமைப்பினைக் கண்டு மகிழ்வதோடொக்கும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளமை (A Preface to Paradise Lost, p. 2) இங்குச் சிந்திக்கத்தக்கதாகும்.

சிந்தாமணியின் செய்யுட்களைப் படிப்போ மானால் இவ்வுணர்ச்சியே மேலெழுகிறது. தனிப்பட்ட செய்யுளின் அழகும் இனிமையும் இந்த உணர்ச்சியைத்தான் மிகுவிக்கின்றன. இதனால் ஆசிரியரின் கவித்திறனில் மிக முக்கியமானதோர் குறைபாடு நமக்குப் புலனா கின்றது. கதை முழுவதையும் மனக்கண் முன் நிறுத்தி, அதன் பல்வேறு பகுதிகளையும் உறுப்புக்களையும் முறைப்பட உணர்ந்து, அவை யனைத்தையும் ஒன்று சேர்த்து, அழகுறக் கற்பித்து அமைக்கும் சிறந்த படைப்புத்திறன் தேவரிடம் அமையவில்லை. அழகுமிகு கட்டமைப்பினையுடைய காப்பியத்தைப் படைக்கத்தக்க அறிவாற்றல் நிறைந்த பெரும் சிற்பியாகத் தேவர் விளங்காமற் போனது தமிழருடைய தவக்குறைவேயாகும்.

பாத்திரப் படைப்பு :

கவின்மிகு காப்பியங்களுக்குப் பாத்திரப் படைப்பு என்பது உயிர் நாடியாம். இளங்கோ வடிகள், கம்பர் முதலியோர் படைத்துள்ள பாத்திரங்கள் உயிர்த்துடிப்பும் கலையழகும் வாய்ந்தவை. இளங்கோவின் 'கண்ணகி' என் றென்றும் நம்முடைய இதயக் கோவிலில் வீறுடன் விளங்கக்கூடிய பாத்திரமாகும். கம்பரின் இராமன், இராவணன், கும்பகருணன் போன்றோர் அழகு மிக்க அரிய பாத்திரங்கள் என்பதில் யாரும் ஐயுறவு கொள்ளுவதற்கு இடமேயில்லை. இப்பாத்திரங்களின் [illegible]யும் நிறையும் வாய்ந்த பண்பு [illegible]ங்கள் கற் பாருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடுகின்றன. ஆனால், சிந்தாமணியில் வரும் பத்திற்கு மேற்பட்ட பாத்திரங்களுள், ஒன்று கூட உளவியல் நெறிகளைப் பின்பற்றிப் படிப் படியாக வளர்ச்சியுறும் பண்பு நலனைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமையவில்லை. சீவகன் முதற்கொண்டு, அவனுடைய தாய் விசயை ஈறாக உள்ள பாத்திரங்கள் எல்லாம் ஆழ்ந்ததும், அகன்றதுமான மனித இயல்புகளைப் பிரதிபலிக்கும் பாத்திரங்களாகத் தோன்றவில்லை; உள்ளத்தைத் தொடும் உண்மையான உயிர்த் துடிப்பினை இப் பாத்திரங்களில் சிறிதும் காணமுடியவில்லை. பொதுவாக நோக்குமிடத்து, இக்காப்பியம் 'நெஞ்சை அள்ளும்' சிந்தாமணியாக அமைய வில்லை.

இத்தகைய குறைகள் சில சிந்தாமணியில் காணப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. எனினும், 'சிந்தாமணி' தமிழ்க் காப்பிய உலகில் சிறப்புற்று விளங்குவதற்குரிய காரணம் என்ன?' என்ற ஐயம் எழலாம்.

சிறப்பியல்புகள் :

திருத்தக்கதேவர் தம்முடைய காப்பியத்தைக் கற்பவருக்குச் சலிப்புத் தோன்றாமல் இருப்பதற்காகச் சில இலக்கியத் திறன்களைக் கையாண்டுள்ளார். அவற்றுள் முதன்மையானது யாப்பு நடையாகும். உணர்ச்சிச் சூழல்களுக்கு ஏற்பவும், இடம், பருவம் முதலியவற்றிற் குகந்த முறையிலும் கருத்துக்களை எடுத்துரைக்கும் முறைக்குத் தக்கபடியும் செய்யுட்கள் வேறுபட்ட யாப்பு

அமைதியை உடையனவாக அழகுற்று விளங்குகின்றன. நூல் முழுவதிலும் இனிய தமிழ் நடையில், தேவர் பல்வேறு வகையான செய்யுட்களை இயற்றியமைத்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

''கூந்தலை ஒருகை யேந்திக்
குங்குமத் தாரை பாயப்
பூந்துகில் ஒருகை ஏந்திப்
புகுமிடங் காண்டல் செல்லார்
வேந்தனைச் சரணென் றெய்த
விம்முறு துயரம் நோக்கிக்
காய்ந்துபொற் சிவிறி யேந்திக்
கார்மழை பொழிவ தொத்தான்''

—2660

இப்பாடலில் இழுமெனும் இன்னேசையும் கற்பனை வளமும் பெருக்கெடுத்து ஓடுகின்றன. அழகிய அருவியில் நீராடி வரும் நாகரிக நங்கையரை இச்செய்யுள் நமது மனக்கண் முன்னல் கொண்டு வந்து நிறுத்துகிறது. பந்தாடும் பாவையினைப் படம் பிடித்துக் காட்ட முனையும் தேவர், பந்தாடுகின்ற பொழுது எழும் இனிய ஒலியினை ஓசையை,

''குழல்மலிந்த கோதைமாலை
பொங்கவெங் கதிர்ம்முலை
நிழல்மலிந்த நேர்வடம்
நிழற்படப் புடைத்தர
எழில்மணிக் குழைவில்வீச
இன்பொனேலை மின்செய
அழல்மணிக் கலாபம்அஞ்
சிலம்பொடார்ப்ப ஆடுமே''

—1952

என்ற செய்யுளில் அழகுற அமைந்துள்ளதை நாம் பாடியுணர்ந்து மகிழலாம்.

அணைகடந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடும் இன்பச்சுவை, இக்காப்பியம் சிறப்புற்று விளங்குவதற்கு மற்றொரு காரணமாகும். காமநூலாரின் விதிமுறைகளைப் பின்பற்றிக் கூடலைப் பற்றிய செயல் நுட்பக் கருத்துக்களும், மகளிரின் உடலழகினையும் உறுப்பு நலன்களையும் உச்சிமுதல் உள்ளங்கால் வரை அணு அணுவாகப் புனைந்துரைக்கும் கற்பனைத் திறனும் கற்பவருடைய உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகின்றன.

பெருங்காப்பிய நெறியின் பண்புகளாகிய தன்னிகரற்ற தலைவன், நாற்பொருள் பயத்தல், மலை, கடல், நாடு, வளநகர் வருணனை, இருசுடர்த்தோற்றம், மறைவு, நன்மணம் புணர்தல் புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல், மந்திரம், தூது போன்ற பல கூறுகள் சிந்தாமணியில் இடம்பெற்று உள்ளமையால் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் இதனைப் போற்றிப் பாராட்டினர் எனலாம், ★

(10: 12: 72)ஆந்தேதி திருக்கல்யாணமண்டபத்தில் மாதிரி அம்மனுக்குத் தங்க கவசம், கீரிடம் சாத்தப்பட்டுப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருப் பட்டிருப்பதைத் திருப்பணிக் குழுத்தலைவர் திரு. பி. டி. ராஜன், துணை ஆணையர் திரு. எ. முருகேசன், அறங்காவலர் குழுத்தலைவர் எல். நாராயணன்செட்டியார் முதலியவர்கள் பார்வை இடுகின்றனர்.

அடைக்கலம்

டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனபதி, M. A., Ph. D.,
(சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவப் பேராசிரியர்)

வேறு எதனையும் அல்லது வேறு எவரையும் நாடாது இறைவனையே புகலிடமாகக் கொள்வோர் சமயச் சான்றோர். துன்பத்தை விலக்கி இன்பம் அடைவதற்காக உலகியற் பொருள்களையோ பிற உயிர்களையோ அவர்கள் நாடுவதில்லை. செல்வம் நிலையாதது. செல்வாக்கு எப்போதும் ஒருபடித்தா யிருப்பதில்லை. மக்களுடைய அரவணைப்பு உறுதியானதன்று. எனவே இறைவனையே உறுதுணையாக நாட வேண்டுமென்பது அவர்கள் கண்ட உண்மை, கடைப்பிடிக்கும் உண்மை.

தம்மை இறைவனிடம் ஒப்படைக்க வேண்டிய கலமாகக் கருதி, அவனிடம் தம்மைத் தந்துவிடுவது மக்கள்பால் எளிதாக நிகழ்வதன்று, ஆயினும் நிகழ வேண்டுவதொன்று. இது அனைத்தாம் சமயங்களும் வற்புறுத்தும் ஓர் உயரிய உண்மை. மக்களுக்கு ஏற்படும் துன்பம் இறைவனால் உண்டாக்கப் படுவதன்று. இறைவன் திருவருளுடன் ஒத்துச் செல்லாமல் தன் முனைப்புடன் புலனின்பத்தை நாடி வாழ்வதாலும், இத்தகைய வாழ்வில் பிறருக்கு ஊறு செய்வதாலும் துன்பம் விளைகிறது. ஒரு பிறவியுடன் தொடங்கி முடிந்து விடாமல் பல பிறவிகளில் இது தொடர்ந்து வருகிறது. எப்பிறவியிலும் எழுமைக்கும் இறைவனே நம்மை ஆள்பவன், அவன் திருவருட் பாங்கின்படியே நாம் நடக்க வேண்டும் என்னும் உண்மை புலப்பட்டு, அதன்படி நாம் ஒழுகும்போது துன்பம் நீங்குகிறது. இன்பம் பிறக்கிறது.

இறைவனுக்கு உரியவர்களாக நம்மைக் கருதாமல் நாமே முழு உரிமையுடையவர்கள் என்று கருதி ஒழுகுவது வாழ்க்கையில் நிகழும் பெரும்பிழை. 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்பது இப்பிழையை நீக்க உதவும் உண்மை. இறைவனுக்கு முற்றூட்டாகவும் முழு உரிமைப் பொருளாகவும் நாம் இருக்கவேண்டும் என்பதனை நினைவூட்டும் வகையில் அப்பர் பெருமானுடைய திருவாக்கு உள்ளது;

> 'இடைக்கலம் அல்லேன், எழுபிறப்பும்
> உனக்கு ஆட்செய்கின்றேன்'

என்று அவர் கூறுகின்றார். எழுமைக்கும் ஆட்செய்ய வொட்டாது தடுக்கும் இடர்ப்பாடுகளை வெல்வதற்கு ஒரு படைக்கலம் தேவைப் படுமன்றோ? அப்படைக்கலம் இறைவன் திருப் பெயரின் ஐந்தெழுத்தாகும். எனவே, 'படைக் கலமாக உன் நாமத்தஞ்செழுத்து என் நாவிற் கொண்டேன்' என்று அவர் அதனையும் நமக்குத் தெளிவுறுத்துகிறார். இடைவிடாது நாத்தழும்பேறும் வகையில் இறைவன் திருப் பெய்ரைக் கூறி வரும்போது, உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றும் இறைவன் திருவருட் குறிப்பின் வழி இயங்கிவரும். துன்பங்கள் நிகழும்போது இறைவனை மறந்து அல்லது இறைவனைக் குறைகூறி அவனைப் புறக் கணிப்பது உலகினர் தன்மை. ஆனால் மெய் யடியார்கள் அவனை ஒருபோதும் மறப்பதில்லை. தன்னிடமிருந்து அவர்களை விலக்கக் கருதுவதுபோல அவர்களுக்கு இறைவன் இடுக்கண் விளைவித்தாலும், அவனை அவர்கள் மறப்பதில்லை வணங்கத் தவறுவதுமில்லை. 'துடைக் கினும் போகேன்' என்று தம் உறுதியை அப்பர் புலப்படுத்துகிறார். நாவில் ஐந் தெழுத்தைக் கொள்வதோடு அமையாமல் உள்ளத்தால் வணங்கி, உடலிலும் தம் அடிமைத் திறத்தை உணர்த்துவதற்காகக்

கையாளப் பெறும்முறை, தொழுது வணங்கித் தூநீறணிதல்'. இவ்வாறு உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றையும் இறைவனிடத்தில் தந்துவிடுவது, தம்மையே அவனிடம் தந்திடுவது, அடைக்கலம் புகுதலாகும்.

படைக்கலமாக உன்நாமத் தெழுத்தஞ்சென்
நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப் பும் உனக்
காட்செய் கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்
றம்பலத் தரனே

அடைக்கலத்தின் திறத்தையும் சிறப்பையும் உணர்த்தும் வகையில் மாணிக்கவாசகரும் வேதாந்த தேசிகரும் அருளிச்செய்துள்ள அடைக்கலப் பத்து, சைவ, வைணவ சமயத்தவருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. ஒப்பியல் முறையில் ஒரே தலைப்பிலுள்ள இவ்விரு பதிகங்களைக் கற்பதில் இவ்விரு சமயங்களின் அடிப்படைத் தத்துவம் விளக்கமாவதுடன் எச்சமயத்தவராயினும் திருவருட் செல்வர்கள் ஓர் இனத்தவரே யாகின்றனர் என்னும் உண்மையும் புலப்படுகிறது.

★

11-12-72 காலை வைரக்கிரீடம், மதுரை மீனாட்சி அம்மனுக்குச் சாத்துவதற்காக முறைப்படி பூசை செய்யப்படுகிறது.

சுற்றறிக்கை

ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 34

ந. க. எண். 33823/72/ அ2 நாள் 30-10-72.

பொருள்: சிற்பங்கள் மற்றும் கல்வெட்டுகள் பாதுகாத்தல்— அறநிலையங்களின் நிர்வாகிகளுக்கு அறிவுரை அளித்தல்—குறித்தது.

பார்வை: தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரின் கடித எண். டி. ஏ. 2754/72/ஏ2-1 நாள் 3-6-72.

தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் கீழ்க்கண்ட ஆலோசனைகள் தெரிவித்துள்ளார். அதன்படி எல்லா அறநிலைய நிர்வாகிகளுக்குக்கும் தக்க அறிவுரைகள் வழங்கும்படி எல்லாத் துணை, உதவி ஆணையாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. பழமையான சிற்பங்கள் சரிவரக் கவனிப்பார் இன்றி மழையிலும், வெய்யிலிலும், புதைந்தும் பல ஆலயப் பிரகாரங்களில் கிடக்கின்றன. அவை வழிபாட்டிற்கு உகந்தவை அல்ல ஆயினும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்தவையானதால், டி சிற்பங்களை ஆலய மண்டபங்களின் உள்ளே பாது, காப்பாக வைத்திருக்க வேண்டும் என எல்லா ஆலய நிர்வாகிகளுக்கும் அறிவுரை அளித்தல் வேண்டும்.

2. ஆலயங்களில் உள்ள கல்வெட்டுகள் மேற்படி ஆலயங்களின் பழங்காலச் சிறப்பு, சரித்தரம் முதலியவைகளைக் காட்டக்கூடியவை. ஆகவே அவைகள் பத்திரமாகப் பராமரிக்கப்படவேண்டும். ஆனல் பல இடங்களில் சிமெண்ட் பூசியும், எண்ணெய் வண்ணம் பூசியும் கல்வெட்டுகளை அழித்து விடுகின்றனர். இவ்வாறு செய்தல் அறவே தவிர்க்கப்படல் வேண்டும். ஆகவே இது சம்பந்தமாக எல்லாத் துணை, உதவி ஆணையாளர்களும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட ஆலய நிர்வாகிகளுக்குத் தக்க அறிவுரை வழங்குமாறு கோரப்படுகிறார்கள். அவ்வாறு அறிவுரை அளித்திருந்தும் மீறும் ஆலய நிர்வாகிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கும்படி கோரப்படுகிறது.

ஈசு. 1612.

(ஒ-ம்)......
ஆணையாளருக்காக.

பெறுநர்:
1—18. எல்லாத் துணை/உதவி ஆணையாளர்களுக்கும்.
9. நகல்: 'இ' பிரிவிற்குக் குறிப்பின் நகலுடன்.



10—12—72 இரவு மதுரை மீனட்சியம்மனுக்குச் சாத்தப்பெறும் வைரக்கிரீடம் ஆடிவீதி வழியாகப் புறப்பாடு செய்யப்படுகிறது.



மாதவப்பெருமாள், திருமயிலை.

சென்னை திருமயிலை மாதவப்பெருமாள்கோயிலில் வசந்தகல்யாணமண்டபக் கால்கோள்விழா நிகழ்ந்தபொழுது, குடிசைமாற்று வாரியத் தலைவர் திரு. இராம. அரங்கண்ணல், M. L. A. அவர்கள் உரையாற்றுதல். (26 - 11 - 72)

திருவிடைமருதூர்த் திரு. குமரன் கோயில் திருப்பணியை அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I. A. S. அவர்கள் தொடங்கி வைத்தல். (17: 11: 72).

திருவிடைமருதூர்த் திரு. ஆளுடையார் கோயில் திருப்பணியை, அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L . I.A.S. அவர்கள், திருவாசகச் செல்வர் திரு. ஜி. வன்மீகநாதன் (இந்திய அரசின் முன்னாள் துணைச்செயலாளர்) அவர்கள் தலைமையில், தொடங்கிவைத்தல். (17 : 11 : 72).

திருவேங்கடத்தின் சீர்மை

சிந்தாமணிச் செல்வர், மகாவித்துவான்
திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள், சென்னை.

'திவ்விய கவி' அதாவது, தெய்வமணங் கமழும் பாடல், என்னும் அழகிய சொற்றொடரைப் பட்டமாகப் பெற்று வாழ்ந்தவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்னும் பெருந்தகையார். அவர் தாம் திருமகள் கேள்வனைப் பொருளாகக் கொண்டு பாடிய பிரபந்தங்கள் எட்டு. அவை "அஷ்டப் பிரபந்தம்" என வழங்கப்படும். அவற்றுள் 'திருவேங்கடமாலை' என்பது ஒன்று. அது 'திக்கெல்லாம் போற்றும் திருவேங்கடம்' என்னும் திருப்பதியின் சீர்மையைச் சித்திரிப்பது. அச்சித்திரங்களுள் சிலவற்றை, நாம் மனக்கண்ணால் கண்டு மகிழலாம்.

ஆழ்வார் பன்னிருவர். அவர்களுள் தொண்டரடிப் பொடியாழ்வாரைத் தவிர, மற்றவர் அனைவரும் திருவேங்கடம் என்னும் திருமலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். ஆதலால்,

"ஆழ்வார்கள் செந்தமிழை
ஆதரித்த வேங்கடம்என்
தாழ்வான புன்சொல்லும் தாங்குமால்"

எனத் 'திவ்விய கவி' பாடுகிறார்.

பொன்னும் மணியும் பொலிந்தோங்கிப் பார்மகளுக்கு மின்னும் மணிமுடியாகும்; மாலைக் கோலித்திரியும்—மயக்கம் கொண்டு அலையும் வையகத்தோர், பிறவிக்கடலைக்கடப்பதற்கு ஒப்பற்ற கப்பலாகும்; பறவைகளின் இன்னொலியும், அருவிகளின் அணியிசையும் இடையறுது இசைக்கும் சேடாசலமாகும்; மாண்டு பிறக்கும் தொழில் போய் வைகுந்தம் புகுந்தவர்களும் மீண்டு தொழக்காதலிக்கும் வெற்பாகும், வேதங்களால் ஓதப்பெறும் மேன்மை வாய்ந்தது; மேருமலையும் கயிலையங்கிரியும், வேங்கடம் தெள்ளியதோர் வீடருளும் சீர்கேட்டுச் செருக்கொழிந்து, தலைவணங்கும் தகுதியுடையது; எப்பூதலமும் இறைஞ்சித் திசை நோக்கி மெய்ப்பூசனை புரியும் மேன்மையது; பித்து, மலடு, ஊமை, முடம், பேய், குருடு, கூன், செவிடு, என்னும் மெய்த்துயர் நோய் தீர்த்து அருள்புரிய வல்லது திருவேங்கடம்; வெள்ளிய கல்லின்மீது விடரில் முளைத்த செங்காந்தள் மலர், வெள்ளி அகலில் ஏற்றி வைத்த விளக்கைப் போலக் காட்சியளிப்பது; காந்தள் மலர்கள் யாசகரைப் போலக் கையேற்ப, கொன்றை மரங்கள், கொடையளிக்கும் வேந்தனைப் போலப் பொன் மயமான மலர்களைச் சொரியும் மாண்புடையது; தன்னை விரும்பி வந்தவருக்கும், உலக விருப்பங்களை ஒழித்த முனிவர்களுக்கும், பிறப்பையும் இறப்பையும் ஒழிக்கும் பெற்றி வாய்ந்தது; மாமரத்திற் குயிலும் மயிலும் மகிழப்—பாடியும் ஆடியும் பரவசமாக—காள முகில் தவழும் காட்சியை உடையது; கண்டு அடைந்த வானவர் விண் தவிர்ந்து வியந்து நிற்கும் வெற்பு; பேய்க்கும் ஒரு பேய் போன்று பித்தாய்த் திரிவோர்க்கும் முத்தி உண்டாக்கும் சித்தித் தலம்.

இவை மணவாளதாசரெனும் திவ்வியகவிப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அவர்கள், திருவாய் மலர்ந்த அருள்வாக்கு.

"பித்துமல டூமைமுடம்
பேய்குருடு கூன் செவிடு
மெய்த்துயர் நோய் தீர்த்தருளும்
வேங்கடமே—பத்தருக்கு
வந்ததுக்கும் காப்பான்;
மலர்உந் தியின் உலகம்
தந்துஅதுக்குஅங் காப்பான் தலம்."

உலகம் தந்து அதுக்கு அங்காப்பான்—தானே உலகைப் படைத்து, அதற்குப் பிரளய காலத்தில் தன் வயிற்றில் தங்க இடங்கொடுக்க, அதை விழுங்கும்பொருட்டு வாயைத் திறப்பவன் திருவேங்கடமுடையான்.

மனமே! புறப்படு! மாதவன் வாழும் மாமலையாம் திருவேங்கடத்தைத் தினமும் தரிசிப்போம்! ★

நம்மாழ்வார் பக்திநலம்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

திருமால் நெறிச் சான்றோர்களாகிய ஆழ்வார்கள் அனைவருமே சிறப்புடையவர்களாயினும், அவர்களுள்ளும் மிகவும் சிறப்புடையவராகப் பெரிதும் போற்றப் பெறுபவர் நம்மாழ்வார். நம்மாழ்வாருடைய காலத்திலேயே, அவருடைய மாணவராக இருந்த மதுரகவிகள் என்பவர், நம்மாழ்வாரையும் அவருடைய நூல்களையும் சிறப்பித்துக் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் பத்துப் பாசுரங்கள் அடங்கிய ஒரு நூலை அருளிச் செய்தார். வைணவப் பெருமக்கள் 'பிரபந்நஜன கூடஸ்தர்' என நம்மாழ்வாரைப் பெரிதும் போற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவர். 'பிரபத்தி நெறியைப் பின்பற்றும் வைஷ்ணவப் பெருமக்கள் எல்லோருக்கும் தலைவர்' என்பது அதன் பொருள். ''நர்பெருமாள்-நம்மாழ்வார்-நம் சீயர்-நம்பிள்ளை என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்'' எனவரும் உபதேச ரத்தின மாலைச் செய்யுளும் நம்மாழ்வாரின் மாட்சிமையினை நன்குணர்த்தும்.

பக்தி நலம் :

இத்தகைய நம்மாழ்வார் அறிவு தோன்றுதற்குரியதல்லாத மிக்க இளம் பருவத்திலேயே இறைவனிடத்துப் பேரன்பு கொண்டவராயினர். இளமையிலேயே அவர் ஓதாது உணர்ந்த ஞானச் சிறப்புடையவர் ஆயினர். இவ்வுண்மை ''அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து, அறியா மாமாயத்து அடியேனை வைத்தாயால்'' என வரும் திருவாய்மொழிப் பாசுரத்தால் புலப்படக் காணலாம். ''உண்ணும்சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம் பெருமான் என்று என்றே கண்கள் நீர் மல்கி'' இறைவன்பால் அன்புசெய்து உகந்தவர் நம்மாழ்வார்! ''நீ எனக்கு வீடுபேறு அளிப்பினும் அளிக்க; சுவர்க்கம் தரினும் தருக; அல்லது நரகமே நல்கினும் நல்குக; அதுபற்றி யான் கவல்கின்றிலேன்; எப்போதும் உன்னை நினைந்து நினைந்து மகிழ்வேன்; இதுவே யான் விரும்புவது'' என்னும் கருத்தமைய,

> ''சிறப்பில் வீடு, சுவர்க்கம், நரகம்
> இறப்பில் எய்துக; எய்தற்க; யானும்
> பிறப்பில் பல்பிற விப்பெரு மானை
> மறப்பொன் றின்றி என்றும் மகிழ்வனே''

என்று நம்மாழ்வார் பாடுகின்றார். இதனால் அவர்தம் உயர்வற உயர்ந்த உண்மைப் பக்தியின் இயல்பை நாம் உள்ளவாறு உணரலாம். இதனாலேயே ''ஆழ்வார் சரணாகதியாகிய பிரபத்தி நெறியை மேற்கொண்டவரேயாயினும், பக்தி அவருக்குத் தேக யாத்திரா சேஷம்; அஃதாவது பக்தியின்றி அவர் உயிர் வாழ இயலாதவர்'' என்று பெரியோர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர்.

நம்மாழ்வாரும், சீதைப்பிராட்டியும் :

இத்தகைய நம்மாழ்வார் இறைவனைப் பலவகை நிலைகளில் அனுபவித்து இன்புறும் பேறு பெற்றவர். அப் பலவகை அனுபவ நிலைகளில், அவர் இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் உணர்ந்து, பராங்குசநாயகி எனப்படும் நிலையில், பெண்மை இயல்பு தோன்றி நிற்க, இறைவனை நாயக நாயகிபாவம் அமைய அனுபவித்து மகிழ்ந்த அனுபவநிலை, மிகவும் சிறப்புடையதாகும். இவ்வாற்றால் நம்மாழ்வாரின் பக்தி அனுபவ இயல்பும், சீதைப்பிராட்டியின் காதல் அனுபவ இயல்பும், தம்முள் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன.

(1) பிராட்டி இராமனை விட்டுப் பிரிய நேர்ந்தால், அதனைத் தரித்திருக்கும் ஆற்றல் உடையவள் அல்லளாய், நீரில் பிரிந்த மீன்

போலத் துடி துடித்துச் சோகம் எய்தும் நிலையினள் ஆவாள். அவ்வாறே ஆழ்வாரும் ''மராமரம் எய்த மாயவன், என்னுள் இரான் எனில் பின்னை யான் ஒட்டுவனே?'' என்று அருளிச் செய்து பெருமாளைப் பிரிந்து தம்மால் இருக்க இயலாமையைக் குறிப்பிட்டுள்ளார்.

(2) பிராட்டி பெருமாளைப் பிரிந்து இலங்கை புகுந்த அளவில், பெருமாள் அவள் பொருட்டு இலங்கை வரையிலும் பின் தொடர்ந்து சென்றார். அவ்வாறே ஆழ்வார் பொருட்டுப் பெருமாள் எதிர் சூழல் புக்குக் தேடிப் பின் தொடர்ந்து போந்து அருள் செய்தார். ''எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால்'' என்பது திருவாய்மொழியில் நம்மாழ்வார் வாக்கு.

(3) பிராட்டி இலங்கை நகரில் சிறையிருந்தாள். ஆழ்வாரோ இவ்வுலகியல் வாழ்வாகிய சிறையில் இருந்தார். பிராட்டி சிறையிருந்தமை தேவ மாதர்களின் விடுதலைக்கு வித்தாயிற்று. அது போல ஆழ்வாரின் உலகியற் சிறைவாழ்வு, உலக மக்களின் வீடு பேற்று நலத்திற்குக் காரணமாக அமைந்தது ''அறுவர்தம் பிறவி அஞ்சிறையே'' என்றதனால், ஆழ்வார் உலகியல் வாழ்வைச் சிறையாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

(4) பிராட்டி சிறையிருந்த காலத்தில், கொடியவனாய் மாறுபட்டு நின்ற இராவணனுக்கும் அறிவுரை கூறினாள். அவ்வாறே ஆழ்வாரும், கொடியராய் மாறுபட்டு நிற்கும் உலக மக்களை நோக்கி, நல்ல உபதேசங்கள் பலவும் நவின்றருளினார். ''சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ'' என்பது முதலான பாசுரங்கள் இவ்வுண்மைக்குச் சான்றாகும்.

(5) பிராட்டி பெருமாளைப் பிரிந்து, அரக்கியரின் நடுவே இருக்க நேர்ந்த தம்முடைய உயிர் முதலியவற்றை, பயன் இல்லை என்று வெறுத்தாள். அங்ஙனமே ஆழ்வாரும் பெருமாளுக்கு உறுப்பல்லாத தம்மையும் தம் உடைமையையும் வெறுத்து இகழ்ந்தார். ''ஏறாளும் இறையோனும்'' எனத் தொடங்கும் பாசுரத்தில் இதனை உணரலாம்.

(6) பிராட்டி பெருமாளைப் பிரிந்து, இலங்கையில் தனியே இருக்கப் பொறாளாய், உயிர்விடும் வழிகளைத் தேடினாள். ஆழ்வாரும் அங்ஙனமே, இவ்வுலகியல் வாழ்வினை வெறுத்துப் பெருமாளின் பிரிவாற்றாமல் ''மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண் பிறந்தே'' என்று வருந்துகின்றார்.

(7) பிராட்டி பெருமாளின் பெருமைகளைச் சொல்லிக் கதறினாள். அவ்வாறே ஆழ்வாரும் ''புணரா நின்ற மரம் ஏழ் அன்று எய்த ஒருவில் வலவா'' என்று அவனுடைய வீரத்தை வியந்து புகழ்ந்து அழைத்தார்.

(8) பிராட்டி இலங்கையில் தனியே வருந்தி இருந்த நிலையில் ஒரோவழி இராமனை இரக்கமில்லாதவர் எனவும் நினைத்து ஐயுற்றாள். இங்ஙனமே ஆழ்வாரும் 'இறைவனைப் பிரிந்து இருக்கநேர்ந்த உலகியல் வாழ்வின் கொடுமையினால் 'இரக்கம் எழீர் இதற்கு என்செய்கேன்? அரக்கன் இலங்கை செற்றீருக்கே'' என்றும், ''அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்'' என்றும், இறைவனை இரக்கமில்லாத கொடியவராக நினைத்து ஐயுற்று அரற்றினார்.

(9) பிராட்டி இராமன்பால் தூதுவிடுத்து, அவனால் காக்கப்படுவதற்கு உரியவர்களுள் தானும் ஒருத்தி எனத் தெரிவித்து, விண்ணப்பம் செய்க என வேண்டிக் கொண்டாள். ஆழ்வாரும் ''ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்களே'' என்று சொல்லித் தூதுவிடுத்தார்.

முடிவுரை :

இவ்வாற்றால் நம்மாழ்வார்க்கும், சீதைப் பிராட்டிக்கும் இடையே பலதிற ஒப்புமைகள் இருத்தலை உணரலாம். இத்தகைய ஒப்புமையியல்புகளால், நம்மாழ்வாரின் பக்திநலச் சிறப்பு, இணைத்தென நாம் இனிது உணர்ந்து, 'தொண்டர்க்கு இன்பம்' என்றும், 'அடியார்க்கு இன்பமாரி' என்றும், 'ஆரா அமுதக்கவி' என்றும் புகழப் பெறும் நிலையில், தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகித் தித்திப்ப நம்மாழ்வார் பாடியருளிய நூல்களை, நாளும் நாம் நயந்தினிது ஓதியுய்ய முயல்வோமாக !

★

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

மகாவித்துவான், பத்மவிபூஷண்

திருமிகு: பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள் அவர்கள், காஞ்சிபுரம்

முன்பு திரேதாயுகத்திலே விதேக தேசத்தில் மிதிலைமாநகரில் சனக மகாராசன் யாக சாலை அமைத்தற் பொருட்டுக் கலப்பை கொண்டு பூமியை உழுகையில், அவ்வுழுபடைச் சாலிலே சீதேவியின் அம்சமான ஒருமகள் தோன்ற, அவளை அவ்வரசன் தன் புத்திரியாகப் பாவித்துச் சீதைஎன்று திருநாமஞ்சாத்தி வளர்த்து வந்தான். அதுபோலவே பின்பு கலியுகத்திலே பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே பெரியாழ்வார் திருத்துழாய்ப் பாத்தியமைத்தற் பொருட்டுக் களைக்கொட்டுக்கொண்டு திருநந்தவனத்தைக் கொத்துகையில், அக்கொத்தின் நிலத்தில் சீதேவி பூதேவிகளின் அம்சமான ஒருமகள் ஆடிமாசத்துப் பூர்வ பங்குனி நாளிலே தோன்ற, அவளை அவ்வாழ்வார் தமது மகளாகப் பாவித்துக் கோதை என்று நாமகரணஞ்செய்து வளர்க்கலானார். நுகரப்படும் பொருள் ஒரு சிறிதுமில்லாத வறியவனொருவன் பெருநிதியைக் கண்டாற்போல, அப்பெண்ணருங்கலத்தைக் கண்டவளவிலே பெருங்களிப்புக் கொண்டு மிக அருமையாகச் சீராட்டிப் பாராட்டித் தாலாட்டிப் பாலூட்டிப் பாலித்துவந்த பட்டர்பிரான், அவளுக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து பரமஞானத்தைப் போதித்தனர்.

தந்தை முதலியோர் கண்டு வியக்கும்படி இளமைதொடங்கி எம்பெருமான் பக்கலிலே பக்திப் பெருவேட்கைகொண்டு அவனையே தான் மணஞ்செய்து கொள்ளக் கருதி, அப்பிரானது மகிமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல் துதித்தல் முதலியன செய்து நிற்கிற அச்சுரிகுழற் கோதை நாடேறும் விட்டுணுசித்தர் வடபெருங் கோயிலுடையானுக்குச் சாத்துதற்காகக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத சமயம் பார்த்து எடுத்துத் தன் குழலிலே தரித்துக் கொண்டு, அப்பெருமானுக்கு நான் நேர் வந்திருக்கின்றேனோ இல்லையோ, என்று சிறந்த ஆபரணங்களை அணிந்து உயர்ந்த பட்டாடையை உடுத்துத் தன்னை அலங்கரித்து அவ்வொப்பனை அழகைக் கண்ணாடியிலே கண்டு தந்தையார் வருவதற்கு முன் மலர்மாலையைக் களைந்து முன்போலவே செண்டாகச் சுற்றிப் பூங்கூடையினுள்ளே நலங்காமல் வைத்துவந்தாள். மறைவாக நடக்கிற அச்செய்தியை உணராமல் ஆழ்வார் அம்மாலையைக் கொண்டுபோய் சுவாமிக்குச் சாத்திவர, பெருமானும் விருப்பமுடன் ஏற்றருளினன்.

இங்கனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டு வந்தபோது, பூமாலையைக் கோதை சூடியிருத்தலைப் பார்த்துக் கோபங்கொண்டு பெண்ணே! நீ செய்த இது மிக்க அபசாரமான காரியம்; இனி இவ்வாறு செய்தற்கு நினைப்புக் கொள்ளாதே என்று நங்கைக்கு நற்புத்தி சொல்லிவிட்டு அன்று வடபத்திர சாயிக்கு மாலை சாத்தாமல் திருப்பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததற்கு மனம் வருந்தியிருந்தார். அற்றை நாளிரவில் ஆலிலைத் துயில்வோன், ஆழ்வாரது கனவில்தோன்றி, 'இன்று நீ நமக்கு மாலைகொண்டு வராதிருந்தது ஏன்?' என்று வினவியதற்கு, அவர் தம் திருமகளாரது பொருந்தாச் செய்கையை விண்ணப்பஞ்செய்ய அது கேட்டு அப்பெருமான், அவள் சூடிக் கொடுத்த மாலையேகாண் நறுமணமிக்கு நமது உள்ளத்துக்கு நனி உகப்பாவது;. ஆதலின் இனி அத்தன்மைத்தான மாலையையே நமக்குக் கொண்டுவருவாய், என்று அருளிச்செய்தனன். உடனே கண்விழித்த விஷ்ணுசித்தர் அம்மங்கையை மலர் மங்கையென்றே எண்ணி, அவள்திறத்து அளவற்ற அன்பு கொண்டு, அனைத்துலகத்துக்கும் அன்னையாய் அவற்றை ஆண்டு வருகிற இலக்குமியின்

அவதார விசேடமென்ற காரணத்தால், அவளுக்கு 'ஆண்டாள்' என்றும், மாதவனுக்குரிய மலர்மாலையைத் தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்புகொடுத்தது காரணமாகச் 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்றும் திருப்பெயரிட்டு அழைத்துவந்தார்.

அந்நாச்சியார் தனது பருவம் வளருந்தோறும் ஞானபக்திகளும் உடன் வளர்ந்துவரப்பெற்று, தனக்கு ஏற்ற காதலனாகக் கருதிய கடல்வண்ணன் விஷயமான வேட்கை விஞ்சியவளாகி, இனி அவனை ஒரு நொடிப்பொழுதும் கூடாதிருக்கப்பொறாமல், கண்ணனது பிரிவை ஆற்றாத ஆயர் மங்கைகள் போலத் தானும் நோன்புநோற்று உயிர் தரிப்பவளாய் அவ்வபிப்பிராயத்தைத் திருப்பாவை, நாச்சியார்திருமொழி என்ற திவ்வியப் பிரபந்தங்களின் மூலமாகப் பகவத்சந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து வாழ்ந்திருந்தாள். இப்படி இருக்கையில், இவளுக்கு விவாகத்துக்கு ஏற்றபருவம் வந்ததைக் கண்டு தந்தையார் இவருக்கு ஏற்ற கொழுநனைக் காணப்பெறாது கவலைப்பட்டு இவளையழைத்து நீ யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகின்றாய் என்று வினவ, ஆண்டாள் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில், வாழகில்லேன்" என்று சொல்ல, பட்டர்பிரான் பின்னை எங்ஙனம் நிகழ்வது என்று கேட்க, சூடிக்கொடுத்தாள் 'பெருமாளுக்கே உரியவளாக இருக்கின்றேன்' என்று கட்டுரைத்தாள்.

அதுகேட்டு விஷ்ணுசித்தர் நூற்றெட்டுத் திருப்பதிகளிலுள்ள எம்பெருமான்களுள் யார்க்கு வாழ்க்கைத்துணைவியாகத் துணிகின்றாய்? என்று விசாரித்தலும், கோதை அவ்வப் பெருமான்களுடைய வைபவத்தை விளங்க எடுத்துக்கூறியருளவேண்டும்' எனவேண்ட, வேயர்குலத்தலைவரும் அவ்வாறே எடுத்து அருளிச்செய்து வருகையில், ஆண்டாள் வடமதுரையில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானது வரலாற்றைக்கேட்ட அளவிலே மயிர்ச்சிலிர்ப்பும் திருவேங்கடமுடையானது வரன்முறையைச் செவியுற்றபொழுது முகமலர்ச்சியும், திருமாலிருஞ்சோலை மலையழகரது வடிவழகை அறிந்த மாத்திரத்தில் மன மகிழ்ச்சியும்பெற்று ஸ்ரீரங்கநாதனது மகிமை செவிப்பட்டவுடனே அளவற்ற ஆனந்தமடைந்து நிற்க, அப்பொழுது அந்தந்தத் திருப்பதி எம்பெருமான்கள் எல்லாரும் இவளது சுயம்வரத்தை உத்தேசித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளி இவளது ஞானக்கண்ணுக்கு விஷயமாக இவள் அவர்களுள் அரங்கநாதனிடத்தே மனத்தைச் செலுத்தி அவனுக்கே தன்னை மணமகளாக நிச்சயித்து அவ்வமலனையே சர்வகாலமும் சிந்தித்திருந்தாள்.

அதனையறிந்த ஆழ்வார் 'நம்பெருமான் இவளைக் கடிமணம் புரிதல் கைகூடுமோ' என்று சிந்தித்திருக்கையில், திருவரங்கச் செல்வன் இவருடைய கனவிலே எழுந்தருளி உமது திருமகளைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு வாரும். அவளை யாம் அங்கீகரிப்போம் என்று அருளிச்செய்ய, அதனால் விஷ்ணுசித்தர் வியாகுலம் நீங்கி மனமகிழ்ந்திருந்தனர். பின்பு திருவரங்கநாதன் ஸ்தானிகர் முதலிய கோயிற் பரிசனங்களுடைய கனவிலே தோன்றி 'நீங்கள் சகல மங்கள வாத்தியங்களோடும் சத்திர சாமராதிகளுடன் நமது நவரத்தினப் பலக்கையும் உடன்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று ஆண்டாளைப் பல்லக்கிலேற்றி அழைத்துவாருங்கள் என்று கட்டளையிட்டான். அவ்வாறே எல்லாப் பரிகரத்தாரும் சென்று பெரியாழ்வாரையடுத்து நம்பெருமானது அருளப்பாட்டை விண்ணப்பஞ்செய்ய, கர்ணாம்ருதமான அவ்வார்த்தையைச் செவியாரக் கேட்டு மகிழ்ந்து, கோதைதாதை, வடபெருங்கோயிலுடையானுடைய சந்நிதியிலே திருவரங்கநாதனது நியமனத்தை விண்ணப்பஞ்செய்து அனுமதி பெற்றுப் பிரயாணமாயினர். அச்செய்தியைக்கேள்வியுற்று ஸ்ரீவல்லபதேவன் அக்கல்யாண மகோத்சவத்தைத் கருதித் தன் ஏவலாளரைக் கொண்டு தண்ணீர் தெளித்தும் பூப்பந்தலிட்டும் தோரணங்கட்டியும் வாழை கமுகு நாட்டியும் நன்றாக அலங்கரிப்பித்துக் கஜதுரகாதி சதுரங்க பலத்துடனே ஆழ்வார் பக்கல் வந்து சேர்ந்தான். அப்பால் பட்டர்பிரான் ஆண்டாளை மணிச்சிவிகையில் எழுந்தருளப்பண்ணி மங்களவாத்திய கோஷத்துடனே 'ஆண்டாள் வந்தாள்! சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்! சுரும்பார் குழற்கோதை வந்தாள்! திருப்பாவை பாடிய செல்வி வந்தாள்! பட்டர்பிரான் புதல்வி வந்தாள்! ஆயர் குலவிளக்கு வந்தாள்! என்று பல சின்னங்கள்

பணிமாற, மெய்காப்பாளர் உடன் சூழ்ந்து நிற்க, தாமும் அரசனுமாக இருபுறத்தும் இடைவிடாதிருந்து அழைத்து வந்து திருவரங்கம் பெரிய கோயிலை அடைந்து பெரியபெருமாளுடைய முன்மண்டபத்திலே அப்பிராட்டியை நிறுத்திப் பெருமாளைச் சேவிக்கப் பண்ணுவிக்கையில், அத்திருமாலின் திவ்விய சௌந்தர்யம் இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல ஆண்டாளைக் கவரத் தொடங்கியதனால், சூடிக் கொடுத்த நாச்சியார் சிலம்பார்க்கச் சீரார்வளையொலிப்பக் கொடியேரிடையாடக் காதளவு மோடிக் கயல்போல் மிளிருங்கடைக்கண் பிறழ அன்னமென்னடை கொண்டு அருகிற்சென்று ஆனந்தக்கடலில் ஆழ்ந்துதிருவரங்கன் திருவடி வருடக் கருதி நாகபரியங்கத்தை மிதித்தேறி நம்பெருமாள் திருமேனியிலே ஐக்கியமாயினள்.

அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள், நற் பாமாலை; பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
'வேங்கடவற்கு என்னை விதி' என்ற இம்மாற்றம்
நாம் கடவா வண்ணமே நல்கு.

—உய்யக் கொண்டார்



வைரக்கீரிடத்துடன் திருப்பணிக் குழுத்தலைவர் திரு. பி. டி. ராஜன், நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தீனதயாளு, மற்றும் உறுப்பினர் ச. முத்துசாமி செட்டியார்.

திருவாய்மொழியும் திருமாலும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

ஆழ்வார்களுள் தலைசிறந்தவர், நம்மாழ்வார். வைணவப் பெருமக்கள் 'பிரபந்த ஜன கூடஸ்தர்' என, நம்மாழ்வாரைப் பெரிதும் போற்றிச் சிறப்பாகக் குறிப்பிடுவர். 'பிரபத்தி நெறியைப் பின்பற்றும் வைஷ்ணவப் பெருமக்கள் எல்லோருக்கும் தலைவர்' என்பது அதன் பொருள். இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியானது, எல்லா உறுதிப் பொருள்களையும் கொடுக்க வல்லது; எல்லோரையும் இன்பமுறச் செய்வது. அடியார்களுக்கு அமிழ்தமாய்த் திகழ்வது. தமிழ்வேதம் என்னும் பெருமை சான்றது. கடல்போன்று விரிந்து பரந்து, சிறந்த பொருள் நலங்களை உடையது.

திருவாய்மொழியானது, உயிர்க்கு உறுதி பயக்கும் உயரிய பொருள்களைத் தெளிவுற உணர்த்தும் நூல்களுள் முதன்மை வாய்ந்தது; இறைவனுடைய உயர்வற உயர்ந்த குணங்களை அனுபவித்ததால் உண்டான பெருமகிழ்ச்சியின் விளைவாக வெளியிடப்பெற்றது; இறைவனின் திருவருளால் விளைந்த பரஞானத்தின் பயனாகத் தோன்றியது; வேத விழுப்பொருள்களை விளக்கமுற அறிந்த சான்றோர் அனைவரும் ஏற்றுப் போற்றுவது; வேதப் பொருள்களையெல்லாம் இனிய தமிழினால் எளிதின் அருளிச் செய்வது; தெளியாத மறை நிலங்களை எல்லாம் தெளிய வைக்கும் சிறப்புடையது.

திருமாலும் திருவாய்மொழியும் :

திருவாய்மொழியின் சிறப்பைப் பெரியோர்கள் பலவகைகளில் விளக்குவர். திருமாலுக்கு உரிய இயல்புகள் எல்லாம், திருவாய்மொழிக்கும் உண்டு என்பது பெரியோர்களின் கோட்பாடு. இவ்வாற்றால் திருவாய்மொழிக்கும் திருமாலுக்கும் இடையே உள்ள சில ஒப்புமைகளை மட்டும் இங்குக் காண்போம்.

(1) திருமால் அஞ்ஞானத்தைப் போக்குதல், ஞானத்தை அளித்தல், பக்தியை விளைவித்தல் என்பன மூன்றையும் செய்வன். திருவாய்மொழியும் இம் மூன்றையும் செய்ய வல்லதாகும். "காரிமாறன் சடகோபன் ஒலி புகழ் ஆயிரத்துள் இப்பத்து உள்ளத்தை மாசறுக்குமே" என்பதனால் அஞ்ஞானத்தைப் போக்குதலும்; 'வண்சடகோபன் தெருள் கொள்ளச் சொன்ன ஓராயிரம்" என்பதனால் ஞானத்தை அளித்தலும்; "குருகூர்ச் சடகோபன் சொன்ன தூய ஆயிரத்துள் இப் பத்தால் பக்தர் ஆவர் துவள் இன்றியே" என்பதனால் பக்தி உணர்வை விளைத்தலும் குறிக்கப் பட்டிருத்தல் காணலாம்.

(2) திருமால் நம்மையெல்லாம் தனக்கே உரிய அடிமையாக ஏற்றுக்கொள்ளும் இயல்பினன் ஆவன் "வெறித்துளவ முடியானே வினையேனை உனக்கு அடிமை அறக் கொண்டாய்" என்னும் பாடலால் இவ்வுண்மை புலனாகும். திருவாய்மொழியும் நம்மை எம்பெருமானுக்கே முழுதும் அடிமையாக்கும் விழுப்பம் வாய்ந்தது. இதனைத் "தொண்டன் சடகோபன் தெரியச் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்தும் உரிய தொண்டர் ஆக்கும் உலகம் உண்டாற்கே" என்பதனுல் அறியலாம்.

(3) திருமால் பிறவியாகிய நோயைப் போக்கும் மருந்தாகத் திகழ்வன் என்பது யாவரும் அறிந்தது. திருவாய்மொழியும் உலகியல் துன்பம் அனைத்தையும் போக்கி நலம் விளைக்கும் உயர்வுடையது. "தண் குருகூர்ச்சடகோபன் மிடைந்த சொல் தொடை

ஆயிரத்துள் இப்பத்து, உடைந்து நோய்களை ஓடுவிக்குமே'' என்பது இவ்வுண்மையை உணர்த்தும்

(4) திருமால் நமக்குப் பரமபத மாகிய வைகுந்தத்தை அளிப்பவன். ''ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் நமக்கு'' என்பது பாசுரம். திருவாய்மொழியும் நமக்குப் பரமபத மாகிய வைகுந்தத்தை அளிக்க வல்லது. ''குருகூர்வண் சடகோபன் சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் வானின் மீதேற்றி அருள் செய்து'' என்பது ஆழ்வார் அருளிச் செயல்.

(5) திருமால் நம்மைத் தன் திருவடி களின் கீழ்ச் சேர்த்துப் பெருவாழ்வு தருவன். இதனைப் ''பெருந் துன்பம் பேரற நீக்கித் தன் தாளின் கீழ்ச்சேர்த்து அவன் செய்யும் சேமம்'' எனவரும் பாசுரம் விளக்கும். இவ்வாறே திருமாலின் திருவடிகளின்கீழ் நம்மைச் சேர்த்துவைத்து நமக்குத் திருவாய்மொழி பேரின்பப் பெருவாழ்வளிக்கும் என்பது, ''திருமாலால் அருளப்பட்ட சடகோபன் சொல் ஆயிரத்துள் இப்பத்தால் அருளி அடிக்கீழ் இருத்தும்'' எனவரும் பாசுரப் பகுதியால் உணரப்படும்.

(6) திருமால் தன்னைப் புகலடைந்தவர் களுக்குத் தன்னுடைய பேரின்ப அனுபவ நிலையை வழங்கி அருள்வன். ''தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக்கதிசெய்யும் தெளிவுற்ற கண்ணன்'' என்னும் பாசுரம் இதற்குச் சான்று பகரும். இம்முறையில், திருவாய்மொழியும் தன்னை ஓதித் தன்பால் ஈடுபடுபவர்க்குத் திருமாலின் திருவருள் அனுபவ இன்பத்தை நிறைய விளைவிக்கும். ''வண்குருகூர்ச் சடகோபன் இங்ஙனமே சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து எங்ஙனே சொலினும் இன்பம் பயக்குமே'' எனவரும் பாசுரம் இதனை இனிதுணர்த்தும்.

(7) திருமால் தன்னை அனுபவிக்கத் தலைப்பட்டவர்கள், ''ஊடுபுக்கு எனது ஆவியை உருக்கி உண்டுநின்ற நின்றன்னை'' என்கிறபடி நெக்குநெக்குநீராய் உருகச் செய்வான். திருவாய்மொழியும் தன்னை ஓதி உணரத்தலைப் பட்டவர்களை நீர்ப்பண்டமாக நெகிழ்ந்து கசிந்து உருகச் செய்யும். ''தென் குருகூர்ச் சடகோபன் சொல் ஆயிரத்துள் இவை ஒன்ப தோடு ஒன்றுக்கும் மூவுலகும் உருகுமே'' என்றும், ''தோற்றங்கள் ஆயிரத்துள் இவையும் ஒருபத்து வல்லார் ஊற்றின்கண் நுண்மணல் போல் உருகா நிற்பர் நீராயே'' எனவும் வரும் பாசுரங்களால் இவ்வுண்மை தெளியலாம்.

(8) திருமால் பத்துத் திருவவதாரங்கள் செய்தருளினன். அதுபோலத் திருவாய் மொழியும் பத்துப் பத்தாக அமைந்திருக் கின்றது. இதனை ஊன்றி உணர முற்பட்டால் திருமாலின் தசாவதாரங்களைப் போலவே, திருவாய் மொழியும் பத்து அவதாரங்கள் செய்ததுபோலும் என எண்ணத் தோன்று கின்றது.

(9) திருமால் நல்லவர்களைக் காக்கவும் அல்லவர்களைப் போக்கவும் திருவவதாரம் புரிந்தருள்கின்ருன். ''கொடியோர்த் தெறுத லாகிய துஷ்டநிக்கிரகமும், செவ்வியோர்க்கு அளித்தலாகிய சிஷ்ட பரிபாலனமும்'' திருமாலுக்கு இயல்பாக அமைந்த செயல் களாகும். திருவாய்மொழிக்கும் இவ் விரு செயல்கள் உண்டு. திருமாலின் அருள் நெறிக்கு மாறுபட்ட தீயவர்கள் அழியவும், திருமாலின் அருளுக்குரிய நல்லவர்களாகிய அடியார்கள் வாழவுமே திருவாய்மொழி தோன்றுவதாயிற்று. இவ்வாறு திருமாலுக்கும் திருவாய்மொழிக்கும் உள்ள இவ்வொப்புமை இயல்பினை,

நண்ணு அசுரர் நலிவெய்த
நல்ல அமரர் பொலிவெய்தப்
பண்ணார் பாடல் இன்கவிகள்
யானுய்த் தன்னைத் தான்பாடி

என நம்மாழ்வார் அருளிச் செய்திருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

(10) திருமால் உலகத்து உயிர்களைத் துன்புறாமற் காத்தற் பொருட்டே, 'பிறப்பில் பல்பிறவிப் பெருமான்' என்றபடி பல்வேறு திருவவதாரங்கள் செய்தருளினன். அவ்வாறே திருவாய் மொழியும் உலகமக்கள் பிறவித் துன்பம் நீங்கி உய்திபெறுதற் பொருட்டே திருவவதரிப்பதாயிற்று.

முடிவுரை :

இங்ஙனம் எண்ணியுணருந் தோறும் இறைவனோடு பல நுண்ணிய ஒப்புமைச் சிறப் பியல்புகளை உடையது திருவாய்மொழி. அதன் அருமை பெருமைகளை நாம் அனைவரும் நன் கினிது உணர்ந்து, அதனைப் பலகாலும் அன்புடன் ஓதி நலம் பெற முயலுவோமாக!

★

தேனூறு செஞ்சொல்

சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்

உயர்திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், தருமபுரம்

முன்னுரை :

தித்திக்கும் பொருள்களில் தேன் மிகச் சிறப்புடையது. தித்தித்தல் மட்டுமின்றி நோயை நீக்கி வலிமையைத் தருதல் தேனுக்கு உள்ள ஒரு தனிச்சிறப்பு. தித்திக்கும் பொருள்கள் பெரும்பாலும் பின்பு நோயைத் தருவனவாய் உள்ளன. தேன் அவ்வாறின்றி, அதற்கு மாறாக நோயைப் போக்குவதாய் உள்ளது. இதனால், இனிய பொருள்களைத் தேனோடு ஒப்பிட்டுக் கூறுதல் வழக்கமாக உள்ளது.

நூல்களில் மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவாசகத்தைப் பெரியோர்கள் 'தேன்' என்றே கூறிப் போற்றியுள்ளார்கள்.

> "தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
> அல்லலறுத் தானந்த மாக்கியதே-எல்லை
> மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
> திருவா சகம்என்னும் தேன்"

என்னும் தனிப்பாடலை யாவரும் அறிவர். 'நால்வர் நான்மணிமாலை' என்னும் நூலை அருளிச் செய்த சிவப்பிரகாச அடிகளும், திருவாசகத்தை, "ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்-மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேன்" என்றே கூறுகின்றார். திருவாசகத்தை இங்ஙனம் 'தேன்' என்று பலகாலும் சொல்லி வரும் பழக்கத்தால், அதனை அருளிச்செய்த ஆளுடைய அடிகளைச் சிறப்பித்து ஏத்தும் திருக்களிற்றுப்படிச் செய்யுள் ஒன்றில், "திருவாத வூராளும் தேன்" என மக்கள் ஓதுவாராயினர்.

> "பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
> தூயதிரு வாய்மலராற் சொற்செய்து-மாயக்
> கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
> திருவாத வூராளும் தேன்."
>
> (திருக்களிற்றுப்படியார்-73)

வாதவூரடிகள் அருளிச்செய்த திருவாசகம் அவர் பெற்ற பரமானந்தப் பயன் வடிவாகவே விளங்கி அதனை ஓதுமிடத்துச் சுவைகள் பல வற்றினும் மேற்பட்ட பத்திச் சுவையை மிகப் பயந்து, கருங்கல் மனமும் கரைந்துக, கண்கள் தொடுமணற்கேணியிற் சுரந்து நீர்பாய, மெய்ம் மயிர் பொடிப்பச் சித்தத்துள் தித்தித்து யாவரையும் அரனடிக்கு அன்பராகும் வண்ணம் செய்துவிடுதலால் அதனை, 'தேன்' என்றது மிகமிகப் பொருத்தமே. எனினும், அவர் அருளிச்செய்த திருக்கோவையார் என்னும் மற்றொரு பகுதி, வேறொரு தனிச் சிறப்புடையதாய் விளங்குகிறது. அஃதாவது, திருவாசகமும் விலை மதிப்பற்ற மணிவார்த்தைகளாலாய செந்தமிழ்ப் பாமாலையேயாயினும், அது சிவபெருமானுக்கு அடியவராயினார் ஓதி உணர்ந்து இன்புறுதற் குரிய தோத்திரமாவதன்றி ஏனையோர் பலரும் ஓதி இன்புறுதற்குரிய இலக்கியமன்று. திருக் கோவையார் அவ்வாறின்றி இலக்கியத்தை விரும்புவோர் ஓதி உணர்ந்து இன்புறுதற்குரிய ஓர் அரிய இலக்கியமாகும்.

தேனூறு செஞ்சொல் :

பழந்தமிழ் முறைப்படி கூறப்படும் 'அகப் பாட்டு புறப்பாட்டு' என்னும் இருவகைப் பாட்டுக்களில், அகப்பாட்டு, 'இலக்கியம்' எனச் சிறந்தெடுத்துக் கூறப்படுவது என்பது அனைவரும் அறிந்தது அம்முறையில் அமைந்த இலக்கியங்கள் தமிழ்மொழியில் பல உளவாயினும், அவையெல்லாம் இம்மை மறுமை இன்பங்களை மட்டுமே பயக்கும் அற இலக்கியங்களாம். ஆளுடைய அடிகள் அருளிச்செய்த திருக்கோவையார், இறைவன் அடிநிழல் இன்பத்தை அருளும் அருள் இலக்கியமாகும். அதனால், திருவாசகத்தை,

'தேன்' என்று கூறிய ஆன்ருேர், திருக்கோவை யாரை, தேன் சுரக்கும் ஊற்ருக அமைந்த செஞ்சொற்களையுடைய நூலாகக் குறித்தனர். அதனை,

எண்ணிறைந்து தில்லை
எழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளும்
கற்பகமே-நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொல்
திருக்கோவை என்கின்ற
நானூறும் என்மனத்தே நல்கு''

என்ற தனிப்பாடலால் அறிகின்ருேம். 'திருவாசகம் என்னும் தேன்' என்பதிலும், 'தேனூறு செஞ்சொல் திருக்கோவை'' என்பதிலும் 'தேன்' என்பது சிவபெருமானது திருவருட் சிறப்பேயாம். அது திருவாசகத்தில் வடித்தெடுத்து நிறைத்து வைக்கப்பட்டுள்ளது. திருக்கோவையாரில் செஞ்சொல் இலக்கியத்திடையே கசிந்து ஊறிப் பொசிகின்றது. நிறைத்து வைக்கப்பட்டுள்ள தேனை எடுத்துத் தெவிட்டாது, நிரம்பப் பருகும் ஆற்றலுடையோர் ஒரு சிலரே. ஆனல், கசிந்து ஊறும் தேனை யாவரும் தெவிட்டாது சுவைத்து இன்புறுதல் கூடும். அங்ஙனம் இன்புறுமாறு ஊறும் செஞ்சொற்களாகிய அம்மலர்கள் நானூற்றில் அத்தேன் எத்துணை அழகாகக் கசிந்து ஊறுகின்றது!

செஞ்சொற்ருெடர்கள் :

''அணியும் அமிழ்தும் என் ஆவியும், ஆயவன், தில்லைச்சிந்தாமணி, உணர்ந்தார்க்கு உணர்வரியோன், கூம்பலங் கைத்தலத்து அன்பர் என்பு ஊடுருகக் குனிக்கும் பாம்பலங் காரப்பரன், புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்பும் தன் பூங்கழலின் துணர்ப்போது எனக் கணியாக்கும் தொல்லோன், சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான், ஆலத்தினுல் அமிர்தாக்கிய கோன், முதுவானவர்தம் முடித்தொகைகள் கழியாக் கழல் தில்லைக்கூத்தன், தாழச்செய்தார் முடி தன் அடிக் கீழ்வைத்து அவரை விண்ணேர் சூழச்செய்தான், சூளாமணி உம்பர்க் காயவன், பொய்யுடையார்க்கு அரன்போல் அகலும் மெய்யுடையார்க்கு அவன் அம்பலம்போல மிக நணுகும், பிழை கொண்டு ஒருவிக் கெடாது அன்பு செய்யின் பிறவி என்னும் முழைகொண்டு



சென்னை திருமயிலை மாதவப்பெருமாள்கோயிலில், வசந்தகல்யாணமண்டபக் கால்கோள்விழா நிகழ்ந்தபொழுது, திரு. A.C. துளசிங்கம், M.C. அவர்கள் உரைநிகழ்த்துதல்.

ஒருவன் செல்லாமை நின்று அம்பலத்தாடும் மூன்னோன், மறந்தும் மற்றப் பொய் வானவரிற் புகாது தன் பொற்கழற்கே அடியேன் உய்வான் புக ஒளிர்தில்லை நின்றோன், யாவையுமாம் ஏகத்து ஒருவன், பொருளா எனைப் புகுந்து ஆண்டு புரந்தரன் மால் அயன்பால் இருளா யிருக்கும் ஒளி, என் பிறவி கெட்டு இன்று அழிகின்ற தாக்கிய அம்பலவன், அடிச்சந்தம் மால் கண்டிலாதன காட்டி வந்து ஆண்டு கொண்டு தன் முடிச்சந்த மாமலராக்கும் முன்னோன், என் தொல் பிறவி ஏழும் எழுதா வகை சிதைத்தோன், கள்ளப் படிறர்க்கு அருளா அரன், உருகுதலைச் சென்ற உள்ளத்தும் அம்பலத்தும் ஒளியே பெருகு தலைச் சென்று நின்றோன், பாசத்தளை அறுத்து ஆண்டு கொண்டோன், இப்பிறப்பில் அழுந்தா வகை எனை ஆண்டவன், என் சிரத்தில் உறு கால் பிறர்க்கு அரியோன், உள்ளலரைக் கீடம் செய்து என் பிறப்புக்கெடத் தில்லை நின்றோன், தன் சேவடிக்கே ஆய்தந்த அன்புதந்து ஆட் கொண்ட அம்பலவன், நினைவித்துத் தன்னை என் நெஞ்சத்திருந்து அம்பலத்து நின்று புனை வித்த ஈசன், பொதுவினில் தீர்த்து என்னை ஆண்டோன், ஆனந்தமாக் கடல், மலவன் குரம்பையைமாற்றி அம்மால் முதல்வான வர்க்கு அப்பால் செல அன்பர்க்கோக்கும் சிவன், முன்னும் ஒருவர் இரும்பொழில் மூன்றற்கும் : முற்றும் இற்றுல் பின்னும் ஒருவர், அழுந்தேன் நரகத்து யான் என்றிருப்ப வந்து ஆண்டுகொண்ட செழுந்தேன், சோத்து உன் அடியம் என்றுரைக் குழுமித் தொல்வானவர் சூழ்ந்து ஏத்தும்படி நிற்பவன், பற்றென்றிலார் பற்றும் தில்லைப்பரன், உள்ளம் உருகி உரோமம் சிலிர்ப்ப உடையவன் ஆட்கொள்ளும் அவரில் ஓர் கூட்டம் தந்தான், பற்றற்றவர்க்குப் புகலோன், புகுநர்க்குப் போக்கரியோன், எவரும் புகலத் தகவோன், என்னைத் தன் தொழும்பின் கழியா அருள்வைத்த சிற்றம் பலவன், இருவர் உயர்ந்தும் பணிந்தும் உணரான், என்னுடைய வாயும் மனமும் பிரியா இறை, மனக்களியாய் இன்று யான் மகிழ் தாங்கத் தன்வார்கழல்கள் எனக் களியா நிற்கும் அம்பலத்தோன், தெய்வம் பணிகழ லோன், ஆனந்த வெள்ளத்து அறைகழலோன், ஓரளவில்லா ஒருவன், மூப்பான் ; இளையவன் ; முன்னவன்; பின்னவன்; முப்புரங்கள் வீப்பான், மிக்க விருப்புறுவோரை விண்ணோரின் மிகுத்து நண்ணூர் அழியத் திருப்புறு சூலத்தினோன், நாய் வயினுள்ள குணமும் இல்லேனை நற்றொண்டு கொண்ட தீவயின் மேனியன், தேவாசுரர் இறைஞ்சும் கழலோன், அம்பலத்து அடியார் என்பிடை வந்து அமிழ்தூற நின்றுடி, சென்று அன்பர் சிந்தை கழுமிய கூத்தர்'' என்பவற்றைச் சிறந்தெடுத்துச் சுவைத்துப் பேரின்பம் எய்தலாம்.

பாவைப் பாட்டுள் நீராடும் மகளிர் கூற்றாக நீர் மடுவை, 'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடு' என்று பாடி மகிழ்ந்த அடிகள், கோவைப்பாட்டில் தலைவன் தலைவி முதலானோர் கூற்றாக எவ்வெப் பொருள் களை இறைவனோடு தொடர்புபடுத்தி இன்புறு கின்றார்.

இறையருட்டொடர்புகள் :

தலைவியது கண்ணழகைத் தலைவன் சிறப் பித்துக் கூறுமிடத்து அக்கண்ணின் அகற் சியையும், கருமையையும், வெண்மையையும், நீளத்தையும், ஒளியையும் தனித்தனியே புகழ்ந்து கூறும்முறை வியக்கத்தக்கது. தலை வியது கண்ணின் அகலம், தலைவன் சிவ பிரானிடத்துக் கொண்ட அன்பின் அகலம் போன்றதாம் ; கருமை அப்பெருமான் அவனிடத்தினின்றும் வாங்கிய அஞ்ஞானத்தின் கருமை போன்றதாம். வெண்மை, அப் பெருமானது திருமேனியில் பூசப்பட்டுள்ள திருநீற்றின் வெண்மையை ஒத்ததாம். நீளம், அடியார்கள் அப்பெருமானது புகழை எடுத் துரைக்கும் பேச்சின் நீளம் போன்றதாம். ஒளி அப்பெருமானது தில்லையின் ஒளி நிகர்த்ததாம். என்னே வியப்பு !

''ஈசற்கு யான்வைத்த அன்பின் அகன்று,
அவன் வாங்கியஎன்
பாசத்திற் காரென்று, அவன்தில்லையின்
ஒளிபோன்று, அவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத்து,
ஆங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங் கண்களே !''

இவ்வாறே, தலைவியது தனங்களின் பூரிப்பையும், இறுமாப்பையும் சிவபெருமான் தன் அடியார்கள் இன்பத்தால் எய்துகின்ற பூரிப்போடும், இறுமாப்போடும் உவமித்து

"புலியூர் அம்பலவர்க்கு உற்ற பத்தியர்போல் பணைத்து இறுமாந்த பயோதரத்தோர் பித்தி" எனச் செவிலி கூறியவாருக அருளுகின்ருர். இவ்வாறு திருக்கோவையாரின் தேனூறு செஞ்சொற் கிளவிகளின் வழி இலக்கிய இன்பத்துடன் இறையருள் இன்பத்தையும் ஒருங்கு நுகர்ந்தவர்க்குப் பிற இலக்கியங்களும் இலக்கியமாய்த் தோன்றுமோ? இறைவனுக்குங் கூடத் திருவாதவூரடிகளது திருக்கோவை யார் என்னும் இலக்கியத்தைப் போலப் பிற இலக்கியங்கள் இனியவாகுமோ: ஆகா என்பதனை நம்பியாண்டார் நம்பிகள் தமது கோயில் திருப்பண்ணியர் விருத்தத்துள்,

"வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவை கண்
டேயும், மற்றப் பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே"

என விளக்கியருள்கின்ருர். இத்தகைய தேனூறு செஞ்சொல் திருக்கோவையாரின் வழிச் சிவனருள் இன்பத்தில் திளைத்தல், செந்தமிழ் இன்பம் தெரிந்தார் அனைவரும் ஒரு தலையாகச் செயற்பாலதன்றே!

தஞ்சை மாவட்டம், இடும்பாவனம் திரு. சத்குணநாத சுவாமி கோயிலில், நாகை உதவியாணையர் அவர்கள் தலைமையிலும், அறங்காவலர் குழுத்தலைவர் திரு. ந. தருமலிங்கம் அவர்கள் முன்னிலையிலும், தஞ்சைத் துணையாணையர் அவர்கள், குடிநீர் மேல்நிலைத் தொட்டித் திறப்பு விழாச் செய்தார்கள், (29—10—72)

அறநிலையத் துறைச் சுற்றறிக்கைகள்

கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ்.,
ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

சென்னை—34
22—2—1972

ந. மு. க. எண். 41234/71/இ 5 நாள் 22—2—72

அன்புள்ள ஐயா,

பொருள், திருக்கோயில்—திங்கள் இதழ் அறங்காவலர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்தல்—சம்பந்தமாக.

தமது அறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்றுவரும் "திருக்கோயில்" இதழ்பற்றிக் கீழ்க்கண்டபடி அவசியம் செய்யவேண்டும்.

1. "தமிழகத்தில் அறநிலைத்துறையின் நிர்வாகத்தில் உள்ள எல்லாக் கோயில்களிலும் கட்டாயமாக இத்திங்கள் இதழை வாங்க ஏற்பாடு செய்யவேண்டும்".

2. "அறநிலையத்துறையின் சார்பில் உள்ள கோயில்களின் பொறுப்பேற்றுள்ள அறங்காவலர்கள் அனைவருமே இவ்விதழுக்குத் தமது சொந்தப் பணத்தில் சந்தா செலுத்தி இதன் உறுப்பினர்கள் ஆகி, இவ்விதழை வாங்குமாறு செய்தல் வேண்டும்".

3. "புதிய அறங்காவலர்கள் நியமன விண்ணப்பங்களில், அவர்கள் திருக்கோயில் இதழின் சந்தாதாரர்களாக உள்ளவரா? என்று வினவும் குறிப்பு சேர்க்கப்படவும், சந்தா செலுத்தி உறுப்பினரான பிறகே விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும்"

4. "திருக்கோயில்" இதழின் பழைய சந்தா நிலுவைகளை வசூல் செய்யத் துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும் தனிப்பட்ட அக்கரையும், ஆர்வமும் முயற்சியும், மேற்கொள்ளவேண்டும்.

5. "கோயில்களில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்கள், திருக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை, வேறு பிற பத்திரிகைகளிலும் வெளியீடுகளிலும் விளம்பரப்படுத்துகின்றனர். அவைகளைத் திருக்கோயில் இதழிலும் உரிய கட்டணங்கள் செலுத்தி விளம்பரப்படுத்தும்படி செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்."

6. "கோயில்களில் நடைபெறும் திருப்பணி வேலைகள், கலியாண மண்டபங்கள் ஆகியவற்றின் வேலைகள் முதலியவற்றிற்காக, கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் திருக்கோயில் இதழில் உரிய கட்டணம் செலுத்தி வெளியிடப்பெறுதல் வேண்டும்"

இவற்றின் மூலமாக, அறநிலைத்துறையின் பொதுவான வருவாயானது, கணிசமான அளவு மிகுதிப்படுவதற்கு நிரம்ப வாய்ப்புக்கள் உள்ளன. ஆதலின் இங்கு ஆராய்ந்து தெரிவித்துள்ள கருத்துகளின்படி, தக்க சிறந்த நடவடிக்கைகளை உடனடியாகவும் தீவிரமாகவும் எடுக்கவும், எடுத்த நடவடிக்கைகளுக்கான அறிக்கைகளை இவ்வலுவலகத்துக்கு உடனுக்குடன்

அனுப்பி வைக்கும்படியும், அறிவுறுத்திக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்த அறிக்கை கிடைத்த ஒரு மாதத்திற்குள் துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும் கீழ்க்கண்டபடி அறங்காவலர் களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தகவல் அனுப்பவேண்டும்.

உதவி ஆணையர்கள் (1)	ஆட்சியின் கீழ்உள்ள கோயில்கள் (ஆயிரம் ரூபாய் வருவாயுடையவை) (2)	மொத்தம் சேர்க்க வேண்டிய உறுப்பினர் களின் எண்ணிக்கை (3)
சென்னை	395×3	1185
கடலூர்	440×3	1320
சேலம்	200×3	600
நாகப்பட்டினம்	380×3	1140
இராமநாதபுரம்	167×3	501
கோயம்புத்தூர்	200×3	600
வேலூர்	188×3	564
சுசீந்திரம்	166×3	348
திருநெல்வேலி	171×3	513
திருச்சி	300×3	900
காஞ்சிபுரம்	283×3	849
மதுரை	253×3	759
கும்பகோணம்	215×3	645

துணை ஆணையர்கள்	பட்டியலிட்ட கோயில்கள்	சேர்க்கவேண்டிய சந்தாதாரர் எண்ணிக்கை
சென்னை	82×3	246
கோயம்புத்தூர்	68×3	204
மதுரை	86×3	258
தஞ்சாவூர்	135×3	405

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள

ஈசு 222
பெறுநர்:
எல்லா உதவி ஆணையர்களும்,
துணை ஆணையர்களும்.

(ஒப்பம்) கே. எஸ். நரசிம்மன்

ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 34.

சுற்றறிக்கை

ந. க. எண். 10824 / 72 / இ 5 நாள் 1—3—1972

பொருள் : திருக்கோயில் — திங்கள் இதழ் — விளம்பரங்கள் வெளியிடுதல் — சம்பந்தமாக.

நமது அறநிலைய ஆட்சித்துறையைச் சேர்ந்த கோயில்களிலெல்லாம்; பிரமோற்சவவிழா, கந்தர்சஷ்டிவிழா, பாவைவிழா, பங்குனியுத்தரவிழா முதலிய பலவகை விழாக்கள் நடைபெறுகின்றன. மற்றும் திருப்பணித் தொடக்க விழாக்கள், திருமணமண்டபக் கால்கோள் விழாக்கள், குடமுழுக்கு விழாக்கள் முதலியனவும், ஆங்காங்கே பரவலான வகையில், பெரும் பொருட் செலவில் நடைபெற்று வருகின்றன. இவைகளைக் குறித்துத் தினசரி இதழ்களில் கட்டணம் செலுத்திப் பலவகையான விளம்பரங்கள், நமது கோயில்களால் செய்யப்படுகின்றன. இத்தகைய விளம்பரங்கள் அறிக்கைகள் முதலியவற்றிற்காக எல்லாக் கோயில்களிலிருந்தும் கணிசமான தொகை அவ்வப்போது செலவழிக்கப்பட்டு வருகின்றது.

இனி; அத்தகைய பலவகை விழாக்களின் விளம்பரங்கள், அறிக்கைகள் கும்பாபிடேக நிகழ்ச்சிகள், திருப்பணி வேலை சம்பந்தமான ஒப்பந்தப் புள்ளிகள் முதலியவற்றை, நமது அறநிலையத் துறையின் சார்பில் நடைபெற்றுவரும் ''திருக்கோயில்'' இதழின் மூலம் விளம்பரங்கள் செய்து, பயன்படுத்திக்கொள்ளுமாறு, கோயில்களின் அறங்காவலர்களும் நிர்வாக அதிகாரிகளும் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதனால் கோயில்களுக்குத் தம்முடைய விழாக்களுக்குரிய விளம்பர வசதிகள் கிடைப்பதுடன் பொதுமக்களாகிய பக்தர்களுக்கும், கோயில் விழாக்கள் முதலியனபற்றிய சரியான தகவல்களை அறியும் பயன் கிடைக்கும்.

இத்திட்டத்தின்படி, பின்வருமாறு கட்டண விவரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டண விவரங்கள்

(1)	அட்டையின் மேல்பக்கம் முழு அளவு	ரூ.	250—00
(2)	அட்டையின் உட்பக்கம் முழு அளவு	ரூ.	200—00
(3)	அட்டையின் மேல்பக்கம் அரை அளவு	ரூ.	125—00
(4)	அட்டையின் உட்பக்கம் அரை அளவு	ரூ.	100—00
(5)	இதழுக்கு உள்ளே முழுப்பக்க அளவு	ரூ.	100 - 00
(6)	இதழுக்கு உள்ளே அரைக்கப்பக்க அளவு	ரூ.	50—00

எல்லாக் கோயில்களின் அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரிகளும், தத்தம் கோயில்களில் நடைபெறும் விழாக்களுக்கு, இவ்விளம்பரத்திட்ட வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு, கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எல்லா உதவி ஆணையர்களும், துணை ஆணையர்களும், இவ்விவரத்தினைத் தம் ஆளுகைக்குட்பட்ட எல்லா ஆலயங்களுக்கும் தெரிவிக்குமாறும், இத்திட்டம் வெற்றி பெறுவதற்கு ஏற்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வப்பகுதிக்குரிய துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும், தங்கள் ஆட்சியின் கீழுள்ள கோயில்களிலிருந்து மேற் குறிப்பிட்டுள்ளபடி உரிய கட்டணங்களைத் தங்கள் அலுவலகத்தில் முன் கூட்டியே வசூலித்துக்கொண்டு, அவ்வக் கோயில்கள் தாவிரும்பும் விளம்பரச் செய்திகளை, அவை எந்த மாத இதழில் வெளிவர வேண்டுமோ, அம்மாத இதழுக்குப் பல நாட்கள் முன்னதாகவே வாங்கி அனுப்பி உதவும்படி கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

இங்ஙனம் செய்வதனால், வெளியார்கள் பிறர் பெற்று வருகின்ற வருவாயில் கணிசமான பகுதி, நம்முடைய அறநிலையத்துறைக்குக் கிடைப்பதற்குப் பெரிதும் வாய்ப்பாக இருக்கும். ஆதலின் சம்பந்தப்பட்ட அனைவரும், இதில் மிக்க அக்கரையும் ஆர்வமும் எடுத்துக்கொண்டு செயலாற்றுமாறு, இதன்மூலம் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

(ஒப்பம்) கே. எஸ். நரசிம்மன்
ஆணையர்.

பெறுநர்;
எல்லா உதவி ஆணையர்களும்,
எல்லாத் துணை ஆணையர்களும்.

மதிப்புரைகள்

1. சுத்தசாதகம்: இந்நூல், தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் (திருமுதுகுன்றம்) குமாரதேவர் திருமடத்தின் நிறுவனராகிய அருட்டிரு குமாரதேவ சுவாமிகளால் இயற்றப் பெற்றது. இவர், கன்னட நாட்டில் ஓர் அரசராக விளங்கியிருந்து, துறவு நெறியை மேற் கொண்டு, வீரசைவச் சான்றோராகிய பேரூர் சாந்தலிங்க சுவாமிகள்பால் மாணவராகவும், திருப் போரூர் சிதம்பரசுவாமிகளின் ஞானாசிரியராகவும் திகழ்ந்தவர். வடலூர் இராமலிங்க அடிகள் இவர் இயற்றிய சின்மய தீபிகை, சுத்தசாதகம் என்னும் இரு நூல்களையும் பெரிதும் மதித்துப் போற்றிப் பதிப்பித்துள்ளார்.

இந்நூலின் மூலத்தையும் உரையையும் முன்னுரை – குறிப்புரை - விளக்கவுரை முதலிய வற்றுடன் இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்கள். குமாரதேவரின் தத்துவவிளக்கம், தத்துவமசி மகாவாக்கியப் பொருள் ஒப்புமை ஆய்வு, சைவசித்தாந்த விளக்கம், அண்மைக்கால மேலைநாட்டுக் கீழைநாட்டுப் பேரறிஞர்களின் கருத்துக்கள், முக்தியில் தேகத்தின் தெய்வீக நிலை, அருளாளர்களின் வாழ்க்கையின் சான்றுகள், சித்தர்களின் பாரம்பரியம், சதேக முக்திபற்றிய சர்ச்சைகள், பாம்பன் குமரகுருதாசர், இராமலிங்க அடிகளாரின் கருத்துக்கள், குமாரதேவரின் வாழ்க்கையும் வரலாறும் நூல்களும், சுத்தசாதக நூற் பாடல்களின் சுருக்கப் பொருள் விளக்கம், ஞானத்தின் மூவகை நிலைகள், சுத்த நிஷ்டை, அங்கலிங்கம் வீரசைவப் பிரமாண நூல்கள், ஷட்ஸ்தல சம்பந்தம், பஞ்சாக்கரம், தத்துவமசி சொரூபசமாதி முதலிய பற்பல பொருள்கள் இந்நூலின் கண் இனிது ஆராயப்பட்டுள்ளன. விரிவான ஆராய்ச்சி விளக்க நூல். சமய தத்துவ நூல் ஆராய்ச்சி அறிஞர்களுக்குப் பெரிதும் பயன்படும். சிறந்த நல்ல நூல். அண்மைக் காலத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள, தமிழகத்துச் சமய தத்துவ நூல்களுள் தலைசிறந்த ஒன்றாகப் போற்றுதற்குரியது. ஆசிரியரின் பேரறிவும் பேருழைப்பும் பெரிதும் போற்றிப் பாராட்டுதற் குரியன. நல்ல சிறந்த பதிப்பு 200 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 10/-. கிடைக்குமிடம்: குமாரதேவர் திருமடம், விருத்தாசலம், தென்னார்க்காடு மாவட்டம்.

2. வெள்ளிவிழா மலர்: அரியலூர் மணிவாசக மன்றம், காலஞ்சென்ற பொருஞ்சொல் விளக்கனார் சைவத்திரு. அ. மு. சரவண முதலியார் போன்ற பெருஞ்சான்றோர்களால், தோன்றி வளர்ந்து தொண்டாற்றி, அண்மையில் வெள்ளிவிழாக் கொண்டாடி மகிழ்ந்தது. அவ்விழாவின் சார்பில் இச்சிறப்பு மலர் வெளியிடப்பெற்றுள்ளது. விநாயகர் நடராசர் மாணிக்கவாசகர் தட்சிணாமூர்த்தி, நால்வர் திருவுருவப் படங்களும், தமிழகத்துச் சைவ ஆதீனத் தலைவர்கள் பலரின் திருவுருவப்படங்களும், இம்மலரைச் சிறப்புறுத்தி அணி செய்கின்றன. மன்றத்தைப் பேணிக்காத்த பெருமக்களாகிய பேரறிஞர்கள் ஐம்பதின்மர்க்கு மேற்பட்டவர் களின் திருவுருவப் படங்கள் இம்மலரின் சிறப்பைப் பெரிதும் மிகுதிப்படுத்துகின்றன. ஆசியுரைகள், பாராட்டு வாழ்த்துரைகள், அரிய இனிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், இம்மலரில் இனிது வெளியிடப்பெற்றிருக்கின்றன. இம்மலர் சைவமணம் கமழ்ந்து செந்தமிழ்த் தேன் பிலிற்றி, கண்ணிற்கும் கருத்திற்கும் விருந்தாக விளங்குகின்றது. 300 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 6.50/-. கிடைக்குமிடம்: மணிவாசக மன்றம், அரியலூர், திருச்சி மாவட்டம்.

3. தாமோதரம்: யாழ்ப்பாணம் இராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை, பி.ஏ., பி.எல், அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும். அவர்கள் நீதி நெறி விளக்கவுரை, தொல்காப்பியச்சேனாவரையம், தணிகைப்புராணம், இறையனார் அகப்பொருள், தொல்காப்பியப் பொருளதிகாரம், இலக்கண விளக்கம் சூளாமணி, தொல்காப்பியம் எழுத்ததிகாரம், தொல் காப்பியச் சொல்லதிகாரம் (நச்சினார்க்கினியம்), முதலிய பல தமிழ் நூல்களைச் செவ்விதின் ஆராய்ந்து திருத்தமாக வெளியிட்டவர்கள். யாழ்ப்பாணம் திருவருள் திரு. ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களைப் போன்ற சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியவர்கள். அவர்கள் தமது

நூல் வெளியீடுகளில் எழுதிய பதிப்புரைகள் பலவற்றைத் தொகுத்து இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது. தாமோதரம் பிள்ளை அவர்களின் மதிப்புரைகளின் தொகுப்பாக வரும் இந் நூலுக்குத் தாமோதரம் என்றே பெயர் சூட்டப் பெற்றமை, பெரிதும் பொருத்தமும் சிறப்பும் மிக்க தாகும். திரு. பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாறும், அவர்களைப் பற்றிய பாராட்டுரைகள் முதலியனவும் சேர்க்கப்பெற்றுள்ளன. பயன்மிக்க நல்ல ஆராய்ச்சி நூல். திருத்தமான சிறந்த அழகிய பதிப்பு. 150 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 4/- கிடைக்குமிடம்: திரு. சி. சிவகுரு நாதன், M. A., தலைவர், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், 411/1 கே. கே. எஸ். ரோடு, யாழ்ப்பாணம், இலங்கை.

4. திருமுருகாற்றுப்படை: முருகன் அடியார்கள் நாடோறும் பாராயணம் செய்தற் குரியதும், சங்ககாலப் பெரும்புலவராகிய ஆசிரியர் நக்கீரர் அருளிச் செய்ததும் ஆகிய இந் நூலுக்கு வித்துவான், ச. ரா. கச்சபேசுவரன், எம்.ஏ., அவர்கள் எளிய இனிய தெளிவுரையும் விளக்க உரையும் எழுதியிருக்கின்றார்கள். ஆற்றுப் படையின் இலக்கணம், நூலின் வரலாறு, நூல்கூறும் பொருள், நூற்சிறப்பு, ஆறுபடைவீட்டுத் தலக்குறிப்புகள் முதலியனவும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. திருத்தணிகை, திருச்செந்தில் முருகனின் அழகிய திருவுருவப் படங்களும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. காஞ்சிகாமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்களின் அருளாசி பெற்றது. தமிழ்ப் பேராசிரியர்கள் மூவர் அணிந்துரை வழங்கியுள்ளனர். பக்தர் களுக்குப் பெரிதும் பயன்படும் நல்ல இனிய நூல். திருத்தமான அழகிய சிறந்த பதிப்பு. 80 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1/-. கிடைக்குமிடம்: திரு. ச. ரா. கச்சபேசுவரன், 9 ஸ்ரீனிவாச ராகவன் சாலை, சென்னை-63.

148705
JL
O2 m24,N5
N73.15



தஞ்சை மாவட்டம், இடும்பாவனம் திரு. சத்குணநாதசுவாமி கோயிலில், நாகை உதவியாணையர் அவர்கள் தலைமையிலும், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. ந. தருமலிங்கம் அவர்கள் முன்னிலையிலும், தஞ்சைத் துணை ஆணையர் அவர்கள், குடிநீர் மேல்நிலைத் தொட்டித் திறப்பு விழாச் செய்தார்கள். (29-10-72).

பெரியபுராண நுணுக்கங்கள்

மறைத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்,

(சிவராசயோகமடம், பூம்புகார், மேலையூர்.)

சுந்தரர் பெருமை :

பரவையார் சங்கிலியார் என்ற மாதரசிகளை விரும்பினர் என்ற வரலாறு சுந்தரரைப் பற்றிய உண்மையை மறைக்கின்றது. பெண்ணாசையில் அழுந்தியவர் சுந்தரர் என்று கருத இடந் தருவதால், தீய ஒழுக்கத்தினர் எல்லாம் தங்களைப் போலத்தான் சுந்தரரும் இருந்திருப்பார் என்று நினைக்கிறார்கள். இஃது உண்மைக்குப் புறம்பானது. முனிவர்களும் யோகியரும் பல்லாயிரவர் சூழ இருந்த உபமந்நியு முனிவர் 'நம்பியாரூரன் நாம்தொழும் தன்மையான்'' என்று சொல்லி எழுந்துநின்று சுந்தரரைக் கை கூப்பி வணங்கினர். இதனை உட்கொண்டுதான் போலும் சிவப்பிரகாச சுவாமிகள் ''துறந்த முனிவர் தொழும் பரவை கணவா'' எனச் சுந்தரமூர்த்திசுவாமிகளை விளிக்கின்றார்.

இனிச் சேக்கிழார் வழியே சென்று சுந்தரர் வரலாற்று நுணுக்கங்களை ஆராய்வோமாக. திருமுனைப்பாடி நாடு சுந்தரரைத் தோற்றுவித்த பெருமை சான்றது. ''மங்கையர் வதனசீத மதியிருமருங்கும் ஓடிச் செங்கயல்குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு'' என்பது சேக்கிழார் திருவாக்கு. சுந்தரர் வாழ்க்கையின் மேற்புறம் பெண்கள் இருவரை விரும்பி வருந்தியதாகக் காணப்படுவதால், திருமுனைப்பாடி நாட்டை மங்கையர்கள் சிறந்தநாடு எனப் பொதுவகையாகச் சேக்கிழார்பெருமான் குறிப்பிடலாயினர். ஆதிசைவ மரபில் தோன்றிய நம்பியாரூரர் குறுநில மன்னனால் செல்வப் புதல்வராக வளர்க்கப்பெற்றுத் திருமணப் பருவம் சேர்ந்தார். ஆதிசைவ மரபிலேயே பெண் பார்த்து நாளோலை அனுப்பித் திருமணச் சடங்குகளெல்லாம் முறையாக நடந்துவந்தன. திருமணத்திற்கு முதல் நாளிரவு குதிரைமீது இவர்ந்து நம்பியாரூரர் வீதியுலா வருகிறார். வீதியிலுள்ள பெண்களெல்லாம் அக்காட்சியைக் காணுகின்றனர். கண்ட பெண்கள் ''ஆண்டகை அருளின் நோக்கின் வெள்ளத்துள் அலைந்தோம்'' என்று சொன்னார்கள். கட்டழகுடைய காளைப் பருவத்தினர் அருள் நோக்குடையராயிருந்தார் என்பதால் சுந்தரர் மனோநிலையை ஒருவாறு நாம் தெரிந்து கொள்ளலாம்.

இனி கோட்புலியார் என்பவர் தாம்பெற்ற பெண்கள் இருவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது அம்மகளிரைத் தனக்கு மகளாக ஏற்றுக் கொண்ட செயலாலும் சுந்தரர் மனோநிலை தெளிவாகப் புலனாகின்றது. மற்றும் பசி தாகம் இவற்றைக்கூடப் பொருட்படுத்தாமல் தலங்கள் தோறும் பதிகம் பாடிப் பரமனை வழிபடும் கடமையை மேற்கொண்டு அலைந்தார் என்பதையும் சிந்தித்து உணரவேண்டும். சங்கிலியாரைப் பிரிந்ததால் கண்ணிரண்டும் மறைந்தது. மீண்டும் சங்கிலியாரைச் சென்று சேர்ந்திருந்தால் கண்ணும் தெரிந்திருக்கும் சங்கிலியாரையும் அனுபவிக்கலாமே. அவ்வாறின்றி மறைந்த கண்களோடு தலவழிபாட்டையும் விடாமல், அவர்பட்ட அவதிக்கு ஓர் எல்லையும் உண்டா ?

''கழித்தலைப் பட்ட நாயதுபோல
ஒருவன்பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்துநீ யருளாயின செய்யாய்
ஒற்றியூ ரெனும் ஊருறைவானே''

எனவும், ''மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்'' எனவும், ''உயிரொடும் நரகத்தழுந்தாமை'' எனவும் மனம் வெதும்பிக் கூறும் பாடல்களே அவர்பட்ட வேதனையைக் காட்டுகின்றன. இறைவனைக் குற்றம் சாட்டவும்

முடியாமல் இறைவனை விட்டுநீங்கவும் முடியாமல் சுந்தரருக்கென்றே அமைந்த தனி அனுபவமாக அவர் பாடல்கள் அமைந்திருக்கின்றன. என்னவெல்லாமோ சொல்லிச் சொல்லிக் கதறிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறுதியாகத் திருவாரூரில், ''வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே'' என முடித்துக் காட்டி விட்டார்.

சைன சமயத்தில் சார்ந்திருந்தது ஒரு தாழ்வுணர்ச்சியாக அப்பர்சுவாமிகள் பெரிதும் வேதனைப்பட்டிருக்கிறார்கள். அடியார் திருக்கூட்டத்தையும் ஆசானையும் விட்டுப் பிரிந்தது மாணிக்கவாசகப்பெருமானைப் பெரிதும் வருத்தியிருக்கிறது. அதுபோலவே பரவையார் சங்கிலியார் தொடர்பு சுந்தரமூர்த்திசுவாமிகளைப் பெரிதும் சோதனைக்குள்ளாக்கி இருக்கிறது.

இனி வரலாற்றைக் காண்போம். திருமண மேடையில் திருமண நேரத்தில் முதியவேதியர் ஒருவர் வந்து வல்வழக்குத் தொடுக்கிறார். அப்போது மணமகனாக இருக்கும் நம்பியாரூரர் பொறுமையுடையவராக ஓர் எல்லைவரையில் நடந்து கொள்கிறார். வந்த முதியவர் செயல் மணமகனைப் பொறுமையிழக்கும்படி செய்து விடுகிறது. ''அடிமை ஓலையைக் காட்டு'' என்று மணமகன் கேட்டார். வேதியர், உனக்கு அந்த யோக்கியதை இல்லை, வேண்டுமானால் இந்த அவையோரிடம் காண்பிக்கிறேன். நீ வேலைக்குத்தான் வரவேண்டும்'' என்று சொல்லிய போது நம்பியாரூரர் சீற்றம் கொள்ளாமல் இருக்கமுடியவில்லை. நியாயமான எல்லைவரையில் பொறுமையாயிருப்பதும் எல்லைகடந்த தவறுகளை எதிர்ப்படும்போது சினம் கொள்வதும் அறிவுடையார் செயல் என்பதை நம்பியாரூரர் நிரூபித்துக் காட்டினார். இனி வழக்கு முடிந்தது. நம்பியாரூரர் தோற்றார். வென்ற வேதியரைப் பார்த்து உமது மனையகம் எங்கே என்றுகேட்டார். என்பின்னேவா காட்டுகிறேன் என்று சென்றவர் கோயிலுக்குள்ளே சென்று மறைகின்றார். அப்போது நம்பியாரூரர், முதிய வேதியர் ''எங்கள் நம்பர்தம் கோயில்புக்கதென்கொலோ'' என்று வினவுகின்றார். எங்கள் நம்பர் என்று சிவபெருமானை எவ்வளவு உரிமையோடு சொல்கிறார் பாருங்கள். பின்னர் இறைவன் உண்மையை உணர்த்த நம்பியாரூரர் ''**பித்தா பிறைசூடி**'' என்று பாடுகிறார். மேலும் சிவபெருமான் ஆதிசைவ மரபில் வந்தவரான நம்பியாரூரர் அருச்சனை செய்து வழிபட்ட பழக்கம் உடையவராதலால் அவரை நோக்கி, ''இனி அருச்சனை செய்தல் வேண்டாம், அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் சொல் தமிழால் நம்மைப் பாடுக அதுவே போதும்'' என ஒரு புதியதிருப்பம் உண்டுபண்ணுகிறார். சரியை நெறியிலோ கிரியை நெறியிலோ இறைவனை வழிபட விரும்புகின்றவர்கள் தேவார திருவாசகப் பாடல்களைப்பாடிக் கொண்டே வழிபாடு செய்யலாம். அவ்வாறு பாடல்கள் முன்னரே தொகுக்கப்பெற்றும் அச்சாகி இருக்கின்றன.

தவநெறி :

தடுத்தாட்கொள்ளப் பெற்ற பின்னர் நம்பியாரூரர் திருத்துறையூர் என்னும் தலத்தில் ''தலைவா நின்னை வேண்டிக் கொள்வேன் தவநெறியே'' எனப் பதிகம் பாடினார். இறைவனே வந்து தடுத்தாட்கொண்ட பின்னர்த் தவநெறி வேண்டினார் வன்றொண்டர் என்பது சிந்தனைக்குரியது. கனவிலோ நனவிலோ இறைவனைக் கண்ட மாத்திரத்தில் அவன் உய்ந்து விடுவதில்லை, கணப்போதும் இறைவனை விட்டு நீங்காத நிலையில் கலந்து வாழும் வாழ்க்கை வந்தால்தான் அவன் வாழ முடியும். ஆதலால் இங்கே வன்றொண்டப் பெருமானும் தவநெறி வேண்டினார். இங்கே தவநெறி என்பது யோகநெறி என்பது சான்றோர் கருத்து. சித்தவடமடத்தில் இறைவன் திருவடி தீக்கைசெய்து வன்றொண்டப் பெருமானை யோக நெறிக்கு ஆளாகினான். பன்னிரண்டு வயதுக்கு முன்பு திருமணம் நிச்சயம் ஆகியிருக்க முடியாது. அதன்பிறகு தடுத்தாட்கொள்ளப் பெற்றார், பதினெட்டாவது ஆண்டில் தெய்வீகம் என்று கூறப்படுகிறது. ஆறு ஆண்டுகளில் சீபருப்பதம் மலைவரையில் இருமுறை நடந்து யாத்திரை செய்து நிறைவேறுமாறு என்பது அறிஞர்கள் மனத்தில் எழும் வினாவாகும். இக்கருத்தை முதன்முதலில் வெளியிட்டவர் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்களாகும். யோகசாதனத்தால் சூக்கும உடலோடு சென்று சிவதலங்களை வழிபட்டிருக்கலாம் என்பதும் சிலர் கருத்து. இக்கருத்தை ஆராயும் தகுதி என்போன்றார்க்கு இல்லை.

பரவையார் திருமணம் :

திருவாரூரில் தங்கிய நம்பியாரூரர் பரவையாரைக் காண்கின்றார். மனம் சலிக் கின்றது. உம்பர்நாயகர் தங்கழல் அல்லது நம்புமாறு அறியாத என் மனத்தை மெலிவிக் கும் இச்செயல், திருவருட் செயலே எனத் துணிகின்றார். நாயன்மார்கள் அனைவருமே அருள் வழிப்பட்ட உணர்வும் வினை வழிப்பட்ட செயலும் உடையவர்களாக இருந்தனர். ஆதலால் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இறை வனையே வேண்டிப் பரவையாரை மணத்தால் பெறுகின்றார். பின்னர் தேவாசிரிய மண்டபத் தில் திருத் தொண்டர்களைக் கண்டு திருத் தொண்டத் தொகை பாடுகின்றார். அதுதான் பெரியபுராணத்திற்கு மூல முதல் நூலாகின்றது.

சங்கிலியார் :

சங்கிலியாரைத் திருவொற்றியூர்ச் சிவாலயத்தில் சந்திக்கிறார். மனம் சலித்து விட்டது. ஆனால் சங்கிலியார் மனமாற்றம் இன்றியே கோயிலுக்கு வந்து சென்றுவிட்டார். இங்கே சுந்தரர் விருப்பத்திற்காகவும் இறை வன் கருத்திற்கிசையவும் சங்கிலியார் மணந்து கொள்ளவும் மதிக்கிறார். இருந்தாலும் சுந்தரருடைய பழைய வரலாறு தெரிந் திருந்த சங்கிலியார் அதனைச் சிவ பெருமானிடம், ''மன்னும் திருவாரூரின்கண் அவர்தாம் மிகவும் மகிழ்ந்துறைவ தென்னும் வார்த்தை அறிந்தருளும்'' என மிகவும் நாகரிக மாக அச்சமின்றி எடுத்துக் கூறினார். இதன் விளைவாகச் சுந்தரர் சபதம் செய்ய வேண்டிய தாயிற்று. சபதம் பொய்யாகிவிட வேண்டும் என்று, சபதம் செய்யும் முன்னரே சுந்தரர் தீர்மானிக்கிறார். இங்கேதான் சுந்தரரை அருளாளராக நாம் காண்கின்றோம். ''நம்பரிவர் பிறபதியும் நயந்தகோலம் சென்று கும்பிடவே கடவேனாகிய யான்'' சங்கிலியைப் பிரியேன் எனச் சபதம் செய்து சங்கிலியைப் பிரியாது வாழ்தல் குறிக்கோளுக்கு விரோதம் எனச் சிந்தித்துணர்கிறார் சுந்தரர். ★



சென்னை அருணாசலேசுவரர் வரதராசப் பெருமாள் கோயிலில் நவக்கிரக தோத்திரக் கல்வெட்டுத் திறப்பு விழா நிகழ்ச்சியிற் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமக்கள்.

"அறத்திறன் அழியச் செய்யான்"

பேராசிரியர் திரு. சி. ஜெகந்நாதாசாரியார், M.A., L.T.

திருவல்லிக்கேணி, சென்னை - 5

இராம சரிதையிலே வாலியை மறைந்தெய்திய தகுதியை ஆய்வதன் மூலம் எழுந்த பழிப்புரைகளும் பழிச்சுரைகளும் பல திறத்தன. எனினும், கவிச்சக்கரவர்த்தி கம்பன் வாலி வதைப்படலத்திற் கூறும் பாடல்கள் கற்போருள்ளத்தைச் சிந்திக்க வைத்து, ஊன்றிக் கவனிக்கும் தரத்தனவாயமைந்துள்ளனவாதலின், அவைகளின் ஆழ்பொருளினை அநுபவித்துக்கொண்டு போமித்தனை யொழிய, போக்கிச் சொல்லப் போகாதெனினும், முத்துக் குளிப்பார்போல ஒருவாறு ஆழ்ந்து கண்டால் உண்மை தெற்றென விளங்கா நிற்குமென்பது அடியனேன் கருத்து.

இராம சரத்தால் அடியுண்டு கோபவசனாகி நல்லறிவிழந்து இராமனை ஏசலுறுகின்றான் வாலி: 'இல்லறம் துறந்த தம்பி எம்மனோர்க்காகத் தங்கள் வில்லறம் துறந்த வீரன்' எனப் பழித்தவன், 'வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளலாகிய தசரதனுக்கு மதலையாய்த் தோன்றினையே! அது கிடப்ப, செம்மையின் ஆணியாம் பரதனுக்குமுன் அண்ணனெனப் பிறந்தாயே!' என்று இழிக்கின்றான். அவ்வளவோடு அமையாது, சூரிய குலத்தவர்க்குப் பரம்பரைச் சொத்தாகிய இராச தருமத்தையும் நீ மறக்கும்படி செய்தது புருஷகாரபூதையான பிராட்டியைப் பிரிந்ததனாலன்றோ!, என்கின்றான். மற்றும், 'வீரமன்று, விதியன்று' முதலாகத் தொடங்கிப் பலபடப் பழிக்கின்றனன். இங்ஙனம் பலபடி ஏசிய வாலிக்குப் பலவகைப் பிரதியுத்தரங்களைத் திறம்படச் சொல்லி, இறுதியாக இராமபிரான், 'எக்குலத்துயாவர்க்கும் வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்; அனைய தன்மையறிந்தும் அழித்தனை மனையின் மாட்சியாதலின் ஆவி போக்கினேன்' எனக் கூறிய போது, வாலி அவனை நோக்கி, 'சொல்லியோய் அனைய தானால் செருக்களத் துருத்தெய்யாதே மறைந்து வில்லால் எவ்வியது என்னை?' என வினவினான். அதற்கு விடை இலக்குமணன் கூறியதாகக் கம்பர் அமைத்த திறம் மிகவும் பாராட்டற்பாலது. இலக்குமணனே ஆதிசேடனின் அமிசமானவனென்பது தேற்றம். கம்பரும் இதனை, 'உலகெலாம் நிறுத்தி நின்றான்' என்று இலக்குமணனைக் குறித்ததன் மூலம் காட்டுகின்றார். (இந்திரசித்து வதைப் படலம் 51.) அறிவிற் சிறந்தவன் ஆதிசேடன்; சொல்லுதலில் வல்லவனும் ஆயிரம் நாப் படைத்தவனும் அவனே; ஆதலின் அவன் விடையிறுத்தானாயின், அதற்கு யாதொரு பிரதியுத்தரமும் கூறமுடியாதென்பது கம்பர் கருத்து. இதனைக் கீழ் விளக்குவாம். இலக்குமணன் கூறிய பிரதியுத்தரம் பின்வருமாறு:

> ''முன்புநின் தம்பி வந்து சரண்புக
>   முறையி லோயைத்
> தென்புலத் துய்ப்பனென்று செப்பினன்;
>   செருவில் நீயும்
> அன்பினை யுயிருக் காகி யடைக்கல
>   மியானும் என்றி
> என்பது கருதி அண்ணல் மறைந்துநின்
>   றெய்த தென்றான்''
>
> —வாலி வதைப்படலம் 117

இதனாற் பெறப்படுவன என்னையெனில்:

(1) முறையிலோனாகிய வாலி, தொன்மையின் நன்னூற்கெல்லாம் இறைவனாகிய இராமனை முறைபல செய்தானென்று எண்ணுதல் முறையன்று என்பது. (2) முதன்முதற் சரணம் புக்க சரணாகதியினை ரட்சித்து, அதனால் சரணாகத ரட்சகத்வத்தையும், மித்திரனுக்கீந்த வாக்கிய பரிபாலனத்தையும் பிழையுறாது செய்தான் இராகவன் என்பது. (3) மற்றும்,

பின்னர் ஒருகால் பொருசமரிலாற்ருதுடைந்து அஞ்சி வாலி சரண் புகுவானுகில், அவனைக் கோறல் கூடாதாகலின், அஞ்ஞான்று முன் அன்பனுக்களித்த வாக்குத் தவறுதலோடு சரணுகதி ரட்சகத்துவத்துக்கும் இழுக்கு ஏற்படுகின்றது என்பது. இந்நிலையில் எவ்வகை உபாயம் மேற்கொள்ளல் நல்லது? எப்படியாயினும், சரணுகதி தர்மம், பிரதிக்ஞை தவருமை என்ற இரண்டனுக்கும் பங்கம் ஏற்படாதவாறு ஒழுகுவதே தக்கதன்ருே! அதற்கேற்பமறைந்து நின்ருெழுகினுன் என்பது தான் இலக்குமணனுடைய கருத்தாகும். இதுவே கம்பர் பெருமானது கருத்துமாமென்பது பின்வரும் செய்யுளால் விளங்கக் காணலாம். இராவணன் மந்திரப் படலத்தில் விபீடணனை நோக்கிக் கூறுவதாக

"நீல கண்டனும் நேமியும்
நேர்நின்று பொரினும்
ஏலும் அன்னவ ருடைவலி
யவன்வயின் எய்தும்
சால வன்னது நினைந்தவ
னெதிர்செலல் தவிர்ந்து
வாலி தன்னையம் மனிதனும்
மறைந்துநின் றெய்தான்"

என்ருெரு பாடல் கம்பர் அமைத்துள்ளார். இதனுல், உய்த்துணரவைப்பது என்னெனில், இராமனது பாதி பலம் வாலிக்குச் சென்றுவிடுமென்ற கருத்தால் மறைந்து நின்று எய்தானென்பது. கவிச்சக்கரவர்த்தி கம்பர்க்கு அது உடன்பாடன்று. ஏனெனில் அங்ஙன் கொள்ளின், இராமனது வரம்பிலாற்றலுடைமை மாசுணும் என்பது அவர் கருத்து. அதனுலன்ருே, தோற்ற இராவணன், தான் வாலிபால் தோற்றதற்கும் மானுடன் ஜெயித்ததற்கும் ஏதோ சமாதானம் கூறுமுகத்தான் இங்ஙனம் பாடலமைத்தார். அங்ஙனன்றி, அடிபட்ட வாலி வினவ அதற்கு விடையிறுப்பது போல் (வினுவும் விடையுமாக) — இலக்குமணன் வாயிலாக அமைத்த பாடலே கவியினுள்ளத்திற்கும் உடன்பாடாகும் என்பது தேற்றம். இனி இலக்குமணன் கூறிய பதிலை வாலி கேட்டான் என்றவிடத்துக் கம்பர்,

"கவிகுலத் தரசு மன்னன்
கட்டுரை மனத்திற் கொண்டான்
அவியுறு மனத்த னுகி
அறத்திறன் அழியச் செய்யான்
புவியிடை யண்ணல் என்பது
எண்ணினன்"

என்ருர். ஈண்டு, 'மன்னன்' 'கட்டுரை' என்ற சொற்களும், 'அறத்திறன் அழியச் செய்யான்' என்ற சொற்ருெடரும் குறிக்கொண்டு நோக்கலாகும். 'மன்னன்' என்ற சொல் இராமனையே குறிக்கத் தகுதி வாய்ந்திருப்பினும் ('வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வன் என்ருன்' என்ற பரதன் வார்த்தையாலுமுணர்க) ஈண்டு இளைய பெருமாளைக் குறிக்க வந்துள்ளது. இலக்குமணன் கூறிய விடை இராமனுக்கும் உடன்பாடே என்பதைக் குறிப்பிற் காட்டா நிற்கும். 'கட்டுரை' என்பதற்குப் 'பொருள் பொதிந்த சொல்' என உரை கண்டனர் அடியார்க்கு நல்லார். அக்கருத்துப்பற்றியே கம்பரும், இலக்குமணன் கூறியவை அனைத்தும் மேலோட்டமாகச் சிந்திக்கப்படா. அவை பொருள் செறிந்தனவென்பதை வற்புறுத்துவதற்காகக் 'கட்டுரை' எனச் சொற்பிரயோகஞ் செய்தார். மேலும், 'அறத்திறன் அழியச் செய்யான்' என்கிருர். இது ஒரு கம்ப சூத்திரம். இங்குத்தான் கவிச்சக்கரவர்த்தி தம்முள்ளத்தைச் செவ்வனே யுணருமாறு குறிப்பிற் காட்டுகிருர். ஒரு கவி பலவிடங்களில் பலவிதமாகப் பேசிச் செல்வானுயினும், ஒரேவிடத்துத்தான் தன் உண்மையுள்ளத்தை வெளிக்காட்டுவன். அறிஞர் அவ்விடத்தைக் கூர்ந்தறிதல் வேண்டும். அத்தகைய இடங்களில் இஃதொன்று. இக் கம்ப சூத்திரத்தின் ஆழ் பொருளைச் சற்று விளக்குவாம்.

'அறத்திறன் அழியச் செய்யான்' என்பது தொடர். அறத்தின் திறனுவது என்னை? அதற்கு விடை வள்ளுவப் பயனிற் காணலாம்:

"என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்"

அஃதாவது, என்பில்லாத உடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும் அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் என்பது. எலும்பில்லாத புழுவுடம்பு வெயிலின் முன் தன்

இயல்பால் சென்று அழிகிறது; அது அழிந்ததற்குக் காரணம் அதன் உடலினியல்பேயன்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின் கடுமையன்று. அங்ஙனமிருப்பினும், காண்போர்க்கு வெயில் காய்ந்து கொன்றது போலத் தோற்றும். அஃதேபோல் அன்பில்லாத உயிர் அறக்கடவுளின்முன் தன்னியல்பாற் சென்று அழிகின்றது. அஃது அழிதற்குக் காரணம், அன்பகத்தில்லாத அவ்வுயிரினியல்பே யன்றி, எங்கும் ஒருதன்மையனை அறக் கடவுளின் கொடுமையன்று. எனினும், காண்போர்க்கு அறக்கடவுள் காய்ந்து கொல்லுதல்போல், தோற்றும். காய்ந்தொறுத்தல் என்பது வெயிலுக்கு இயல்பாயமைந்ததோர் பண்பு போல, அறக்கடவுளுக்கும் இயல்பாயமைந்ததோர் பண்பாகும். அதுபற்றியன்றோ, ''அல்லவை செய்தார்க் கறங்கூற்றம்'' என்றது நான்மணிக்கடிகை. சிலப்பதிகாரத்தும் இவ்வுண்மை பேசப்பட்டுள்ளது. அல்லவை செய்த தென்னவனை அறக்கடவுள் கூற்றாய் நின்று கொன்றனனன்றோ! கூற்றுவன் நேர் நின்று கொல்ல வேண்டுமென்பதின்று. இஃது நிதம் உலகில் காண்பதோர் உண்மையுமன்றோ? எனவே, அன்பில்லாத உயிர் அறக்கடவுள் முன் தானே அழியுமென்பது பெற்றும்.

இனி அன்பாவது-தொடர்புடையார்கண் காதல் உடையனாதல். தொல்காப்பிய, உரையில், 'அன்பாவது-மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின் கண்ணும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்து நிற்கும் நேயம்' என்று உரைக்கப்பட்டுள்ளது. இவ்வாற்றால், அன்புடைமையாவது பந்துக்களிடத்தில் நேயமுடையனாதல் என்பது தெளிவு. நேர் தம்பியாகிய சுக்கிரீவன்மாட்டு நேயமிலனாதலின் வாலி, அன்பகத்தில்லா உயிரினன் என்பது வெளிப்படை. அவ்வியல்பால் அறக்கடவுளின்முன் தன்னியல்பால் கெட்டொழிந்தான். 'அறக்கடவுளின் முன்' என்றது, 'அறக்கடவுளே நேரே வரவேண்டுமென்பதின்று. அறக்கடவுள் தன் செம்மை சேர் நாமம் பொறித்து விடுத்த சரத்தின் அழிந்தாலும், அக்கடவுள்முன் அழிந்த மாதிரிதான். அழிந்து போதற்குச் சூரியன்முன் என்பிலதாகிய புழு வரவேண்டுமென்ற நியதியின்று; கிரணமொன்றுக்கு முன்வந்து ஆற்றாது தன்னியல்பால் அழிந்தாலும் அச்சூரியன்முன் அழிந்த மாதிரிதானே. எனவே, இங்ஙனம் நோக்குங்கால், தன்னகத்து அன்பிலாத் தன்மையால் வாலியினுயிர் அறத்தின் முன் கெட்டொழிதல் திண்ணமென்பதும், அறத்தின் திறனும் அத்தகைய உயிர்களை மடிவித்தலே யென்பதும் தெளிவு.

ஆகவே, மேலோட்டமாக நோக்குவார்க்கு இராமன் வாளியால் வாலி மாண்டது போலத் தோன்றினும், ஆழ்ந்து நோக்கின் வாளி உயிர்கொண்டு போதற்கு ஒரு வியாஜமேயன்றி, வேறில்லையாகும். இதனை, ''ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன் ஆவிபோம் வேலைவாய் அறிவுதந் தருளினாய்'' என்ற வாலி கூற்றாலேயே உய்த்துணரலாம். ''வாளியால் அறிவுதந் தருளினாய்'' என இயைத்துக்காண்க. அஞ்ஞான்று பெறப்படும் பொருள் 'நினது வாளி ஆவியெடுத்துச் செல்லும் வியாஜத்திலே நல்லறிவையும் அடியேனுக்கு ஊட்டியது' என்பதே, கலியனுக்குக் காலாழி ஸ்பரிசம் அறிவு ஊட்டியதுபோலே. இங்ஙன் மேற்கூறிய வாற்றால் கம்பர் பெருமான் வாலிமாய்ந்த வகை அறத்திறனுக்கு மாறுபடா தென்பதைச் சூத்திரமாகச் சூசிப்பித்தார். வாலி மாய்ந்ததைக் கண்கூடாகக் கண்ட சொல்லின் செல்வனும், சுயம்பிரபையிடம் கூறும்போது, ''யாம் ஏதமில் அறத்துறை நிறுத்திய இராமன் தூதர்'' என்றன்றோ கூறுகின்றான். இந்தப் பெருந் தத்துவத்தைக் கம்பர், யாவராலும் தகர்க்க வொண்ணாதபடி வெகு திறமையுடன் நுண்ணிதின் உணருமாறு இந்திரசித்துவதைப் படலத்திற் குறித்துள்ளார்:

''மறைகளே தேறத் தக்க
வேதியர் வணங்கற் பாலான்
இறையவன் இராம னென்னும்
நல்லற மூர்த்தி யென்னிற்
பிறையெயிற் றிவனைக் கோறி
யென்றொரு பிறைவாய் வாளி
நிறையுற வாங்கி விட்டான்
உலகலொம் நிறுத்தி நின்றான்''

ஈண்டு, ''நல்லறமூர்த்தியென்னில்......... இவனைக்கோறி'' என்று வாளிவிட, அப்பகழிப்புத்தேள் சென்று; இந்திரசித்தின் சிரத்தை யறுத்துத் தள்ளிப் பொலிந்தது. இதனால் பெறப்படுவது என்னை? இராமபிரான் நல்லற மூர்த்தி யென்பதன்றோ! இதன் மூலம் கம்பர், 'சூரியன் மரபுந் தொல்லை நல்லறம் துறந்த தென்னா' வாலி நகைவர நாணுட்கொண்டு

ஏசியவை யனைத்தும் தவறு என்பதைப் பெற வைத்திருப்பது ஆயுந்தோறும் தெவிட்டா இன்பம் பயக்கின்றது. திருவாய்மொழி, மூன்றும்பத்து 8-ஆந் திருவாய்மொழி, 2-ஆம் பாட்டில் 'ஞாலம்கொள்வான் குறளாகிய வஞ்சனே!' என்ற இடத்து, 'இவ்வஞ்சகத்தை அனுசந்தித்த பின்பு இராமாவதாரத்தின் செவ்வையிலும் போகிறதில்லை; தன்பெருமை அறியாமற் செய்த இடமிறே இராமாவதாரம்; தன் பெருமை அழிய மாறின இடமிறே இது' என்ற ஈடு குறிக்கொள்ளத் தக்கது.

இப்படி மேற்கூறியவாற்ருல், இராமன் அறக்கடவுளே யாவானென்பதும், அவன் புவியிடை அறத்திறன் அழியச் செய்யான் என்பதும் வெள்ளிடை விலங்கல்.

'அறத்திறன் அழியச் செய்யான்
அறநிலை நிறுத்த வந்தோன்
திறத்தினைத் தமிழ்ம றையால்
திரிபறத் தெளிய வைத்தான்.
மறத்திறன் மிகவுங் கொண்டு
மதிமருண் டுழல்வ தென்னே?
நிறத்தகு புலவன் கம்பன்
நிறைமொழிப் புரைமை யோர்ந்தே.

மதிப்புரை

காயசித்தி அல்லது சாகாக்கலை: சித்தர்களுள் தலைசிறந்தவராகிய திருமூலர் பெருமான் இயற்றியருளிய திருமந்திரம் என்னும் செந்தமிழ்ப் பெருநூலின் சிறப்பினைச் சைவத் தமிழ் உலகம் நன்கறியும். அதன்கண், எத்தனையோ பல யோக ஞான அநுபவக் கருத்துக்கள், இலைமறை காய்போல நிறைந்துகிடக்கின்றன. அந்நூல் ஓதற்கு எளிதாய் இருப்பினும், உணர்தற்கு மிகவும் அரியதொன்ருக விளங்கி வருகின்றது. "அருட்கண் இலாதார்க்கு அரும்பொருள்கள் தோன்ரு" என்றபடி, ஆழ்ந்த அறிவும் அநுபவமும் அருட்பேறும் வாய்ந்தவர்களுக்கே அன்றி, ஏனையோர்க்கு அந்நூற்பொருள் எளிதின் விளங்குவதன்று.

இத்தகைய அரும்பெருஞ் சிறப்புமிக்க, யோக ஞான அநுபவ விளக்க நூல் ஆகிய திருமந்திரத்தின்கண், 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பெரிதும் ஈடுபட்டு, ஆழ்ந்து ஆராய்ந்து கற்றுணர்ந்து, பழுத்த விழுத்தவச் செம்மலாராகவும், சிறந்த சிவானுபூதிச் செல்வராகவும் விளங்கும் திருவாரூர்ச் சைவப் பெருஞ் சான்ரேர், சிவயோகி திரு. மா. இரத்தினசபாபதி பிள்ளை அவர்கள், இந்நூலை 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் முறையில், உலக மக்களின் உய்தி கருதி ஆராய்ந்து எழுதி உதவியிருக்கின்ருர்கள். 'சாகாக்கலை' 'மரணமிலாப் பெருவாழ்வு' என்று அருட்டிரு வடலூர் இராமலிங்க அடிகளும், திருமந்திரத்தில், 'காயசித்திஉபாயம்' என்னும் தலைப்பில் திருமூலர் பெருமானும், விளக்கியருளிய கருத்துக்களை, இதன்கண் மிகவும் சிறப்பாகவும் தெளிவாகவும் எளிய இனிய அழகிய நடையில், இந்நூலாசிரியர் அவர்கள் விளக்குகின்ருர்கள்.

எண்ணற்ற பல திருமந்திரப் பாடல்களின் நுண்ணிய கருத்துக்கள், இதன்கண் மிகச் சிறப்பாகவும் தெளிவாகவும் அழகுற விளக்கப்பட்டிருக்கின்றன. இதன்கண், தேவாரம் திருவாசகம் திருக்குறள் திருவுந்தியார் தத்துவப்பிரகாசம் சிவானந்தலகரி தேவிகாலோத்திரம் முதலிய அருள் நூல்களில் இருந்து அரிய பல மேற்கோள்கள் திரட்டித் தரப்பெற்றுள்ளன. தாயுமானவர் ஔவைப்பிராட்டியார், சிவவாக்கியர், பதினெண் சித்தர்கள் ஆகியோர் பாடல்களின் நுண் பொருட் கருத்துக்களும், இடை இடையே இனிது எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. ஆசிரியரின் யோக ஞான அநுபவ முதிர்ச்சியும், நுண்மாண் நுழைபுலமும் இந்நூலில்எழிலுற்றுப் பொலிகின்றன. சமய நெறிப்பற்றும், ஞான நன்னெறியில் ஒழுகும் விருப்பமும் உடைய அன்பர்கள் அனைவருக்கும், இந்நூல் சிறந்ததொரு ஞானச் செல்வப் புதையல் என்பது திண்ணம்.

திருமந்திரம் என்னும் சிறந்த ஞானப் பெரு நூலை ஓதித் தெளிந்து பயன்பெற விழையும் அன்பர்கள் அனைவருக்கும், இந்நூல் ஓர் அரிய இன்றியமையாத அடிப்படைப் பயிற்சி நூலாக அமைந்து விளங்குகின்றது. சுருங்கக்கூறின், 'இஃது ஒரு சிறந்த—பயன்மிக்க—நல்ல—சமயஞான—விளக்க நூல் எனலாம். சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாசத்தினர், தமது 63—ஆம் ஆண்டு விழாவில், இந்நூலைப் பெரிதும் ஏற்றுப் போற்றி வெளியிட்டுள்ளனர். திருத்தமான அழகிய சிறந்த பதிப்பு. 82 பக்கங்கள் கொண்டது. அடக்க விலை ரூபா ஒன்று. தபாற் செலவு தனி. கிடைக்குமிடம்: 76, செகண்டு மெயின் ரோடு, காந்திநகர், அடையாறு, சென்னை—20.

சீலமார்ந் தொளிரும் செந்தமிழ்ப் பெரியார், சிவயோகி, திருவாரூர்ச் செம்மல்,
சாலவும் சிறந்த தவநலச் சான்ரேர், இரத்தின சபாபதி பிள்ளை,
மூலனர் திருமந் திரநூலின் மொழிந்த காயசித்தி முறையினை விளக்கி,
ஏலநன் கினிதே இயற்றிய இந்நூல், இணையிலாப் பெருஞ்சிறப் புடைத்தாம்!

—ஈ. ஏ. முருகவேள்.

திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு

க. ரா. முருகவேள், M.A., M.O.L.,

முன்னுரை :

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த அரும்பெரும் தெய்வத் தமிழ் நூல்களே, திவ்வியப் பிரபந்தங்கள் எனப் போற்றப்பெற்று வருகின்றன. திவ்வியம் என்பது தெய்வத்தன்மை. மிகவும் சிறந்த தலங்களைத் திவ்விய தேசம் என்றும், மிகவும் சிறந்தவர்களாகிய நித்திய சூரிகளைத் திவ்விய சூரிகள் என்றும் வழங்குதல் காணலாம். அம்முறையில் மிகவும் சிறந்த 'தெய்வத்தன்மை வாய்ந்த நூல்கள்' 'தெய்வத் திருவருளை விளக்கும் நூல்கள்' என்னும் கருத்தில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களைத் திவ்வியப் பிரபந்தங்கள் என வழங்குகின்றோம்.

உலகத்தில், குறிப்பாகத் தமிழ் மொழியில், பிரபந்தங்கள் எனப் பொதுவாக வழங்கப் பெறும் நூல்கள் பல உண்டு. அவற்றைத் தமிழ் இலக்கண நூலார் 96 வகைகளாகப் பிரித்துக் கூறுவர். அவைகள் பெரும்பாலும் உலகியற் பொருள்களையே பற்றிக் கூறும் சாதாரணப் பனுவல்கள். இவைகளோ உயர்வற உயர்நலம் நடைய தெய்வத்தினைப் பற்றி விளங்குபவை. ஆதலின் பிற சாதாரண நூல்களினின்று பிரித்து, இவைகளின் சிறப்பை யுணர்த்தி விளக்கும் முறையில், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பெரியோர்கள் 'திவ்வியப் பிரபந்தங்கள்' என்னும் சிறந்த பெயரால் சிறப்பித்து, விசேடித்து வழங்கி வருகின்றனர்கள். இவைகள் ஏறத்தாழ 4000 பாடல்களைக் கொண்டிருத்தலின், 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' எனவும் வழங்கும்.

ஆழ்வார்கள் :

பகவானுடைய சொருப ரூப குண விபூதிகளை, ஆழ்வார்கள் பரபக்தி பரஞானம் பரமபக்தி என்பனவற்றால் நன்கு ஈடுபட்டு அநுபவித்து மகிழ்ந்தார்கள். பரபக்தியாவது இறைவனின் தொடர்பில் இன்பமும், பிரிவில் துன்பமும் அடையும் நிலை. பரஞானம் என்பது இறைவனைத் தெளிவாக நேரே கண்டு அநுபவித்து அறிதல். பரமபக்தியாவது இறைவனை நினைப்பளவிற் பிரிய நேர்ந்தாலும் தாங்க முடியாமல் உயிர் இழக்கும் எல்லையற்ற பேரன்பு. இத்தகைய பரபக்தி பரஞானம் பரம பக்திகளால், இறைவனின் இயல்பு-திருமேனி யழகு-உயரிய பண்பு நலங்கள் ஆகிய மேன்மைகளில் உள்ளம் துவக்குண்டு ஆழங்காற்பட்டு, ஆழ்ந்து திளைத்து அநுபவித்து மகிழ்ந்த பெருமக்களே ஆழ்வார்கள் எனச் சிறப்பித்துப் புகழப் பெறுவர். தாம்பெற்றுத் திளைத்த இறையருள் இன்ப அநுபவம், தம் உள்ளத்தின் உள்ளே அடங்காமல், எல்லையின்றிப் பொங்கி வழிந்து புறப்பட்ட நிலையில், ஆழ்வார்கள் அருளிச் செய்த தமிழ் வேதங்களே, திவ்வியப் பிரபந்தங்கள் எனப் போற்றப் பெறுகின்றன.

வண்டுகள் மலர்களில் தேனையுண்டு பிரீதிக்குப் போக்குவிட்டு முயன்றதுவே இசையாய் விழுந்தாற் போல, ஆழ்வார்கள் ஆகிய வண்டுகள், பகவானின் திருவடிகள் ஆகிய மலர்களிலே, பகவத் கிருபை அநுபவம் ஆகிய தேனை உண்டு மாந்தித் திளைத்து, அம் மகிழ்ச்சிக்குப் போக்குவீடாகத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனவே திவ்வியப் பிரபந்

தங்கள் என்னும் ஒப்புயர்வில்லாத நூல்கள் ஆகும்.

திருமாலவன் கவி :

பெரியோர்கள் நூல்களைப் பலவகைகளாகப் பாகுபாடு செய்வர். நூல்களிற் பெரும்பாலானவை சாரமில்லாதனவாக இருப்பது உண்டு. ஒருசில சிறிதளவே சாரமுடையனவாக இருக்கும். அவற்றுள்ளும் ஒருசிலவே மிகுந்த சாரம் உடையனவாகத் திகழும். அவைகளிலும் ஒருசில மட்டுமே, மிகவும் உயர்தரமான சாரம் நிரம்பிப் பெரும்பயன் கொடுப்பனவாய் விளங்கும். இவற்றை முறையே அசாரம்-அல்பசாரம்-அதிசாரம்–சாரதமம் எனப் பெரியோர்கள் வழங்குவர். இவற்றில் 'சாரதமம்' என்னும்படி, உயர்தரமான சாரம் பெரிதும் நிரம்பி, மிகுந்த பயன்களை விளைவிக்கும் நூல்களின் வகையினைச் சேர்ந்தவை, திவ்வியப் பிரபந்தங்கள் என்பது, சான்றோர்கள் அனைவரும் ஆராய்ந்து ஒருமுகமாகக் கண்ட முடிவு.

வேறு பல நூல்களில், எடுத்த பொருளுக்குப் புறம்பான-சாதாரணப் பொருள்களும் கலந்து வரப்பெறும். உதாரணமாக, 'இராமாயண காவியம் செய்கின்றேன்' என்று கூறித் தொடங்கும் வால்மீகி முனிவர், கங்கையின் தோற்றம், காங்கேயன் ஆகிய முருகனின் அவதாரம், புஷ்பக விமான வருணனை முதலிய வேறு பல பொருள்களைப் பற்றியும் இடையிடையே இயம்பிச் செல்கின்றார். 'நாராயணனுடைய கதையினை நவிலுகின்றேன்' என்று தொடங்கும் வியாச முனிவர் பீஷ்மன் முதலாகப் பலருடைய பிறப்பு வளர்ப்புகளைப் பற்றியும், குருக்ஷேத்திர பூமியில் நிகழ்ந்த பயங்கரமான கொடிய பாரதயுத்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறிக்கொண்டு போகின்றார். இங்ஙனமெல்லாம் இல்லாமல் "திருமாலவன் கவி" என்ற வாயோலைப் படியே, முற்றிலும் நூற்றுக்கு நூறு பகவானுடைய திருவருட் செய்திகளையே கூறிச் செல்லுகின்றன திவ்வியப் பிரபந்தங்கள். இதனை, "இராமாயணம்-நாராயண கதை என்று தொடங்கி, கங்கா காங்கேய சம்பவாதி அசக்கீர்த்தனம் பண்ணின எச்சில்வாய் சுத்தி பண்ணுமல், திருமாலவன் கவி என்ற வாயோலையின் படியே, மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு உரிய சொல் வாய்த்த இது, வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள் போல அருளிச் செயலில் சாரம்" எனவரும் 'ஆசாரிய இருதயம்' முதலிய நூல்களின் சூக்திகள் கொண்டு தெளிவுற அறியலாம்.

திவ்வியப் பிரபந்தங்கள் வேதங்களுக்குச் சமமான சிறப்புடையவையாகும். நம்மாழ்வார் அருளிச் செய்த, திருவிருத்தம் (இருக்கு வேதம்), திருவாசிரியம் (எசுர்வேதம்), பெரிய திருவந்தாதி (அசர்வண வேதம்), திருவாய்மொழி (சாமவேதம்), என்று பெரியோர்கள் போற்றியுள்ளனர். இதனை,

> "இயற்பா மூன்றும் வேதத்ரயம் போல ;
> பண்ணார் பாடல் (திருவாய்மொழி)
> இசைகொள் வேதம் (சாமம்) போலே"

என அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அழகுற அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்.

மாறன் மறைக்கு ஆறங்கம் :

வேதங்கள் நான்கிற்கும், சார்பாக அங்கங்கள் உண்டு. அவைகள் ஆறு எனக் கூறப்படும். நம்மாழ்வார் பாடிய தமிழ் வேதங்கள் நான்கிற்கும், சார்பாக ஆறு அங்கங்கள் உண்டு. அவைகள் திருமங்கையாழ்வாரால் அருளிச் செய்யப் பெற்றுள்ளன. பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், எனத் திருமங்கையாழ்வார் அருளிய ஆறு பிரபந்தங்களும், வேதங்களுக்குரிய சிட்சை வியாகரணம் நிருக்தம் சந்தஸ் கல்பம் சோதிடம் என்பன போல, நம்மாழ்வார் தமிழில் அருளிய நான்கு வேதங்களுக்கும் உரிய ஆறு அங்கங்கள் ஆகும்.

> "மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன்
> ஆறங்கம் கூற அவதரித்தான்"

எனவரும் உபதேச ரத்தினமாலைச் செய்யுளும், இங்கு நாம் உணரத் தக்கது.

எண்மர் நன்மாலைகள் :

வேதங்களுக்கு உபவேதங்கள் என்றும், உபாங்கங்கள் என்றும் சில உண்டு. புராணம் நியாயம் மீமாம்ஸை ஸ்மிருதி என்பன உபாங்கங்கள். ஆயுள் வேதம் வில்வேதம் காந்தருவ வேதம், அர்த்தசாஸ்திரம் என்பன உபவேதங்கள். இவைகளை யெல்லாம் சேர்த்து "அஷ்டாதச (18) வித்தைகள்" என்று அறிஞர்கள் வழங்குவர். இம்முறையில் நம்மாழ்வார் அருளிய தமிழ் வேதங்களுக்கும், உபவேதங்களும் உபாங்கங்களும் உண்டு. "வேத சதுஷ்டய அங்க உபாங்கங்கள் பதினலும் போல, இந்நூலுக்கும் இருந்தமிழ்நூற் புலவர் (திருமங்கை மன்னன்) பநுவல் ஆறும், மற்றை எண்மர் நன்மாலைகளும்" என இக்கருத்தினை 'ஆசார்ய இருதயம்' அமைவுற விளக்கியிருத்தல் காணலாம். இதன்படி ஏனைய ௮ ஆழ்வார்களும் அருளிச் செய்த நூல்கள், உபவேதங்களும் உபாங்கங்களும் ஆகும். அவைகள் வருமாறு :

1.	பொய்கையார்	—முதல் திருவந்தாதி
2.	பூதத்தார்	—இரண்டாம் திருவந்தாதி
3.	பேயார்	—மூன்றாம் திருவந்தாதி
4.	திருமழிசையார்	—நான்காம் திருவந்தாதி
5.	குலசேகரர்	—பெருமாள் திருமொழி
6.	பெரியாழ்வார்	—பெரியாழ்வார் திருமொழி, திருப்பல்லாண்டு
7.	தொண்டரடிப் பொடியாழ்வார்	—திருமாலை, திருப்பள்ளி எழுச்சி
8.	திருப்பாணாழ்வார்	—அமலனாதிபிரான்.

உபப்பிருமணங்கள் :

வேதங்களுக்கு 'உபப்பிருமணம்' எனச் சில நூல்கள் உண்டு. 'உபப்பிருமணம்' என்பது வேதப் பொருளையே விவரித்துக் கூறும் நூல். அம்முறையில், பின்வரும் அருளிச் செயல்களைக் கொள்ளலாம். (1). மதுரகவிகள்-கண்ணிநுண் சிறுத்தாம்பு. (2). ஸ்ரீஆண்டாள்-திருப்பாவை, நாச்சியார் திருமொழி. (3). திருவரங்கத்தமுதனார்-இராமாநுச நூற்றந்தாதி:

மதுரகவிகள் பாடியருளிய 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்பது நம்மாழ்வார் மேற் பாடப் பெற்றது. ஆசார்ய பக்தியின் அருமைப் பாட்டினை விளக்கியருள்வது. ஸ்ரீ ஆண்டாள் பாடியருளிய பிரபந்தங்களோ "வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" எனப் புகழ்ந்து பாராட்டப் பெற்றவை. திருவரங்கத்தமுதனார் இயற்றியருளிய இராமாநுச நூற்றந்தாதியோ, "பிரபந்ந காயத்திரி" எனச் சிறந்தெடுத்து வழங்கப்பெற்று வருவது. இவ்வாற்றால் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகிய ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் வேதங்களோடு ஒத்த சிறப்பும் பெருமையும் உடையனவாதல் காணலாம்.

வேதங்களிலும் மேம்பட்டவை :

இனி ஒருவகையில் இவைகளை வேதங்களைக் காட்டிலும் கூடப் பெரியோர்கள் விசேடித்துக் கூறியிருக்கின்றார்கள். வேதங்கள் உரைகாரர்கள் பலரும் கலக்கியது; திவ்வியப் பிரபந்தங்கள் 'நன்ஞானத்துறை படிந்து' என்றபடி தெளிவும் தூய்மையும் மிக்கவை. தக்கார் ஒருசிலரே ஓதத் தக்கனவாகலின் வேதங்கள் மட்குடம் போன்றவை; அனைவருமே ஓதிப் பயன்பெறக் கூடியவை யாதலின் திவ்வியப் பிரபந்தங்கள் பொற்குடம் போன்றவை; உப்புத் தன்மை மிக்குக் குடிக்க இயலாத கடல்நீர் போன்றவை வேதங்கள்; திவ்வியப் பிரபந்தங்களோ யாவரும் பருகுதற்கு எளிய இனிய சிறந்த சாய்கரக நீர் போன்றவை. மேலும் வேதவேதாந்தங்களின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடியாத பொருள் நலங்களையும், நாம் திவ்வியப் பிரபந்தங்களின் மூலம் எளிதில் தெரிந்து கொண்டு பயன்பெறலாம்'' "பாஷ்யகாரர் இதுகொண்டு சூத்ர வாக்யங்களை ஒருங்க விடுவர்'' எனவரும் ஆசார்ய இருதயத் திருமொழியினாலும்,

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தன்
  பொருநல்வரும் குருகேசன் விட்டுசித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
  தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்
  மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
  தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே.

என 'அதிகார சங்கிரக' நூற் செய்யுளில், வேதாந்த தேசிகர் அருளிச் செய்திருத்தல் கொண்டும், இவ்வுண்மை தெளியலாம்.

பண்பாடு வளர்க்கும் பனுவல்கள் :

திவ்வியப் பிரபந்தங்கள் மக்களுயிர்க்கு உறுதிபயக்கின்ற உயர் பொருள்களைக் கூறும் நூல்களுள் தலை சிறந்தவை. இவற்றில் வரும் சொல்லும் பொருளும் குற்றம் அற்றுச் சுவை நிரம்பி "அப்போதைக்கு அப்போது என் ஆராவமுதமே'' என்றபடி, ஓதி ஓதி உணருந்தொறும் புதியபுதிய இன்ப அநுபவங்களைப் பயக்கும் பண்புடையவை. முமுட்சுக்கள் விரும்பும் பொருள்கள் முற்றிலும் இவற்றின்கண் நிரம்பியுள்ளன. எல்லாரினும் மேம்பட்டு விளங்கும் "திருமகள் கேள்வன்'' தான், இப்பிரபந்தங்களின் தலைவன். இப்பிரபந்தங்களின் எல்லையற்ற பெருஞ் சுவையினை முமுட்சுக்களும் முக்தரும் நித்யரும் எம்பெருமானும் இடைவிடாது நுகர்ந்து இன்புறுகின்றனர். பயில்வோர் உள்ளத்தில் இவைகள் பக்தியுணர்வைத் தோற்றுவிக்கின்றன. தோன்றிய பக்தியுணர்வினை மேலும்மேலும் வளர்த்து, நம்மைப் பண்பாடு அடையச் செய்கின்றன.

முடிவுரை :

இயற்பாக்களால் இயன்று, இசைத்திறன் அமைந்து, "அரையர்'' என்பவர்களால் அபிநயித்துக் காட்டவும் பெற்று வருதலின், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க்கும் திவ்வியப் பிரபந்தங்கள் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றன. மாறன் அலங்கார உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளபடி, சித்து-அசித்து-ஈசுவரன் என்னும் முப்பொருளின் இயல்புகளையும் செப்பமுற விளக்குதலாலும், இவைகளை "முத்தமிழ்'' நூல்கள் என்றல் பொருந்தும். எனவே, தமிழ் மக்களாகிய நம்முடைய ஒப்புயர் வற்ற தெய்விகக் கலைச்செல்வங்கள், திவ்வியப் பிரபந்தங்கள் என்றுணர்ந்து, நாம் பெருமிதம் கொண்டு மகிழலாம். தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் இவற்றைப் போற்றிப் பயின்று பயன்கொண்டு உய்வோமாக!

★

ஐந்தெழுத்துப் படிகள்

"சைவத் தமிழ்ச் சான்றோர்"

திரு. ஆ. இராமலிங்கனுர் அவர்கள், எம். ஏ.,

தமிழ்மணம், சென்னை - 30

ஐந்தெழுத்து ஒரு மந்திரம்; நிறைமொழி, மறைமொழி வாழ்க்கையில் ஏற்படற்பால துயரங்களிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்ளப் போகிறேமோ என்று ஏங்கி இளைக்கின்ற நேரங்களிலே, நமக்கு உறுதுணையாக நின்று நம்மைக் காப்பாற்றக் கூடியது ஐந்தெழுத்தே. பெரியோர்கள், ஞானியர்கள், ஐந்தெழுத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, வாழ்வுக் கடலைக் கடந்திருக்கின்ருர்கள்.

மாணிக்கவாசகப் பெருமான், ஐந்தெழுத்தாகிய புணையை, அதாவது படகை உறுதியாகப் பிடித்துக் கொண்டதனுல், இறைவன் தமக்குக் கடக்கலாகாத வாழ்க்கையெனும் பெருங்கடலின் கரையைக் காட்டி ஆட்கொண்டான் என்கிருர்.

"தனியனேன், பெரும் பிறவிப்
பௌவத்து, எவ்வத்
தடந் திரையால் எற்றுண்டு,
பற்று ஒன்று இன்றிக்,
கனியை நேர் துவர்வாயார்
என்னும் காலால்
கலக்குண்டு, காம வான்
சுறவின் வாய்ப்பட்டு,
"இனி என்னே உய்யும் ஆறு!"
என்று என்று எண்ணி,
அஞ்செழுத்தின் புணை பிடித்துக்
கிடக் கின்றேனை,
முனைவனே! முதல் அந்தம்
இல்லா மல்லல்
கரை காட்டி ஆட்கொண்டாய்
மூர்க்க னேற்கே".

இறப்பை வெல்வதற்கு, ஐந்தெழுத்தை நெஞ்சம் நைந்து உருகி நினைக்குமாறு நமக்கு அறிவுறுத்தி, திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய பாடல் நம் நினைவில் என்றும் இருக்க வேண்டியதொன்று;

"துஞ்சலும், துஞ்சல் இலாத போழ்திலும்,
நெஞ்சகம் நைந்து நினைமின், நாள்தொறும்,
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன, அஞ்செ ழுத்துமே"

ஐந்தெழுத்து ஐந்து வகையாக ஓதப்பெறும். ஒவ்வொன்றும் உயிரின் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையைக் குறிக்கும். ஒன்றுக்கு ஒன்று படிப்படியாக உயர்ந்தது. அவற்றின் வரி வடிவம் வருமாறு:

1. நமசிவய,
2. சிவயநம,
3. சிவய,
4. சிவ;
5. சி.

பின் மூன்றில் ஐந்து எழுத்துகள் வெளிப்பட இல்லை. எனினும் அவை ஒவ்வொன்றிலும் மீதி எழுத்துக்கள் உள்ளடங்கியுள்ளன. 'சிவய' வில், 'நம' உள்ளடங்கிவிட்டது. அப்படியே 'சிவ' வில் 'யநம' வும், 'சி' யில் 'வயநம' வும் உள்ளடங்கியிருக்கின்றன. ஐந்தெழுத்தில் ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும்.

'ந'—மறைக்கும் ஆற்றல்.
'ம'—மலம்.
'சி'—சிவம்.
'வ'—அருள்.
'ய'—உயிர்.

ஓதிக்கொண்டே வரும்போது ஐந்தெழுத்தின் வரி வடிவங்களும் ஒலி வடிவங்களும் மறையும். ஆனுல், அவற்றின் பொருள் மாருமல் நிற்கும்.

'நமசிவய' என்று ஓதுவது முதல்படி. இதை ஓதுபவர் பொதுவாக முதல் நிலையில் இருப்பவர். எனினும், எத்துணையோ பிறவிகளில் உழன்று அறியாமை ஓரளவு தேயப்பெற்று, தெய்வ நினைவு வளர்ந்த பின்பே இந்த முதல்நிலை ஐந்தெழுத்தை ஓதும் பேறு பெறுவர். இவ்வைந்தெழுத்து ஓதுவதால் உலக நலங்கள் வாய்க்கும். மறைப்பு ஆற்றலும் மலமும் செறிந்த உலகத்தைக் குறிக்கும் 'நம' வை முன்வைத்து ஓதுவதால் இந்தப் பயன் கிடைக்கும் என்பர்.

'சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியொர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே'

என்று ஓதியதால், அப்பர் பெருமான், கல்லில் கட்டிக் கடலில் இடப்பெற்றும், அக்கல்லே தெப்பமாக மிதக்கக் கரைசேர்ந்தார். இவ்வைந்தெழுத்தை ஓதியதால் நாவுக்கரசர் முதல்நிலையில் இருந்தவர் என்று எண்ணலாகாது. இதை ஓதினல் எவ்வளவு உயரிய நிலையில் இருப்பவருக்கும், எவ்வளவு அரிய உலக நலமும் எளிதில் கைகூடுகிறது என்னும் உண்மையை, இதனுல் அறியலாம். பாண்டி நாட்டின் அமைச்சராக இருந்தபோது, இவ்வைந்தெழுத்தை இடைவிடாமல் ஓதிக்கொண்டே ஆட்சியை இனிது நடத்தியிருக்கவேண்டும் மணிவாசகப் பெருமான். ஏனெனில் எதிர்பாராமல் திருப்பெருந்துறையில் இறைவனுல் ஆட்கொள்ளப்பெற்ற

போது, முதலில், இந்த ஐந்தெழுத்துக்கு 'நமசி, வாய வாழ்க!'' என்று வாழ்த்துக் கூறுகிறார்.

'சிவயநம' என்பது அடுத்த நிலை ஐந்தெழுத்து. சிவத்தைக் குறிக்கும் 'சி' எழுத்தை முன்வைத்து ஓதுவதால் சிவம் சித்திக்கும். சிவத்தினிடமுள்ள பேரின்பம் வாய்க்கும். உலகப் பற்றற்றுப் பண்பட்ட உயிர்கள் சிகாரத்தை முன்கொண்ட ஐந்தெழுத்தையே ஓதும்- அங்ஙனம் ஓதுவதே முறை என்று விளம்பும் 'உண்மை விளக்கம்' முதலிய மெய்யியல் நூல்கள்.

முதல்நிலை ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே போனால், ஓசையளவிலேகூட, இரண்டாம்நிலை ஐந்தெழுத்தாகிய 'சிவயநம' ஓசை இயல்பாக அமைந்து விடுவதை உணரலாம். பொருள் அளவிலேயும் இந்நிலை கைகூட வேண்டும். 'சிவயநம' 'சிவயநம' என்று சொல்லிக்கொண்டே சென்றால், 'நம' தானாகவே ஓசை ஒடுங்கி, 'சிவய' 'சிவய' என்று ஓதுபவர்களாகி விடுவோம். 'சிவய' 'சிவய' என்று ஓதிக்கொண்டே செல்வோமானால், 'ய' எழுத்து ஓசை மங்கிவிடச் 'சிவ' 'சிவ' என்று உச்சரிப்பவர்களாவோம். 'சிவ' 'சிவ' எனச் செப்பிக்கொண்டே போவோமானால், 'வ' ஓசை ஒடுங்க 'சி' 'சி' என்று ஓதுவதில் சென்று நிற்போம். இந்த மாற்றங்கள் இயல்பாகவே, ஓசையளவில் நிகழ்வன.

இம்மாற்றங்கள் பொருள் அளவிலும் நிகழ வேண்டும். அதுவே உண்மையான உயிரின் வளர்ச்சியைக் குறிக்கும். உலகத்தை உறு பொருளாக எண்ணிக் கொண்டுள்ள உயிர், 'உலகம்' பெரிதன்று சிவந்தான் பெரிது, அடையற்பாலது, என்று எண்ண முற்படும் நிலையே, வளர்ந்துவரும் உயிரின் முதல்நிலை. அம்முதல் நிலையில் ஓதுவதே 'நமசிவய' என்னும் முதல்நிலை ஐந்தெழுத்து. 'நம'-உலகம் அன்று, 'சிவய'—சிவந்தான், என்று இவ்வைந்தெழுத்துக்கு இங்குப் பொருள் கொள்வர். இஃது ஒருவகைப்பொருள் கொள்ளும்முறை. முதலில் உலகத்தைக் கண்டு, அஃது உண்மைப் பொருளன்று என்று ஒதுக்கிப், பின்பு உண்மைப் பொருள் சிவந்தான் என்று உணரும் நிலை இந்நிலை.

அடுத்த நிலை 'சிவயநம'. சிவத்தையே முதலில் எங்கும் காணும்போதே. பின்பு உலகமும் இடையில் தோன்ற, அதனைப் பின் தள்ளி ஒதுக்கி 'சிவந்தான் உண்மைப் பொருளாவது, இடையில் நுழைந்து, தாக்கவரும். உலகம் உண்மைப் பொருள் அன்று' என்று உணரும்நிலை இந்த இரண்டாம் நிலை. சிவய-சிவந்தான், நம-உலகம் அன்று.

'சிவயநம' 'சிவயநம' என்று ஓதியுணர்ந்து கொண்டே செல்லும்போது. பின் தள்ளி ஒதுக்கிய 'நம' தானாகவே கழன்று விடுகிறது. மலமாகிய உலகம் தானாகவே உணர்விலிருந்து மறைந்து விடுகிறது. பிறகு நிற்பது 'சிவய' மட்டுந்தான். அங்கும் உலகம் இல்லாமல் இல்லை. ஆனால் ஒடுங்கி நிற்கிறது. எனவே. 'சிவய' வில் 'நம' ஒடுங்கி நிற்கிறது என்பர்.

மலமாகிய உலகம் ஒடுங்கிவிட்ட உணர்வு உயிரின்கண் தோன்றுவதாகும். உலகம் மறைந்துவிட்ட உணர்வு மிகமிக, அதனோடு நெடுங்காலம் இரண்டற ஒன்றியிருந்த உயிரும் தன்னை மறந்து விடுகிறது. உயிர் தன்னையே மறந்த நிலையில், சிவமும் அருளுமே மீதூர்ந்து நிற்கின்ற பொருள்கள் ஆகும். அந்த நிலையினைக் குறிக்கும் ஐந்தெழுத்தே 'சிவ' என்னும் ஐந்தெழுத்தாகும். இதில், உயிரைக் குறிக்கும் 'ய' எழுத்தும், மறைப்பாற்றல் மலம் இவற்றைக் குறிக்கும் 'நம' எழுத்துக்களும் ஒடுங்கி நிற்கின்றன. ஆனால், தோன்றுவது சிவமும் அருளுமே.

உயிரைச் சிவத்துடன் சேர்ப்பிக்கத்துணை புரிந்துவந்த அருளும், நாளாக நாளாக, சிவத்துடன் ஒன்றிவிடும் நிலைவரும். அருளாகிய தாயை மறத்து ஏயுமதே நிட்டை என்றார் பட்டினத்து அடிகளார். அந்நிலையைக் குறிக்கும் ஐந்தெழுத்தே 'சி'யாகும். இதனை நாயோட்டும் மந்திரம் என்பார் பட்டினத்தார். நாயை ஓட்டுவதற்குச் சொல்லும் ஓசையாதலின் அங்ஙனம் சொல்லினர்.

'சி' யாகிய இந்த ஒரெழுத்து வடிவிலுள்ள ஐந்தெழுத்தையும் கடந்த நிலையே அம்பலவாணர் ஆடல்புரியும் பரவெளி நிலை. ஆடலரசின் திருவுருவமே ஐந்தெழுத்தின் திருவுருவம் என்று கூறுவர். அதன் விளக்கம் ஈண்டு விரிக்கின் பெருகும். ஐந்தெழுத்தின் ஐந்து படிகளையும் ஏறி ஐந்தெழுத்தாகிய அம்பலவரை அடைந்தார் மணிவாசகர். மற்றப் பெரியார்களும் அந்நிலையையே எய்தினர். மணிவாசகப் பெருமானும் மற்றவர்களும் அடைந்த அந்நிலையையே இவ்வுலகில் அடியார்கள் அனைவரும் இப்பிறவியிலேயே அடைய வேண்டும்.

தில்லையிலேயே அம்பலவாணர் வீற்றிருக்கும் மேடையை அடைவதற்கு ஐந்து படிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவற்றைப் 'பஞ்சாட்சரப்படி' என்று வடமொழி கலந்து கூறுவதைக் கேட்டிருப்போம். மேலே விளக்கிய வண்ணம், உயிர் ஐந்து நிலைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்து அம்பலவரை அடைவதற்கு உறு துணையாய் நாம் ஓதி உச்சரித்து உணர்வதற்காக நமக்குக் கிடைத்திருப்பனவே இந்த ஐந்துநிலை ஐந்தெழுத்துகளும். இவற்றைக் குறிப்பனவே பருப்பொருளான ஐந்தெழுத்துப் படிகள். இந்நுண்பொருளை யுணர்ந்து எய்தக் கண்முன்னே காட்டிவைத்தனர்.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' ஐந்தெழுத்தினை ஓதவேண்டும். ஓதிஓதி உணரவேண்டும். அம்பலவாணர் அடிக்கமலம் எய்த வேண்டும் 'ஐந்தெழுத்துப்படிகள்' கட்டுரை கருதும் பயன் இதுவே. ★

இலக்கியத்திலும் சிற்பத்திலும் அணிகள்

திரு. கணபதி ஸ்தபதி அவர்கள்,

(கண்காணிப்பாளர், அரசினர் சிற்பக்கலைப் பயிற்சி நிலையம், மாமல்லபுரம்.)

தமிழ் நாட்டுப் பெண்மணிகளுக்கு அணிகள் மீதுள்ள நீங்காத பற்று யாவரும் அறிந்ததே. தலையை வாரிக் கொண்டையாகவும், பின்னலாகவும் பல்வேறு கோலங்களிலும் அலங்கரித்துக் கொள்வதுடன் அதில் அழகு மிக்க அணிகளைப் பூட்டி அழகு பார்ப்பதில் தனியின்பம் காண்போர் தமிழ்ப் பெண்டிர். கழுத்திலும், காதிலும், மார்பிலும், தோளிலும், கையிலும், விரல்களிலும், இடுப்பிலும், தொடையிலும், காலிலும், தாளிலும் இடத்திற்கேற்ற அணிகளையும் பொன்னாலும், வெள்ளியினாலும், இரத்தினங்கள் பதித்த பிற அணிகளாலும் தங்களை அலங்கரித்துக் கொள்கின்றனர்.

பண்டையத் தமிழ் நாட்டில் தமிழ் மக்கள் விரும்பி அணிந்த அணிகளில் சிறப்பானவற்றை மாதவியென்ற நாட்டிய மகள் அணிந்திருந்ததாகக் கூறி அணிகளின் பெயர்களையும், அணியப்பட்ட இடங்களையும் இளங்கோ வடிகள் தமது வரலாற்றுக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் விரிவாக எடுத்துரைக்கின்றார். அணிகளுக்கு இடப்பட்ட பெயர்கள் மிக அழகிய பெயர்கள். மக்கள் அணிந்த அணிகளைச் சிற்பிகள் தெய்வீக வடிவங்களிலும் பிற சிற்பங்களிலும் செதுக்கி வைத்து இன்று எல்லா அணிகளையும் நாம் கண்டறியும் வண்ணம் செய்திருக்கிறார்கள்.

தலையில் அணியும் ஆபரணங்களில் 'தொய்யகம்', புல்லகம், பூரப்பாளை, வலம்புரிச் சங்கு' ஆகியவை முக்கியமானவை: பெண்களின் நேர் வகிடின் மீது படிந்து நெற்றியின் விளிம்பிலிருந்து அரசிலை வடிவமாகவும் நடுவில் சிகப்பு மணி பதிக்கப்பட்டு அதன் விளிம்பில் சித்திர வேலைப் பாடுகளோடும்கூடிய தொங்கலுக்குத் 'தொய்யகம்' என்று பெயர். இதனை தெய்வஉத்தி என்றும், சீதேவி என்றும் கூறுவர். அத் தொய்யகம் தலை உச்சியோடு ஒரு தொடரால் இணைக்கப்பட்டிருக்கும் இவ்வணி பூரானின் உடல் தோற்றத்தை ஒத்திருப்பதால் இதனைப் பூரப்பாளை என்றும் தலையிலணிவதால் தலைப்பாளை என்றும் கூறுவர். தென்னம்பாளையைப் போல் கொத்தாக இது அமைவதால் பாளை என்ற சொல் சேர்ந்தாளப்படுவதைக் காண்க. இப்பூரப்பாளை உச்சந் தலையில் அணியப் பட்டிருக்கும் வலம்புரிச்சங்கு என்ற அணியோடு இணைக்கப் பட்டிருக்கும். தலையின் இரு பக்கங்களில் பூச்சுட்டி போன்ற இரு அணிகள் சூடப்படுகின்றன. இவற்றைத் தென் பல்லி, வட பல்லி என்று கூறுவர். இவை இரண்டிற்கும் பொதுப் பெயர் புல்லகம். (தலையோடு) புல்லைப் போல் ஒட்டிக் கொண்டிருப்பதால் புல்லகம் என்ற. பெயரைப் பெறுகிறது. 'சூளாமணி' என்ற ஒரு அணியும் ஒரு வகைத் தலை அணி ஆகும். இது வட்ட வடிவமானது. இரத்தினங்கள் பதிக்கப்பட்டது. அதன் நடுவிலிருந்து பூரப்பாளை வடிவில் ஒரு தொங்கல் அசைந்தாடும் தன்மையுடையதாய் அமைக்கப் பட்டிருக்கும். இத்தொங்கல் இன்றியும் அமைக்கப்படுவதுண்டு. இதுவே சூளாமணி எனப்படும்.

காதுகளில் பனை ஓலையைச் சுருட்டி, தொங்கிய தொள்ளைக்காதில் அணி பெற அமைத்து அழகு பார்ப்பது பண்டைத் தமிழர் வழக்கம். மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கிராமப் பெண்களிடம் இன்றளவும் இதனைக் காணலாம். இது குதம்பை என்று சொல்லப்படுகிறது. இதன் நடுவில் நீலத்தாமரை செருகி வைக்கப்படுமானால் அது நீலக் குதம்பை என்று சொல்லப்படும். மதுரை நாயக்கர் சிற்பங்களில் இதனை மிகுதியாகக் காணலாம்.

கழுத்திலே சவடி, சரப்பளி, முத்தாரம் ஆகிய அணிகள் அணியப் படுகின்றன. இவ்வாபரணங்களைச் சுற்றி மார்பிலும், உடலிலும் ஒரு மூலையிலிருந்து எதிர் மூலைக்குக் குறுக்கே செல்லும் சங்கிலிக்கு வீரச் சங்கிலி என்று பெயர். இதனைச் சங்கிலி என்றும் சொல்வதுண்டு. மணிகள் கோர்த்து மேற்கையின் நடுவிடத்தில் '+' போன்று அணியப்படும் ஆபரணம் தோள்வளை என்று சொல்லப்படும். இதனை மூன்று வளையங்களோடு கூடியதாகவும் ஒரு நுனியில் இலைகளும், பூக்களும் நிறைந்த சித்திர வேலைப்பாடுடன் கூடிய அணியையும் மேற்கையில் அணிவதுண்டு. இதனையும் தோள்வளையென்று சிற்பிகள்

சொல்கிறார்கள். முழங்கையைச் சுற்றி வளைய மாக அணியப்படும் அணிக்குக் கடகம் என்று பெயர். கடயம் என்றும் சொல்வதுண்டு.

மணிக்கட்டுக்கு அருகில் அணியப்படும் வளையல்கள் ஐந்து வகைப்படும். அவை முறையே சூடகம், செம்பொற்கைவளை, பரியகம், வால்வளை, பவழவளை ஆகும். சூடகம் என்பது பலவித சித்திர வேலைப்பாடுகள் அமைந்ததும், வைரம் பதித்ததும் பிற மணிகள் அழகுற அமைந்ததும் ஆன ஒரு சிறப்பான கைவளை ஆகும். பரியகம் என்பது, முத்துக்கள் கோர்த்த கைவளை ஆகும். வால்வளை என்பது,

வெள்ளி அல்லது சங்கினால் செய்யப்பட்ட வளையாகும். பவழப் பல்வளை என்பது பவளக் கொடியை வளையாகக் கொள்வதாகும். அல்குல் தடத்தை மறைத்து மேகலை என்ற ஆபரணம் அணியப்படுகிறது. இதனை விரிசிகை என்றும் கூறுவர். இது முப்பத்திரண்டு வடத்தினால் செய்யப்பட்டு பல முத்துக்கள் கோர்க்கப்பட்டு முத்து வடம் என்றும் முத்தரை என்றும் அழைக்கப்படுகிறது. இதற்குக் கீழே தொடையில் பல தொங்கல்கள் கவான் வடிவத்தில் அணியப்படுகின்றது. இதற்கு குறங்குச் செறி என்று பெயர். கால் நளகைக்கு அருகில் இரண்டு, மூன்று ஐந்து அடுக்குகள் கொண்ட தண்டைகளின் சேர்க்கைப் போல் தோற்ற மளிக்கும் ஆபரணத்திற்குப் பாடகம் என்று பெயர். காலில் அணியும் சிலம்பிற்கு நூபுரம் என்று பெயர். பரியகம் என்பது கால் அணிகளில் காற்சவடியாகும். பாத சாலத்திற்கு அரியகம் என்று பெயர். இவற்றோடு சதங்கை என்ற ஆபரணமும் பாதத்தில் அணியப்படுகிறது.

கை விரல்களில் பலவகை மோதிரங்கள் அணியப்படுகின்றன. அவற்றில் வாய்பிளந்த வாளை மீன் போன்ற அமைப்புடைய மோதிரம் சிறப்பாகக் கூறப்படுகிறது. இதனை வாளைப் பகுவாய் மோதிரம் என்றும் முடக்கு மோதிரம் என்றும் அழைப்பர். இன்று நெளி மோதிரம் என்பதும் இதுவேயாகும்.

இனி சிற்பத்துறையில் கையாளும் அணிகளையும் அதனதன் பெயர்களையும் பார்ப்போம். மானசாரம் என்ற சிற்ப நூலில் தலை அணிகளைப்பற்றி மிக விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. தலை அணியை மகுடம் என்றும், மௌலி என்றும் குறிப்பிட்டு, எட்டு வகையான தலை அலங்காரத்தைக் குறிப்பிடுகிறது. அவை தெய்வீக வடிவங்களுக்கும் அரசர்களுக்கும், அரசிகளுக்கும் ஏற்றவையென்று சுட்டிக்காட்டுகிறது. எட்டு வகையான தலை அணிகள் முறையே 'ஜடாமகுடம், கிரீட மகுடம், கரண்ட மகுடம், சிரஸ்த்ரகம், குந்தளம், கேசபந்தம், தம்மில்லம், அளக சூடம்' ஆகும்.

நமது சிற்ப வடிவங்களில் ஜடா மகுடத்தைப் பல்வேறு வகையான அமைப்புக்களில் காணலாம். அதேபோல் கிரீட மகுடம், கரண்ட மகுடம் கேசபந்தம் ஆகியவை பலப்பல அமைப்பில் காட்டப்பட்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக சடையை மகுடமாகக் கட்டாமல் விரிந்த பாவனையில் விரிசடையாகவும், மண்டலித்த பாவனையில் ஜடா மண்டலமாகவும், தொங்கிய பாவனையில் ஜடா பாரமாகவும் காணலாம். கிரீட மகுடத்தில் இரத்தினக் கிரீடமென்றும், சர இரத்தினக் கிரீடமென்றும் இருவகைக் கிரீடங்களைச் சிற்பங்களில் காணலாம். கேசபந்தம் என்ற தலைக் கோலம் கவர்ச்சியான தோற்றங்களில் வாரிய கேசத்தோடும் சுருண்ட கேசத்தோடும் அமைக்கப்படுகின்றன.

சிரஸ்த்ரகம் என்பது நீர்க்குமிழிகள் போல் முடியில் அமைக்கப்பட்டிருக்கும் கொண்டையாகும். புத்தரின் தலையலங்காரத்தை இவ்வகை மகுடத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். குந்தளம் என்பது கொண்டை என்ற தலைக்கோலமே. இது நேரியதாகவும் பக்கவாட்டில் சரிந்ததாகவும், பின்புறத்தில் தூக்கிக் கட்டியதாகவும் அமையும். தம்மில்லம் என்பது கொடிபோன்று முறுக்கிக் கட்டப்பட்ட கொண்டையாகும். சீதையின் சிற்ப வடிவத்தில் இத்தகைய தலைக்கோலத்தைக் காணலாம். தமிழகப் பெண்களின் அள்ளிமுடித்த கொண்டையே இது. தமிழகப் பாணியானதால் தமிழும், தம்மில்லமாக ஆகி இருக்கக்கூடும். நெற்றியை ஒட்டிச்சுருண்டு திரண்ட கேச அமைப்பிற்கு அளக சூடம் என்று பெயர். வண்டுகளின் வடிவில் இவை அமைவதால் இதனைப் பிரமரகம் என்றும் சிற்பிகள் கூறுவர்.

நெற்றியின் மேல் விளிம்பில் மூன்று விதமான பட்டங்களைச் சிற்ப வடிவங்களில் அமைத்துக் காட்டுவதுண்டு. அவை முறையே பத்திர பட்டம், இரத்தினபட்டம், புஷ்பப் பட்டம் என்று சொல்லப்படும். பூச்சித்திர வேலைப்பாடுகள் நிறைந்து காணப்படுவது பத்ர பட்டம் என்றும், இரத்தினங்கள் பதித்த தொங்கல்களும் முத்துச் சரங்களோடு கூடியதுமான பட்டத்தை இரத்தினபட்டம் என்றும், புஷ்பமாலையைப் பட்டமாகக் கட்டுவதனால் புஷ்பப்பட்டம் என்றும் சொல்லப்படுகின்றன.

மகுடங்களின் தோற்றத்தை மிகை படக் காட்டும் சிறப்பான அணி ஒன்றுண்டு. அதனைப் 'பூரிமம்' என்று சிற்பிகளும், சிற்ப நூல்களும் கூறும். இது அரசிலை போன்ற தோற்றமுடையது. அடிப்பகுதியில் இரு மகரங்கள் இதனை அணி செய்யும். இதன் மேற்பகுதியில் நீண்ட வட்டவடிவில் அடுக்கடுக்காகக் கருக்குவேலைப் பாடுகள் அமையப் பெற்று, நடுவில் சிகப்பு

அல்லது பச்சை அல்லது நீலம் பதிக்கப்பட்டிருக்கும். தலைப்பகுதியில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மலர்ந்த பூக்கள் அணிபெற ஏற்றத்தாழ்வோடும், அரசிலை வடிவத்தில் அமையுமாறும் வரிசையாகத் தைக்கப்பட்டிருக்கும். இடையிடையே முத்துச்சரங்கள் தொங்கும். இதனையே 'பூரிமம்' என்று சிற்பிகள் கூறுவர். மகுடத்தின் நான்கு புறத்திலும் உச்சந்தலையை ஒட்டிச் சுற்றிலும் அமைக்கப்படும். மகர குண்டலம், பத்ர குண்டலம் என்பவை சிற்பப் படிமங்களின் காதுகளில் அணியும் சிறப்பான அணிகளாகும். இவற்றைச் சிற்பிகள் பலவகையான தோற்றங்களில் கவர்ச்சிகரமாக அமைத்துச் சிற்பவடிவத்தின் முகத்தோற்றத்தைச் சிறக்கச் செய்கிறார்கள். இதை விடுத்து சிம்ம குண்டலம், வியாழ குண்டலம், விருத்த குண்டலம் ஆகியவை சிவனது காதுகளில் அணியப்படும் அணிகளாகும். தாடங்கம் என்ற தோடு பெண் வடிவங்களின் காதணிகளில் ஒன்றாகும்.

முகத்திற்கு அழகு ஊட்டுவன கண்களும், மூக்கும், உதடுகளும் ஆகும். இவற்றில், முன்னிரண்டும் மிக முக்கியமானவையென்று சிற்ப இலக்கணம் வலியுறுத்தும். நீண்டகண்களும், எடுப்பானமூக்கும் அழகியவை என்பதுகருத்து. மூக்கிலே அணிபூட்டுவது இயற்கைப் பெண் வடிவத்தில் அழகு தருவதாயினும் அது இல்லாதிருப்பது அதைக் காட்டிலும் அழகு தரும் என்பது சிற்பியர் கருத்து. எனவே சிற்பங்களில் தனித்து அணிகளைப் பெரும்பாலும் மூக்கில் அமைப்பதில்லை. மூக்குத்தி அணிவது தமிழக மரபில்லை என்ற கருத்தும் ஒன்றுண்டு.

கழுத்தில் அணியும் அணிகளில் உபக்கிரிவம், ஆரம், இருதயமாலை ஆகியவை முக்கியமானவை. கழுத்துக்கு அருகிலிருந்து இரு பக்கங்களிலும் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட இரு மாலைகள் அணியப்படுகின்றன. இவற்றை 'ஸ்கந்தமாலை' என்று கூறுவர். மார்பின் இரு பக்கங்களிலும் விரிந்து கழுத்தின் பின்புறமாகவும், மார்பிலிருந்து நடு உடலில் சந்தித்து மீண்டும் பக்கங்களில் விரைந்து முதுகின் நடுவிடத்தில் ஒன்று சேர்த்துக் கட்டப்படும் அணியைச் சன்னவீரம் என்று சிற்பிகள் கூறுவர். மேலும் இடது தோள்புறமிருந்து வலது இடுப்பு வழியாக உடலின் குறுக்கே மூன்று பிரிவுகள் உடைய நூலை 'யக்ஞ சூத்திர' மென்று சொல்கிறோம். பூணூலின் பிரம்ம முடிச்சிலிருந்து இடது பக்கத்தில் பிரிந்து வயிறருகில் சென்று நீண்டு கிடக்கும் சூத்திரம் ஒன்றுண்டு. இதனை விஷ்ணுப்படிமங்களிலும் விநாயகர் படிமங்களிலும் காணலாம். இதனை உரஸ் சூத்திர மென்று சிற்பிகளும், லம்பயக்ஞோபவீதம் என்று ஆகமிகளும் கூறுவர். இருதயத்திற்குக் கீழே நாபிக்கு மேலே வயிற்றைச் சுற்றியவாறு அலங்காரமாக அணியும் அணி உதரபந்தம் எனக்கூறப்படும். மேற்கையில் நடுவிடத்தில் கேயூரமென்ற அணியும், முழங்கைக்கு அணித்தே கடக வளையம் என்ற அணியும் மணிக்கட்டுக்கு அருகில் கைவளைகளும், விரல்களில் மோதிரங்களும் அணியப்படுகின்றன. நாபிக்குக் கீழே இரத்தினங்கள் பதித்ததும், முத்துக்கள் நிறைந்ததும் கருக்கு வேலைப்பாடுகள் பொருந்தியதும் ஆன முகப்புகளையுடைய கடிசூத்திரங்களைச் சிற்ப வடிவங்களில் காணலாம். முகப்பு அலங்காரத்தில் கற்பனை நிறைந்ததும் சிம்ம முகத்தைப் பெருமளவில் ஒத்திருப்பதும் ஆன ஒரு வகையான முகப்பு இக்கடி சூத்திரத்தோடு இணைக்கப்படும். இதனைக் 'கீர்த்தி முகமென்றும், கிருத்திமானனம்' என்றும் சிற்பிகள் கூறுவர். இவற்றிற்குக் கீழே பூச்சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த பட்டைகள் அணியப்படும். இவற்றையொட்டி முத்துமாலைகள் பலவித அமைப்புகளில் தொடையை ஒட்டித் தொங்கும். இவை ஊருதாமம் என்று சொல்லப்படும். கெண்டைக்காலின் அடியிலே கணுவுக்கு மேலே தண்டை போன்ற அமைப்புடையதும், இரண்டு மூன்று அல்லது ஐந்து அடுக்குகளோடு கூடியதும் இடைவெளியின்றி ஒன்றோடொன்று சேர்ந்ததாக அமைந்த அணி அவ்விடத்தை அலங்கரிக்கிறது. இது புஜங்க கடகம் என்று சொல்லப்படும்.

இலக்கியத்தில் கூறிய அணிகள் சிற்பத் துறையில் வேற்றுப்பெயர்களுடன் வருகின்றன என்பதை அறிஞர் யூகித்தறிவர்.

சென்னை-600 008.
148705
JL
Q2 M21, N59TC
N73.15.4



தங்க கவசம், வைரக் கிரீடம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மாதிரி அம்மனுடன் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. பி டி. ராஜன், அறங்காவலர் குழுத் தலைவர் திரு. எல். நாராயணன் செட்டியார், நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தீனதயாளு, திருப்பணிக் குழு உறுப்பினர் திரு. ச. முத்துசாமி செட்டியார். முதலிய பெருமக்கள் பலர் உள்ளனர்.





திருமயிலை மாதவப் பெருமாள் கோயிலில் வசந்த கல்யாண மண்டபக் கால்கோள் விழாவை, நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் தொடங்கிவைத்தல். (26 : 11 : 72)

சென்னை திருமயிலை மாதவப் பெருமாள் கோயில் வசந்த கல்யாண மண்டபக் கால்கோள் விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் உரை நிகழ்த்துதல். (26 : 11 : 72)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34, Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor. N.R. Murugavell, M.A., M.O.L.